Vol. IV.] October, 1911 [No. 4

157




பொருளடக்கம்


| | |
|---|---|
| கொடை | 145 |
| விக்கிரஹாராதனம் : ஆக்ஷேப சமாதானங்கள் | 146 |
| பண்டித ராஜ ஜகந்நாதகவி | 151 |
| ஆத்திசூடி விளக்கம் | 154 |
| இராஜாங்கமுறை : பிரதமக்கொள்கைகள் : நன்றியறிதல் | 159 |
| முத்து | 162 |
| யானைகள் | 166 |
| நியாயமாலை | 168 |
| சக்தித்தத்துவ போதினி : ஒளி | 170 |
| சூரியக் கிரகணம் | 172 |
| உபநிஷத் ரத்தினமாலை | 174 |
| குசன் கதை | 175 |
| வஸந்த மாளிகை | 177 |
| நாகாநந்தம் | 180 |
| மாணவர் பக்கங்கள் : வியால விதானம் புதிய விஷயங்கள் : கம்பியில்லாத் தந்தி | 181 |
| சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்குமான பக்கங்கள் : உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி | 183 |
| விசேஷக் குறிப்புகள் | 188 |


[காபிரைட்]




இப்பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது.

# THE "VIVEKA BODHINI"

**An Illustrated Popular Tamil Monthly : Has a large list of able contributors**

MAINLY DEVOTED TO

**Science, Philosophy, Morality, Literature and Art,**

**History, Biography and Fiction, Agriculture, Industry, Commerce and Economics.**

THE ONLY JOURNAL OF ITS KIND IN INDIA.

Accuracy and originality form its speciality : Articles penned by the best of intellects

**Vol. IV** **OCTOBER 1911** **No. 4**

## PRINCIPAL CONTENTS

| | PAGES |
|---|---|
| Gift ... ... ... ... ... ... ... | ... 145 |
| Image-Worship. Objection and Answers ... ... ... | ... 146 |
| Life of Panditha Jagannatha Kavi: by M.R.Ry. S. Mahalinga Aiyer Avl, B.A. | ... 151 |
| Moral sayings explained ... ... ... ... ... | ... 154 |
| Civics : Elementary Principles : Faithfulness by M. R. Ry. C. S. Sundaram Aiyar Avl, B. A. L. T., of the Teachers' College, Saidapet ... ... | ... 159 |
| Pearl : by M. R. Ry. M. Gopalakrishna Aiyer Avl, Tamil Pandit. The Madura College, Madura ... ... ... ... ... ... | ... 162 |
| Elephants : by M. R. Ry. P. R. Venkatesalu Naidu Avl, ... ... | ... 166 |
| Popular Maxims Explained... ... ... ... ... | ... 168 |
| Physics Primer : Light: by M. R. Ry. A. S. Kasturiranga Aiyer Avl., B.A.L.T., | ... 170 |
| The Solar Eclipse ... ... ... ... ... | ... 172 |
| Summary of the Minor Upanishads ... ... ... ... | ... 174 |
| Life of Kucha : by Sri Krishnakumari ... ... ... ... | ... 175 |
| Vasanthamalikai : by M. R. Ry., R. S. Narayanasami Aiyar Avl., B.A., B.L.,... | ... 177 |
| Naganantham : A Classical Drama by M. R. Ry., V. Seshagiri Sastriar Avl. B.A., | ... 180 |
| Students, Pages : Expository Essays: Wireless Telegraphy ... ... | ... 181 |
| Children and Ladies' Pages : True greatness or Vasudeva Sastry ... | ... 183 |
| News & Notes ... ... ... ... ... ... ... | ... 188 |

All literary contributions, books &c., for review, should be addressed to the Editor, and all communications and remittances to the Manager, the "Viveka Bodhini," Mylapore, Madras.



160

“விவேகபோதினி” அனுபந்தம்



161


# விவேக போதினி

" எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருதுஸ்ரீ புரட்டாசிமீ : 1911-ஸ்ரீ அக்டோபர்மீ { பகுதி 4


## கொடை

### GIFT

கொடை என்பதைத் தர்மம் என்ற கூறுவர் வடமொழியோர். தர்மம் என்னும் சொல் எப்பொழுதும் தானம் என்பதோடு சேர்த்தே வழங்கிவருவது. ஆதலால் தானம் தர்மம் என்ற தொடருக்குக் கொடுத்தல் என்ற பொருளே ஏற்பட்டுவிட்டது. ஆயினும் இவைகளுள் அர்த்தபேதம் உண்டு. வர்ண ஆசிரமங்களுக்கு ஏற்ப ஒருவன்செய்யக்கடமைப்பட்டதொழில்களுக்குத் தருமம் என்றபெயர். வர்ண ஆசிரமபேதங்களோடு ஸம்பந்தப்படாது எல்லோரும் தம்மாலியன்றமட்டும் பிறருக்குச் செய்யவேண்டிய நன்மைக்குப் பொதுவாகத் தானம் என்று பெயர். ஜாதி வருணாசிரம தருமங்கள் அநேகமாக இருப்பினும், பொதுவாக எல்லோரையும் தான விஷயத்தில் இருபாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தானம் செய்வோர் பெரியோர் என்றும், செய்யாதவர் இழிகுலத்தோர் என்றும் சொல்லப்படுவார்கள். ஆதலால் தானம் என்று சொல்லப்பட்ட கொடை என்பது மிகச் சிறந்த குணம்.

கொடையில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல உள. சினமின்மை, பாத்திரமறிந்துகொடுத்தல், கருவமின்றிக்கொடுத்தல், இயன்றமட்டும் கொடுத்தல், கேட்போர் நோக்கமறிந்து கொடுத்தல் ஆகிய இவைகளே. கொடை பொதுவாக வாங்குபவனை இஹலோகத்திலும், கொடுப்பவனை இஹபரமிரண்டினிலும் மேன்மைப்படுத்தும். ஆதலால்தான் ஏற்பதிகழ்ச்சி என்றும், தானம் விரும்பு என்றும் கூறப்பட்டுள்ளது. ஆதலால் கொடுப்பவன் தன்மனம் முழுவதும் சுத்தமாகும் விஷயமாக முக்கியமாகக்கவனிக்கவேண்டியவை, சினமின்மை, கர்வமின்மை, இயன்றளவு கொடுத்தல் ஆகிய இவைகளே, கேட்பவர்கள் நன்மைக்காக அவன் மற்றை விஷயங்களையும் இரண்டாவதாகக் கவனிக்க வேண்டியது. முற்கூறிய மூன்றில் ஏதாவது குறை ஏற்பட்டால் கொடையால் கொடுப்பவனுக்கும், பின்னுள்ளவைகளில் குறைவு ஏற்பட்டால் வாங்குபவனுக்கும் பலன் குறைந்துபோகும்.

கொடையைப் பொதுவாக ஒருவன் நேரிடவே செய்யவேண்டும். அப்பொழுதுதான் அதிலிருந்து ஏற்படக்கூடிய மனச்சிறப்பு முழுவதும் உண்டாகும். ஆனால் இக்காலத்தில் பெரிய கொடைகளை ஸரிவரச் செய்து ஈடேறத் தமக்குக் காலம், ஊக்கம், அறிவு முதலியன போவாதென்று தனிகர்கள் தர்மகர்த்தர்கள் ஏற்படுத்தி அவர் வசம் பணத்தை ஒப்புவித்துவிட்டுத்தாம் கவலையற்றுப் பொதுநன்மைக்குக் கொடுத்துவிட்டோம் என்று இறுமாந்து இருப்பது வழக்கம். இவர்களுக்குக் கொடையால் ஏற்படக்கூடிய சிறப்பு முற்றிலும் ஏற்படாது. பொருள் ஏராளமாக இருப்பினும் அதை நேரிடக்கொடுக்குங் காலத்தில் உண்டாகும் கஷ்டநிஷ்டூரங்களில் அடிபட்டுத் தேர்ந்து மனம் பரிசுத்த மாகவேண்டியதே ஒழிய, கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டு சும்மாவிருந்தால் பரிசுத்தமாகிவிட்டது என்று வேண்டுமோகில் எண்ணிக்கொண்டிருக்கலாம். பொருள் ஏராளமாகவிருந்து தம்மால் மாத்திரம் அதை நிர்வஹிக்க முடியாது, ஒருவேளை மனம் மாறித் தருமத்திற்கு என்று விட்டபொருளை மறுபடி தன் வசப்படுத்திக்கொள்ளும்படி வந்துவிடும், என்ற பயம் உள்ளவர்கள் அதைத்தருமகர்த்தர்களிடம்ஒப்புவித்துத்தருபொருளுக்குத் தாமும் ஒரு முக்கிய தருமகர்த்தராக இருந்து அதை நடத்தவேண்டியது அவசியம். இவ்வாறுகலந்து வேலை செய்யாவிடில் தனிகர்களுக்கு வரும் பலனும், உபயோகப்படும் பணத்திற்கு வரும் பலனும் ஒன்றே.

ஆதலால் பொருளுடையவன் கூடியவரையில் நேரிடக்கொடுக்கவேண்டுமே ஒழிய பிறர் மூலமாக இதைச் செய்வது மேன்மையன்று.

விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது௵ புரட்டாசிமீ [பகுதி 4

# விக்கிரஹாராதனம்

## ஆக்ஷேப ஸமாதானங்கள்

## IMAGE-WORSHIP— OBJECTION AND ANSWERS

முன்னர் எடுத்து ஸ்தாபிக்கப்பட்ட விக்கிரஹாராதனம் அறியாமையாலும், வீண் துவேஷத்தாலும் வெகுவாக எல்லோராலும் பழிக்கப்பட்ட விஷயம். இதன் அருமையைக் கனவிலும் கண்டறியாத புறமதத்தார் பழிப்பது ஆச்சரியமன்று. நமது மதத்திலிருப்பவர்களில் சிலபெரியோர்கள் விக்கிரஹாராதனையைவிலக்கிக் கூறிய மொழிகளின் உட்கருத்தை உணராது,புறமதத்தவர்களோடு சேர்ந்து, குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பைப்போலத் தாம் கண்ட நியாயத்தை அவர்களுக்குக் காட்டி, நம்மவருள் விஷயம் தெரியாத பலரை மாறான வழிகளில் செலுத்தி வருத்துகின்றனர். நமது மதங்களில் விக்கிரஹாராதனத்தைப் பற்றிக் காணப்படும் பழிப்பு மொழிகளின் உட்கருத்து இன்ன என்பதை முன் ஸஞ்சிகையில் நன்கு விவரித்து, அவைகளை எடுத்தாள விக்கிரஹாராதன துவேஷிகள் யோக்கியர்களல்லர் என்பதை வற்புறுத்தினோம். இங்கு விக்கிரஹாராதனை விஷயமாகச் சிறப்பாக ஏற்படும் ஆக்ஷேபனைகளை எடுத்து ஆண்டு அவைகளுக்குத் தகுந்த ஸமாதானங்கள் கூறப் புகுவோம்.

(1) எங்கும் நிறைகின்ற அகண்டப்பொருளின் அனுபவம், கண்ட வஸ்துவாகிய விக்கிரஹத்தை ஆராதிப்பதால் எவ்வாறு ஏற்படும் என்ற கேள்வி புறப்படும். பரம்பொருள் அகண்டம் என்பது வேதங்கள் துணிபே. அதன் ஸ்வரூபம் இன்னது என்பதைக் கூறமுடியாது, வேதங்கள் தத்தளித்து, அந்த அனுபவம் வந்தாலன்றி விளங்காது; அதைப்பற்றி வர்ணிக்கமுடியாது ; 'கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை' என்று முறையிடுகின்றன. ஆனால் இந்த அனுபவத்தைப் பெறும் வழிகளை வேதங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சுத்தமனதில் இவ்வனுபவம் தோன்றும்,ஹிருதயக்கிரந்திகள்(பிடிப்புகள்) சிதறிப் போனால் மனிதன் அமரனாவன் என்னும் வாக்கியங்களால், இவ்வழிகளின் ஸ்வரூபத்தை வேதங்கள் விளக்குகின்றன. ஆதலால் இவ்வனுபவம் ஒருவிதமானப் பயிற்சியின் இறுதியில் தானே வந்து சேருவதென்றாயிற்று. அது வரையில் அது இத்தன்மையது என்று விளங்காது. அது இத்தன்மையது என்று அனுபவம் வந்தோர் கூறும் மொழிகளை நாம் நம்பவேண்டியதுதான். இவ்வனுபவம் வந்தவர்கள் எல்லோரும் விக்கிரஹாராதன (அல்லது ப்ரீதிகாரன)த்தைக் கைப்பற்றியே மேன்மை அடைந்திருக்கின்றனர். அவர்களுக்கு இக்கண்ட வஸ்து ஆராதனம் எவ்வாறு அகண்டானுபவம் தந்ததோ, அவ்வாறே மனதாரச் செய்யும் நமக்கும் இது ஏன் பரமபதம் அளிக்காது ? மேலும் எங்கும் நிறைகின்ற அகண்ட வஸ்து விக்கிரஹத்திலும் ஆராதிப்பவனுள்ளும் இல்லை என்று கூறிவிடலாமா ? ஆகவே விக்கிரஹத்துள்ளும் பக்தனுள்ளும் பரவிக்கிடக்கும் பரம்பொருள், இந்த ரஹஸ்யத்தை மறவாது ஆராதிக்கும் பக்தன் மனதைச் சஞ்சலம் நீங்கிக் குவியச் செய்து, பின்னர் விரிந்து அகண்டாகார அனுபவம் ஸித்திக்கும்படி செய்கிறது என்பதற்கு என்ன ஸந்தேஹம் ?

(2) இந்தக்கண்ட வஸ்துவாகிய விக்கிரஹங்கள்

எவ்வாறு அகண்ட வஸ்துவைக்குறிக்கும்?என்ற கேள்வியை எடுத்துக்கொள்ளுவோம். பரம்பொருள் விஷயமாக வேதங்களில் காணப்படும் விஷயங்களை ஆராதிப்பவர்களுக்கு ஞாபகம் மூட்ட வேண்டும் என்னும் கருத்தைக்கொண்டே நமது முன்னோர்கள் விக்கிரஹங்களை யானைமுகத்துடனும், தாண்டவமாடும் ரூபத்துடனும் சேஷசாயிரூபத்துடனும் இன்னும் அநேக விசித்திர ரூபங்களுடனும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவைகளின் உட்கருத்தைப்பின்னர்விஸ்தாரமாக எடுத்தீ விவரிப்போம். கணித சாஸ்திரத்தில் எண்கள் ஒவ்வொன்றிற்கு 0, 1, 2...9 முதலிய குறிகளிட்டு, எண்ணிக்கைக்கடங்கா ஸங்கியைக்கும் ✠ என்ற குறியிட்டு நாம் வியவஹரித்து, அரிய பெரிய விஷயங்களை எடுத்தாண்டு புதிய விஷயங்களைக் கண்டுபிடித்து வரவர விருத்தியடையவில்லையா? இவைகளால் கணித சாஸ்திரத்திற்கு ஏதாவது தடை ஏற்பட்டதுண்டா? இக்குறிகளின் அர்த்தத்தைக் கவனித்து நாம் மேலே கடினமான கணக்குகள் போடுவதுபோல விக்ரஹங்களின் உட்கருத்தை மனதில் பதித்துக்கொண்டு மனம் இவ்வாராதனையால் விஷயப்பற்று நீங்கி ஏகாக்கிரப்பட்டுக்கொண்டு வருகையில், அதை மேன்மைப்படுத்த முயலவேண்டும். இம்மாதிரி செய்துகொண்டு வந்தால் விக்கிரஹாராதனத்தால் பரம்பொருள் சிறப்பு ஒருநாளும் நமது மனதை விட்டகலாது. ஸித்தி அடைந்த பின்னரும் விக்கிரஹாராதனத்தைப் பழிக்கும் துர் குணம் நம்மை அணுகாது.

(3) கோயிலில் விக்ரஹங்களை ஏற்படுத்துவதால் அவ்விடம் தவிரக் கடவுள் வேறிடத்திலில்லை, என்ற நம்பிக்கை ஜனங்கள் மனதில் ஏற்படாதா? என்ற ஆக்ஷேபனையை எடுத்துக் கொள்ளுவோம். விக்கிரஹ ஆராதனையை முன்னர் கூறியபடி செய்து வருபவர்களுக்கு இம்மாதிரியான எண்ணம் ஒருகாலும் ஏற்படாது. ஸாதாரண ஜனங்களுக்கு ஒருவேளை இவ்வாறு ஏற்படலாம். அதனால் யாதொரு கெடுதியும் வாராது. கோயிலுள் வரும்பொழுதாவது தினம் சுத்தமாயும், மனதில் வேறு எண்ணத்தைப் புகவொட்டாது தடுக்க முயன்றுகொண்டும் வரட்டுமே! அது போதும். தினம் ஒருமுறை சிறு காலமாவது ஒழுங்காக முயன்று வந்தால், காலக்கிரமத்தில் இந்த நற்பழக்கம் திடப்பட, அதற்குள் கடவுள் எங்குமிருக்கிறார் என்ற விஷயத்தைப் புராணாதிகளில்இருந்து உணர்ந்து, அவர்கள் மேன்மை அடைய இடம் உண்டாகும். கோயில் விக்கிரஹங்களிலாவது கடவுள் இருக்கிறார், அவர் ஸம்பந்தமான கற்பூரம், விபூதி பிரஸாதம் முதலியவைகள் தெய்விகமானவைகள் என்ற மூட நம்பிக்கை இருப்பது ஸாதாரண ஜனங்களுக்கு ஒரு பேருதவியே ஒழிய வேறில்லை. இவர்களுக்கு நடத்தை மாறும் காலத்தாவதும், பொய்யுரைக்க வேண்டும் என்று மனம் சஞ்சலமாயிருக்குங்காலத்தாவதும்,இவைகளைக் கண்டுவிட்டால் மனம் தடுமாறி அதன் நல்ல பழக்கம் வெளிவந்து கெட்ட எண்ணத்தைத் தடுக்கும் திறனை அடைந்து வரவர அது திடப்படும். இத்தகையவர்களுக்கு இந்த நம்பிக்கையும் இல்லாவிடில், கடவுள் எங்கும் இருக்கிறார் என்ற விஷயம் விளங்காமையால் ஓயாது அவர்கள் தடையின்றிக் கெட்டவழியில் நடக்கும்படி நேரிடும். அவர்கள் ஈடேறக் கதியே இல்லாமல் போய்விடும். இம்மூட நம்பிக்கையும் மேல் நிலைக்குப் போகுங்கால் முற்றிலும் மாறப்போகிறதில்லை. மேன்மை அடைந்த காலத்து விக்கிரஹத்தில் மாத்திரம் கடவுள் இருக்கின்றார், என்ற எண்ணம் ஒருவாறு சீர்திருத்தப்பட்டுக் கடவுள் எங்கும் இருக்கிறார் என்ற எண்ணம் ஏற்படுமே ஒழிய, கடவுள் விக்கிரஹத்தில் இல்லவே இல்லை என்ற எண்ணம் உண்டாகவே மாட்டாது. ஆதலால் ஜனங்களுக்கு முதலில் விக்கிரஹத்தில்தான் கடவுளிருக்கிறார் என்ற எண்ணத்தைக் கொடுத்து, அவர்களை வரவரச் சீர்திருத்தும் திறன் விக்கிரஹாராதனத்திற்கு இருப்பதே அதன் சிறப்பையும், அத

பெரியோர்களுக்கு உள்ளபடி உதவுவதுபோலச் சிறியோர்களுக்கும் உதவி புரிவது என்பதையும் வெளியாக்கும். ஆகவேஇதனால் விக்கிரஹாராதனத்திற்கு யாதொரு இழிவும் இல்லை.

(4) பக்தி உண்டாக விக்கிரஹம் அவசியமா? இந்த ஆராதனத்தால் மனத்தூய்மை ஏற்படுமா? என்ற கேள்விகளை எடுத்துக்கொள்ளுவோம். நமது இந்திரியங்களுக்கு வெளியே நோக்கும் திறன்தான் எப்பொழுதுமிருக்கிறது. சற்று யோசனை செய்தால் ஒருவேளை வெளித்தோற்ற ஸம்பந்தமான சில உள்விஷயங்களை உணரும் அநுமான சக்தி ஏற்படலாம். இதில் நம்மில் பெரும்பாலரும் அதிகமாகப் பழகியிரார்கள். விஷயத்தாக்குதலின்றி உள் விஷயங்களை உணரும் பழக்கம் நமக்கு ஒருவருக்கும் இல்லை என்றே கூறலாம். ஆதலால் வெளி உருவ ஸம்பந்தம் இருந்தால் அந்த வஸ்துவின் மேல் நமக்கு ஒருவிதமான பற்று ஏற்படும். நமது உறவினர்கள் நம்மை அடிக்கடி வந்து பார்த்துக்கொண்டிருந்தால்தான், அவர்கள் விஷயத்தில் ஒருவித அபிமானம் நமக்கு இருக்கும். நெடுநாளாகி விட்டால், அவர்களைப்பற்றிய விஷயங்கள் மறந்து போவதும் அல்லாமல் அவர்களே இன்னார் என்ற ஞாபகங்கூட மாறிவிடும். நமக்கு வேண்டியவர்களிறந்து விட்டால் பிணம் எடுத்துப்போகும் வரையில் துக்கம் அதிகமாயும், பின்னர் அது வரவரக் குறைந்துகொண்டும் வரவில்லையா? அழகிய வஸ்துக்களைக் கண்டவுடன் மனம் நம்மை அறியாது அவைகளை நோக்கிப் பாயவில்லையா? ஆதலால் ரூபத்தின் சக்தி மிக அதிகம். அது மனத்தைக் கவர்ந்துவிடும். அன்பை நிலைக்கும்படி செய்யும். இதுபற்றித்தானே நாம் ஸதா ஞாபகம் வைத்துக்கொள்ள விரும்புபவர்களின் படத்தை நாம் நம்முன் வைத்துக்கொள்ளுகிறோம். நமது பிரியவஸ்துக்கள் உருவம் நீங்கிவிட்டால் வரவர அவைகள் ஞாபகம் மழுங்கிக்கொண்டே வரும். ஆதலால் ரூபம் இருந்தால் அதன்மேலுள்ள பற்று மாறாதிருக்கும். நாம் பார்த்துப் பழகிவந்த வஸ்துக்கள் விஷயமே இவ்வாறாக, நாம் கண்டறியாது நம்முன்னோர் வாக்கில் நம்பி உணரவேண்டிய கடவுள்விஷயம் உருவமில்லாதிருப்பின் எவ்வாறு நமது மனதைக் கவரும். பக்தி உண்டாக உருவத்தியானம் அவசியம். இது பற்றியே ஔவையாரும் 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றாள். நம்மூர் திருடர்கள் கொடியவர்களுள்கூட மேனாட்டுக்கொடியவர்களைவிட ஒருவிதத்தில் சிறந்தவர்கள். இவர்க்ள் தாம் கொடுந்தொழில்செய்யப்புகும் முன் கணபதி முதலிய விக்கிரஹங்களைத் தொழுதுவிட்டுத்தான் தொடங்குவது வழக்கம். நாளடைவில்'நமது கொடுமைக்கு ஆளாகும் மனிதர்கள்கூட இவ்வாறு கடவுளைத் தொழுவார்களே. கடவுள் யாருக்கு உதவி புரிவார்?' என்ற எண்ணங்கள் தோன்றி இவர்கள் கெட்ட தொழிலினின்று நீங்க முயலுவார்கள். ஆகவே விக்கிரஹாராதனை மனத்தூய்மைக்கு முக்கிய காரணம் என்பது வெளியாகும். இது பற்றியே அமெரிக்கர்களை நோக்கி ஒரு அவஸரத்தில் "பெண்மணிகள் காலில் விழுந்து 'நீதான் என் ஆருயிர், கண்மணி!' என்று ஆராதனம் செய்வதைவிட, பெரியோர்கள் ஆராதித்து மேன்மை அடைந்த விக்கிரஹங்கள் முன்அங்கம் நிலம் தோய விழுவதே மேல். நான் அவ்வாறு 1000 தரம் செய்தாலும் செய்வேனே ஒழிய ஒரு ஸ்திரீ முன்னர் வணங்கத் துணியேன்" என்று விவேகானந்தஸ்வாமிகள் வற்புறுத்தியிருக்கிறார்.

(5) விக்கிரஹாராதனத்தைப்பழிக்கும் மதாந்தரத்தவர்களுள் மஹான்களில்லையா? என்ற கேள்வி ஒன்றுண்டு. கடவுளைப்பற்றி எல்லாம் மதங்களும் சற்றேறக்குறைய ஒரேமாதிரிதான் கூறுகின்றன. அவர் குணங்களுள் ஒன்றாகிய ஸர்வபரிபூர்ணத்வத்தை எடுத்துக் கொள்ளுவோம். கடவுள் எங்கும் நிறைந்த பொருள் என்றால் நமக்கு என்ன தோன்றும்? கண்ணை மூடிக்கொண்டால் இதை உணர்த்த பெருங்கடல் பாலைவனம் ஆகாயம் முதலிய நாம் கண்ட வஸ்

துக்களில் பரந்த வஸ்துக்கள் தோற்றமே ஒழிய வேறொன்றும் இல்லை. இவைகள் கடவுளாகுமா? இவைகளும் ஓர்விதக் குறிகள்தானே! ஆதலால் விக்கிரஹப்பாயங்கள்தானே! மேலும் உருவமே வேண்டியதில்லை என்று தியானம் செய்யும், மறுக்கும் கிறிஸ்தவர்கள் மனதில் ஒருவித சூன்யமே காணப்படும். இது கடவுளா? மேலும் அவர்கள் உருவ ஆராதனம் வேண்டியதில்லை என்று கூறியபோதிலும், ஆராதனம் மாதாக்கோயிலில்தான் பண்ணவேண்டும், என்று ஓரிடம் வைத்திருப்பதால் அது விக்கிரஹ ஸ்தானத்திற்கு வந்துவிடும். விக்ரஹாராதனத்தைப்பழிப்பவர்களிடம்காணப்படும்விக்கிரஹாராதனம் மிகக் கெட்டது. அதன் உண்மை உருவம் விளங்காததால் அவர்கள் தம்மையும் பிறரையும் அபாய நெறியில் நடத்திக் கருவம், பரமத கண்டனம் ஆபாஸ ஞானம் முதலிய படுகுழிகளில் வீழ்த்துவார்கள். இவ்வாறு ஸூக்ஷ்மமாயும்,கொடியதாயும் உள்ள விக்கிரஹாராதனம் செய்யும் புறமதத்தவர்களைத் தவிர விக்கிரஹாராதனத்தைப் பழிக்கும் மற்றவர்களது கண்டனத்தைப் பின்வருமாறு ஆராய்ச்சி செய்யலாம். துலுக்கர் நமது மனித உருவான விக்கிரஹங்களைப் பழிக்கின்றனர்; மேக்கா போனால் அங்குள்ள கருங்கல்லைக் கண்டதும் அதை ஆராதிக்கின்றனர். நம்மைப் பழிக்கும் கிறிஸ்தவர்கள் சிலுவையில் அடித்த ஒருமனிதன் உருவத்தைப் பரம்பொருளாக மதிக்கின்றனர். ஆகவே இவர்கள் கூறுவது யாதெனில் 'உங்கள் விக்கிரஹங்கள் தாழ்ந்தவை. எங்கள் விக்கிரஹங்களே சிறந்தவைகள். நீங்கள் செய்வது கேவலம் விக்கிரஹாராதனம்.நாங்கள் செய்வது பரமநிஷ்டை'என்பதே. இது யுக்திக்குப் பொருந்தா வீண்உளறல் என்று நாம் கூறாமலே எல்லோருக்கும்விளங்கும்.

(6) மேனாட்டு பிரகிருதி சாஸ்திரிகள் முற்கூறிய ஆக்ஷேபனையை ஒருவாறு மாற்றிக் கொண்டு வருவார்கள். 'ஒரு விஷயத்தை ஆராய்ச்சி செய்யவேண்டுமாகில் உருவத்தின் ஸஹாயம் எதற்கு? நாங்கள் உருவமற்ற மின்சாரம் வெளி முதலியவைகள் ஸ்வரூபத்தை உணரவில்லையா? ஆதலால் உருவம் அனாவசியம்' என்பர். இது வீண் வார்த்தையே. இது அவர்களது அறியாமையை விளக்குகிறதே ஒழிய வேறில்லை. மின்சாரம் முதலியவைகளின் ஸ்வரூபத்தை அவர்கள் நேரிட ஒன்றும் கண்டறியவில்லை. அவைகள் தமது அரூபநிலை நீங்கி ரூபநிலையாகிய தமது காரியமாகுங்கால், காரியமூலமாக அவைகளின் ஸ்வரூபத்தை இவர்கள் அறிய முயலுகின்றனர். காரியத்தைக்கொண்டு தான் காரணத்தின் ஸ்வரூபத்தை இவர்கள் விளக்குகின்றனர். இதுபோலவேதான் கடவுள் காரியத்தில் ஒன்றாகிய விக்கிரஹத்தின் மூலமாக நாமும் கடவுள் உண்மை நிலைமையை அனுபவிக்க முயலுவதும்.

(7) 'அநேக விக்கிரஹங்கள் எதற்கு? சிறந்த உட்கருத்துக்கள் அமைந்த ஒரு விக்கிரஹம் போதாதா?' என்பது அடுத்த கேள்வி. கடவுளுக்கு அநேக கல்யாணகுணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மனத்திற்கு ஒவ்வொரு குணம் நன்றாகப் பிடிக்கும். அதன்மூலமாகப் பக்தி அவனுக்கு எளிதில் உண்டாகலாம். ஆகவே அவனுக்கு அந்தக் குண ஸம்பந்தமான விக்கிரஹம் ஆராதனைக்கு வேண்டியதாகும். ஆதலால் அநேக விக்கிரஹங்கள் வேண்டியது அவசியம். இம்மாதிரி இருப்பது மனிதர்கள் மனோதர்மத்திற்கேற்ப அவர்களுக்கு உதவி புரிந்து அவர்களை மேன்மைப்படுத்தும் குணத்தையே முக்கியமாகக் கொண்டுள்ள நமது மதத்திற்குப் பொருத்தமாகவே இருக்கிறது.

(8) 'மனிதரூப விக்கிரஹங்களை ஆராதிக்குங்கால் மனித விஷயங்களான குறைகள் முதலியன அதனோடு ஸம்பந்தப்படாமல் போகுமா?' என்ற கடைசிக் கேள்வி பிறக்கும். இதற்குப் பரிஹாரமாக நாமும் ஒரு கேள்வி கேட்கலாம். 'மிகச்சிறந்த புத்தகமாக மதித்து நாம் ராமாயண புத்தகத்தை வணங்குகிறோமல்லவா?

அந்தப் புத்தகத்துள் ராமகதை இருப்பது போல ராவண வைபவமும் இருக்கிறதல்லவா ? ஆகவே நமது நமஸ்காரம் ராவணனுக்கும் போய்ச் சேராதா ?' என்று ஆக்ஷேபித்த குதர்க்கன் போல இருக்கிறான் முன் கேள்வி கேட்பவன். ஈசுவர ஸ்ருஷ்டியுள் மனிதப்பிறவி மிகச்சிறந்தது, பகுத்தறிவுமுதலியன இருத்தலால்,என்பதுஎல்லோரும் அறிந்த விஷயம். இவ்வாராதனத்தில் மனித உருவத்துடன் ஸம்பந்தப்பட்ட மேன்மைகளையே கருதப்படுமல்லாது, குறைகளைக் கருதக் காரணமே இல்லை. ஞானோபதேசம் செய்யும் குருவை ஈசுவரனாக மதிக்கவேண்டும் என்பது சாஸ்திரம். மனஷ்ரூப விக்கிரஹாராதனம், குருவாராதனம் முதலியவைகளுக்கு மிகுந்த ஸஹாயம் ஆகும். ஆனால் கோயில்களில் ஸ்வாமிகளுக்குக் கல்யாணம், பள்ளியறை முதலியவைகள் ஏற்படுத்தி மனித விஷயங்களைக் கொண்டாடி வரவில்லையா ? இது எப்படி ஆராதனையைச் சிறப்புற்றோங்கும்படி செய்யும் என்ற கேள்வி வரும். இவைகள் பொது ஆராதன ஸ்தலங்களாகிய கோயில்களில் பிரபஞ்சஸ்ருஷ்டி விஷயங்களைக் குறிக்க நடத்தப்படும் உட்கருத்துடைய சடங்குகள். இவைகளைக் கேவலம் நமது கல்யாணம் முதலியவைகளைப்போலக் கருதுவது பாபஹேது. அவ்வாறு கருதும் கோயில் குருக்கள் பாமரர்கள், ஸ்திரீ லோலர்களாக விருந்து வருந்துவதை நாம் இப்பொழுதும் காண்கிறோம். குறிப்பறிய மாட்டாதவர்களைத் திருஷ்டாந்தமாக எடுக்கவே கூடாது. கோயிலில் கல்யாணம் முதலியவைகளை ஏற்படுத்திய நம்மவர்கள் கிருஹ பூஜைகளில் அம்மாதிரி வைக்கவே இல்லை. ஆதலால் இவை பொதுக்குறிப்பு விஷயமே ஒழிய ஒவ்வொருவனும் தனித்தனிக் கவனிக்கவேண்டிய விஷயமல்ல என்பதும் வெளியாகும்.

இதுவரையில் குறித்தவைகளிலிருந்து விக்கிரஹாராதனம் இல்லாது பகவத் ஆராதனம்முடியாதென்றும் ; அதுவே வெளியே நோக்கிப் பாய்ந்துகொண்டிருக்கும் மனமுடைய நமக்குத் தகுந்த வழியென்றும், அதை உள்ளபடி உணர்ந்துசெய்தால் நமது மனம்அவைகள் ஸம்பந்தமான கர்மங்களால் சுத்தமாகி, அவைகள் ஸம்பந்தமானத்யானங்களால் ஏகாக்ரப்பட, கடவுளை உள்ளபடி நிர்க்குணமாக அனுபவித்தறியும் நிலையாகிய மோக்ஷம் ஸித்திக்க இடமுண்டாகும் என்றும், இவைகளைஉணராதுமூடபக்தியுடன் வெகுகாலம் வழிபடுபவர்களுக்கு நமது பெரியோர்களது விக்கிரஹாராதனைவிலக்குக்களாகிய புத்திமதிகள் ஸஹாயமாக வந்து சீர்திருத்தும் என்றும் தெரிய வரும். ஆதலால்எவ்விதத்தில் விக்கிரஹாராதனை செய்தபோதிலும் நமக்கு ஒருவிதத் தாழ்வும் ஏற்படாது. நாம் நாளடைவில் சிறப்புற்றோங்குவோம் என்பதற்கு ஸந்தேகமேயில்லை. இது பற்றியே தான்விவேகானந்த ஸ்வாமிகளும்‘விக்கிரஹாராதனையின் சிறப்பால் ராமகிருஷ்ண பரமஹம்ஸரைப்போன்ற மஹான்கள் வெளி வருவாராயின் எத்தனைகோடி விக்கிரஹங்களை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளக் கூடாதா ?' என்றும், ‘ விக்கிரஹாராதனம் பயனற்றது என்று பழித்த எனக்கு உபதேசம் எல்லாம் விக்கிரஹத்தையே கடவுளென அன்புடன் மதித்துப் பரவசரான குருவிடமிருந்தே வந்தது' என்றும் விக்கிரஹாராதனத்தின் சிறப்பை வியந்து கூறியிருக்கிறார்.

---

மோக்ஷத்துக்கு விரோதிகள்.-ஸந்தோஷம்,காமம், மோஹம், ஆகிய இவைகளே மோக்ஷ விரோதிகள். இவைகள் ஒவ்வொன்றும் வேறு இவ்விரண்டு ரூபமாகவும் காணப்படும். ஸந்தோஷம், திருப்தி, ஆனந்தக்களிப்பாகவும் ; காமம், கோபம் துவேஷமாகவும்; மோஹம், சோம்பல் தாமஸமாகவும் காணப்படும். இவைகளுள் எல்லாவற்றையும் எளிதில் அடக்கிவிடலாம். காமத்தை (விஷய இச்சையை) அடக்குவது தான் மிகக்கஷ்டம். இது மனது எவ்வளவு சுத்தமாயும் உருமாறி ஒட்டிக்கொண்டிருக்கும். ஆதலால் எந்தச் சமயத்திலும் ஏமாந்து இதற்குப் புத்திமான் இடம் கொடுத்து விடவேகூடாது.

பாரத வினாவிடை 3-ம் பாகம் அசுவமேத பர்வம்:

# பண்டிதராஜ ஜகந்நாத கவி

## LIFE OF PANDITHA JAGANNATHA KAVI

இவர் நமது தேசத்தில் அவதரித்து விளங்கின ஸம்ஸ்கிருத மகாகவிகளுள் ஒருவர். காளிதாஸர் பவபூதி முதலான மகாகவிகளுடன் ஒருங்கு சேர்த்துச் சொல்லத்தகுந்த அவ்வளவு உயர்தரப் பாவலர். அலங்கார சாஸ்திரத்தில் மகா விற்பன்னர், ஆழ்ந்த ரஸக்ஞர். சமீப காலத்தில், அதாவது இன்றைக்குச் சுமார் 350 வருஷங்களுக்கு முன்தான் வசித்தவராயினும், அவரது கிரந்தங்களெல்லாம், அவர் காலத்தும், பின்னும் வசித்த ஏனையோர்களது காவியங்கள்போல் கடினமாயும், சப்தாலங்காரம் நிறைந்ததாயும், பொருட்பொலிவற்றனவாயுமிராது பிராசீன கவிகளது வாக்குப்போல் பிரஸாதம் மாதுர்யம், முதலிய குணங்களுற்றதாய் இருக்கின்றன. வாக்கினது மிருதுவிலும் பதப்பிணைப்பின் இனிமையிலும் இவரைப் பில்ஹணருக்கும், ஜயதேவருக்கும் சமானமாய்ச் சொல்லலாம்.

“ரஸ கங்காதரம்” என்ற பெயருள்ள, தானியற்றிய அலங்கார சாஸ்திரத்தில், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கேட்ட மாத்திரத்தில் அர்த்தம் விளங்கும் குணமே “பிரஸாத”மாகும் என, விவரிக்குமிடத்து, அக்குணத்துக்குப் பொதுவாய் தானியற்றிய எல்லாச் சுலோகங்களுமே உதாரணமாகும் என்று எழுதியிருக்கிறார். இது முற்றிலும் எற்றுக்கொள்ளத் தக்கதே. ஸம்ஸ்கிருத நடை எழுதுவதிலும், வாதம் செய்யும் சாமர்த்தியத்திலும், சங்கர பகவத் பாதாசாரியருக்குமட்டும் இவரைக் கீழாகச் சொல்லலாம். அவரது வசன நடை வலிமையும் தெளிவு முற்று இலகுவான ஓட்டத்தை யுடையதாயிருக்கிறது. வாதப்ரதிவாதம் பண்ணுவோர்கள் உபயோகிக்கும் அஸ்திர சஸ்திரங்களில் இவர் மகா சமர்த்தர்; சமயம்போல் குறி தப்பாது அவைகளை வெகு சுவாதீனத்தோடு பிரயோகிப்பார். “ரஸ கங்காதர”த்தில் அனேக இடங்களிற் காணப்படும் வித்தியாச அபிப்பிராய கண்டனங்கள் வாசிக்க வாசிக்கத் திகட்டா பொலிவுற்றனவாய் இருக்கின்றன.

ஜகந்நாதரது ஒரு விசேஷ குணமாவது அவர் தற்புகழ்ச்சியில் மகா ப்ரீதியுள்ளவர். வேறு அனேக கவிகள் ஆத்ம ஸ்துத்யமாகச் சில வாக்யங்கள் எழுதியிருக்கிறபோதிலும், இவரைப்போல் தன் பெருமையைத் தானே அவ்வளவு தூக்கிச்சொல்லியவர்கள் கிடையாது. “ரஸகங்காதர”த்தின் ஆரம்ப சுலோகங்களையும் “பாமினி விலாஸம்” என்ற கிரந்தத்தின் முடிவிலுள்ள சுலோகங்களையும் வாசிக்கும்போது, தனது நிறையுறை முற்றுமறிந்துணர்ந்துதான் அவர் எழுதியிருக்கிறாரென்று தெரிகிறது. நமக்கு இது சரிதான், பொருந்தும் என்று அங்கீகரிக்கவும் தோன்றுகிறது. ஆயினும் அவ்வளவு நிரங்குசமான தற்புகழ்ச்சி மிகப் பாராட்டத் தக்கதன்று.

இனி இவரது ஜீவிய சரித்திரத்தைப் பற்றித் தெரிந்தமட்டில் எழுதுவோம். இவர் ஆந்திரதேசத்தில், பிராமண வர்ணத்தில், “தைலங்கர்கள்” என்ற பெயர் பூண்ட ஒரு வம்சத்தில் பிறந்தவர்.

இவரது பிதாவின் பெயர் பேரம்பட்டா என்றும், மாதாவின் பெயர் இலட்சுமி என்றும் அவர் வாக்கினின்றே தெரியவருகிறது. அவர் பிதாவும் வேதாந்த முதலாகிய தரிசனங்களிலும் வியாகரணத்திலும் தேர்ச்சி பெற்றவர். ஜகந்நாதர் தனது தகப்பனாரிடத்திலேயே கல்வி பயின்று அதிசீக்கிரத்தில் தேர்ச்சியுற்றார். பின்பு கர்நாடகதேசத்தரசன், தன்னை ஆதரித்துக் கௌரவப்படுத்தாததால், கீர்த்தியும் செல்வமும் சம்பாதிக்க வெண்ணி வடதேசங்களுக்குப் புறப்பட்டுச் சென்றார். போகும் வழியில் ஜயபுரியில் அனேகம் பண்டிதர்களை வென்று, புதிதாகச் சாஸ்திரப் பாடசாலை ஒன்று அங்கு ஸ்தாபித்துவிட்டு மேலே சென்றார். அக்காலத்தில் டில்லி சமஸ்தானத்தைச் சேர்ந்த, மகம்மதிய மதத்தில்

நிபுணனான ஒரு காஜி, தேசம் முழுதும் சுற்றிச்சென்று, போகுமிடங்களிலுள்ள அறிஞர்களுடனெல்லாம் வாதம் செய்து, இஸ்லாம் மதந்தான் உலகத்தில் உண்மையான மதமென்று ஸ்தாபித்துக்கொண்டு போனான். இவ்விதம் அநேக ஆரியமத ப்ரவீணர்கள் அவனால் தோல்வியுற்றதைக் கேள்வியுற்ற ஜகந்நாதர், ஒருவருஷத்திற்குள் பாரசீக பாஷையை முற்றிலும் பயின்று இஸ்லாம் மதத்துக் கொள்கைகளை, உற்பத்திஸ்தானத்திலேயே கற்றறிந்தபின், காஜியுடன் வாதம் செய்தார். இவரது தீக்ஷண்ய புத்திக்கெதிர்நிற்கமாட்டாது, காஜிமுற்றிலும் தோல்வியுற்றான். இஸ்லாம் மதத்தார்கள், வேண்டுமானால் தங்கள் மதத்தையே பற்றியிருத்தல்மட்டும் தகுதியாகுமென்றும், அன்றி வேறு மதஸ்தர்களை இழுத்துத்தான் சேர்த்துக்கொள்ளும்படியான உயர்குணம் அம்மதத்திலொன்றுமில்லையென்றும், டில்லி சக்கிரவர்த்திக்கே மனதிற்குப்படுமாறு ஜகந்நாதர் நிரூபித்தார். சக்கிரவர்த்தி அவரது அற்புதச் சக்தியைக்கண்டு மகிழ்ந்து, அவரைத் தனது சமஸ்தான வித்வான்களிலொருவராக நியமித்தார்.

இவர் காலத்தில் ஆண்டுவந்த அக்பர் மகாசக்கிரவர்த்திக்கு, ஒரு இராஜபுத்திர மனைவியினால் அதிலாவண்யவதியான “லவங்கி” என்று பெயர் கொண்ட ஒரு புத்திரி இருந்தனளாம். இயற்கையழகும், யௌவனமும் பொருந்திய அப்பெண், தன் தகப்பனதரண்மனையில், ஒப்பற்ற கல்வித்திறமையும், மனோஹரமான சரீர சௌந்தர்யமும் வாய்ந்த ஒரு பண்டிதரிருக்கிறாரென்று கேள்வியுற்று, அவரைப் பார்க்கவேண்டுமென்று பேரவாக்கொண்டனள். அவரைக்கண்ணுறும்படியான ஒரு சமயம் நேரிடவும் தன் வசமிழந்த கமழிந்தவளாய், ‘ஜகந்நாதரை மணந்தால் மணக்கிறது அன்றேல் கன்னிகையாய் இருந்துவிடுகிறது’ என்று தனக்குள் நிச்சயம் செய்துகொண்டாள். ஒருநாள் அக்பரும் ஜகந்நாதரும் சதுரங்கம் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது, சக்கிரவர்த்திக்குத் தாகம் உண்டானமையால் ஜலம் கொணர உத்தரவனுப்பினான். உடனே தீர்த்தச் செம்பைத் தலையில் வைத்துக்கொண்டு அவ்விருவரும் இருக்குமிடத்திற்கு “லவங்கி” வந்தாள். வெகு உற்சாகத்துடனிருந்த அரசனும் அவளை அந்நிலையில் வர்ணிக்கும்படி கவியை வேண்டினான். பண்டிதர் உடனே,

**इयंसुस्तनीमस्तकन्यस्तकुंभा, कुसुंभारुणंचारुचेलंवसाना ।**
**समस्तलोकस्यचेतः प्रवृत्तिं ,गृहित्वाघटेन्यस्ययातीवभाति॥**

என்று சொன்னார். அதாவது, “சிவப்பு வஸ்திரம் தரித்து உச்சியில் தீர்த்தகும்பத்தை வைத்துக்கொண்டிருக்கிற அழகிய தனங்களையுடைய இப்பெண், உலகோர்களது மனதுகள் யாவையும் பிடித்துக் குடத்தில் கொண்டுபோகிறவள்போல் விளங்குகிறாள்.” இந்தச் சாதுர்ய வர்ணனையைக் கேட்டதும் அரசன் மகிழ்ச்சியுற்று, “நீர் கேட்டதை யளிக்கச் சித்தமாயிருக்கிறேன்” என்று பண்டிதரிடம் சொன்னான். கவி சிரேஷ்டரும்,

**नयाजेगजालिंनवावाजिराजिं, नवित्तेषुचित्तंमदीयंकदाचित् ।**
**इयंसुस्तनीमस्तकन्यस्तकुंभा, लवंगीकुरङ्गीदृगङ्गीकरोतु॥**
**यवनीनवनीतकोमलांगी, शायनीयेयदिलभ्यतेकदाचित् ।**
**भावनीतलमेवसाधुमन्ये, नवनीमाघवनीविलासहेतुः॥**

என்று பதிலுரைத்தார். அதாவது “எனக்கு யானைகளும் வேண்டாம், குதிரைகளும் வேண்டாம்; பணத்தில் எனக்கு ஒருநாளும் விருப்பம் கிடையாது. இந்த மான்போன்ற பார்வையையுடைய லவங்கியினது கடாக்ஷ வீக்ஷணம் மட்டும்என்மேல் விழட்டும். இந்த வெண்ணெய்போல் மிருதுவான அங்கங்களையுடையயவ்வனியானவள் என் காதலுக்கிசைவளேல், இப்பூமியே இந்திரனுடைய உத்யானத்தைக்காட்டிலும் அதிக சுகந்தரத் தக்கதென்று கருதுவேன்.” இப்படி எதிர்பாராவண்ணமாகக் கவி வரித்ததைக் கேட்டதும் சக்கிரவர்த்தி தான் முதலில் வாக்குக்கொடுத்ததைப்பற்றி வருத்தமுற்றும், சொன்ன சொல் தவறாதவனாகையால், “நீர் என்னுடன் கூடச் சாப்பிடுவீராகில் நான் உமது விருப்பத்தை

நிறைவேற்றுவேன்" என்று சொன்னான். காமத்தில் ஈடுபட்டவராய் ஜாதிப்பிரஷ்டகரமான அந்த நிபந்தனைக்கும் பண்டிதர் உடன்பட்டார்.

இவ்விதம் ஜகந்நாதர் சக்கிரவர்த்தியினது ஆதரவின் கீழ் இன்பமாக வாழ்ந்துவரும் நாளில், வேறோரரசன், தனது சமஸ்தானத்திற்குவந்தால் அவரைச் சிறப்புடன் ஆதரிப்பதாகச் சொல்லி அவருக்குக் கடிதமொன்றனுப்பினான். அதற்குப் பதிலாக,

**दिल्लीश्वरोजगदीश्वरोवामनोरथान्पुरचितुंसमर्तः।**
**अन्यैर्नृपालैः परिदीयमानं शाकायवास्याल्लवणाययवास्यात्॥**

என்று சொல்லி யனுப்பினார். அதாவது "டில்லிக்கதிபதியோ அல்லது ஜகத்துக்கதிபதியோ தான், எனது மனோபீஷ்டங்களைப் பூர்த்திசெய்ய முடியும். ஏனைய அரசர்கள், கொடுப்பது கறிகாய்க்கோ உப்புக்கோதான் போதும்."

ஜகந்நாதர் கடுமையான தபம் செய்து, தேவியினிடமிருந்து பின்வரும் வரத்தைப் பெற்றாரென்று சொல்லப்படுகிறது.

**आक्रुरुदेशंवित्तरेः माक्रुरुपरवादिनिर्जयेशंकाम् ।**
**स्वीक्रुरुवरमेकंमे व्याक्रुरुभो वत्सशास्त्राणि ॥**

அதாவது "குருதேசம் முழுதும்போவாயாக; எதிரிகளால் அபஜயம் உண்டாகுமோவென்று நீ யோஜிக்க வேண்டாம். இவ்வொரு வரத்தைப் பெற்றுக்கொண்டு நீ சாஸ்திரங்களை விவரிப்பாயாக."

நவீன வியாகரண விற்பன்னரான நாகேசபட்டரது குருவான ஹாதீக்ஷிதர் என்பவர் சக்கிரவர்த்தியிடமிருந்து சம்மானம் பெறலாமென்ற ஆசையுடன் டில்லிக்குப் போனார் அரசன் முன்னிலையில் போகுமுன், பண்டிதராஜரிடம் சென்று சபாமண்டபத்தில் அவருடன் வியாகரண சம்மந்தமாக வாதம் செய்யத் தனக்கு விருப்பமிருப்பதாகத் தெரிவித்தார். பண்டிதராஜரும் அதற்குச் சம்மதித்து அடுத்த நாள் அவரைச் சபைக்கு வரும்படி சொன்னார். எதிரியினது மகா திறமையை முற்றிலுமறிந்தவராதலால் ஜகந்நாதர், சபையில் நுழைவதற்கு முன்னர் ஏதோ அபூர்வ சக்தியுள்ள ஒரு ரக்ஷையைத் தரித்துக்கொண்டு எதிரியை ஆலிங்கனம் செய்தார். ஹாதீக்ஷிதரது மனதில் அவர் அறியாமலே ஒரு மயக்கம் வியாபித்தது. ஆரம்பத்திலேயே அவர், உளற ஆரம்பித்துக் கடைசியில் மிக்க மானபங்கத்துடன் சபையை விட்டு வெளியேறினார். வீடு சென்றதும், அவர் சபையிற் செய்த மூடத்தனமான உத்தரங்களுக்கு அவருக்கே காரணம் தெரியவில்லை, தோல்வியின் அவமானம் பொறுக்கமாட்டாமல். ஹாதீட்சிதர், மானபங்கத்தைக்காட்டிலும் சாவே நலமென்றெண்ணி, அன்றிரவுக்குள் ஜகந்நாதரை ஜயிக்குமுபாயம் கிடைக்காவிட்டால் தன்னைத் தானேமாய்த்துக்கொள்வதென்றுதீர்மானித்தார்.

தேவதானுக்கிரகத்தால் அவருக்குச் சக்தி மறுபடியும் உண்டாகி மறுநாள் ஜகந்நாதரை ஜயித்தாராம்.

யவனஸ்திரியாகிய தனது மனையாளுடன் டில்லியில் வெகு சுகமாக வயது காலம்வரும் வரை வாழ்ந்துவிட்டு ஜகந்நாதர் பின்பு தனது செய்கைகளைக் குறித்துப் பச்சாதாப முற்றவராய் தனது வாழ்நாளின் பாக்கியை, வாராணஸி என்றுசொல்லப்பட்ட புண்ணிய க்ஷேத்திரமாகிய காசியில்கழிப்பதாக உத்தேசித்து அங்குப்போய் வசித்தார். தென் தேசத்தவரும் மகா சுரோத்திரியருமான அப்பய்ய தீட்சிதர் என்ற மஹான் யாத்திரார்த்தமாக அப்புண்ணிய நகருக்குப் போயிருந்தபொழுது ஒருநாள் சாயங்காலம் ஜகந்நாத பண்டிதரைப் பார்க்கச் சென்றார். அந்த அனுசிதமான காலத்தில் அவர் தனது யவனியுடன் ஒரு சயனத்திலிருப்பதைப் பார்த்து ஆச்சரியமுற்று, ஆயினும் ஒன்றுமறியாதவர்போல.

**किनिश्शाङ्केशेषे शेषेवयसः समागतेसुत्यु ।**

"ஆயுசு க்ஷீணமடைந்து யமன் வந்து கதவைத் தட்டும் காலத்தில் இப்படிப் பயமற்றுத் தூங்குகிறாயே," என்று சொன்னார். இதைக்

கேட்டதும் ஜகந்நாதர் எழுந்து ச்ரோத்திரியரை வரவேற்க அணுகியபோது, பிராமணர் மேலும்,

अथवासुखं शयीथा निकटेजागर्ति जाह्नवी जननी ॥

"அல்லது சுகமாய்த் தூங்கு; ஏனெனில் அருகே தாயாரான கங்கை விழித்துக்கொண்டிருக்கிறாள்" என்று சொன்னாராம்,

காசியிலுள்ள பிராமணர்கள் இவரது குற்றங்களை மன்னித்துப் பிராயச்சித்தம் செய்வித்து அவரை ஜாதியிற் சேர்க்க விரும்பினார்கள். ஆனால் அவர் தன் காதலியை விட்டுப் பிரிந்து வசிக்க உடன்படவே மாட்டேனென்று சொல்லி விட்டார். இப்படிப் பிராமணர்களது சம்மதத்துடன் தனதிஷ்டப்படி பிராயச்சித்தம் செய்து கொள்ளமுடியாமல் அவர் ஒருநாள் கங்காநதியின் ஸ்நானகட்டங்களிலொன்றினது உச்சிப்படியில் தனது யவனஸ்திரீயுடன் உட்கார்ந்துகொண்டு, அமிர்தம்போன்ற மதுரமான வாக்கினால் சுலோகங்கள் சொல்லி அந்தத் தேவநதியின் பெருமையைப் புகழத் தொடங்கினார். ஒவ்வொரு சுலோகம் சொல்லிமுடிந்ததும் நதியினது பிரவாஹம் எழும்பி ஒவ்வொரு படியாக உயர்ந்தது. அந்தக் கட்டத்தில் 52 படிகளிருந்தனவாம். ஐம்பத்திரண்டாவது சுலோகம் முடிந்ததும் சர்வபாவனமான கங்காதீர்த்தமானது அவர்களைத் தொட்டு மூழ்குவித்து அவர்களது பாபத்தையும் அடித்துக்கொண்டு சென்றது. அவ்விருவரும் கங்கையிலேயே விழுந்து மறைந்துவிட்டார்களாம். ஐம்பத்திரண்டு சுலோகங்களடங்கிய இந்த ஸ்தோத்திரத்திற்கு 'கங்காவஹரீ' என்று பெயர். இது பாரத வருஷம் முழுதும் கொண்டாடப்பெற்ற மிக்க இனிமையான கிரந்தம்.

இவர் இயற்றியிருக்கும் முக்கிய நூல்களாவன:—பீயூஷலகரி, சுதாலஹரி, அமிருதலஹரி கருணாலஹரீ, லக்ஷ்மீலஹரீ, யமுனாவாரணசம்பு, ரஸகங்காதரம், மனோரமாகுசமர்த்தனம், பிராணாபரணம், ஜகதாபரணம், அஸபவிலாஸம், பாமினீவிலாஸம்.

எஸ். மஹாலிங்கஐயர். பி. ஏ.,

## ஆத்திசூடி விளக்கம்

### MORAL SAYINGS EXPLAINED

### 5. உடையது விளம்பேல்

நீ உடைத்தாயிருக்கும் குண விசேஷங்களை முன்பின் யோசிக்காது நீயே வெளியிடாதே என்பது இதன் பொருள். நீ உடைத்தாயிருக்கும் குணங்கள் சிறந்தவைகளாக இருப்பின் அதை நீயே சொல்லிக்கொள்ளலாகாது. அவ்வாறு செய்வது தற்புகழ்ச்சியாகும், இதைப் பெரியோர்கள் ஒருகாலும் செய்யத் துணியார். பிறர் தாமாகவே உனது சிறப்புக்களைக் கண்டு வெளியிட்டால் இடட்டும். அவ்வாறு இடுவதற்கு, நீ மனதாரக் காரணமாக இருத்தல் கூடாது. அப்படி இருந்தால் உடையது விளம்பிய பாபத்தில் உனக்கு ஸம்பந்தம் ஏற்படும். மேலும் பிறர் உனது குணச்சிறப்பைப் புகழ்ந்து பேசுங்கால் அதைக் கூசாது ஸந்தோஷத்துடன் கேட்டுக் கொண்டிருத்தலும் உடையது விளம்புவதின் ஒரு வகை ரூபம். ஆதலால் இவைகள் காரணமின்றி உனது குணங்களைப் பிறர் புகழும்படி நேரிட்டால் தகாதது ஒன்றுமில்லை.

நீ உடைத்தாயிருக்கும் குணங்கள் சிறந்தவைகளில்லாவிடின் உனக்கே அவைகளை வெளியிட மனம் வாராது. ஆகவே இவைகளை வெளியிடாததனால் 'உடையது விளம்பேல்' என்னும் நீதிமொழிப்படி நடந்து விட்டோம் என்று நீ இறுமாந்திருக்க இடமேயில்லை. இம்மாதிரி விஷயங்களிலும் பாபத்தை அல்லது கெட்ட குணத்தை வாய்விட்டுச் சொல்லி விட்டால் அதன் வலிமை குறையும் என்று நீதியைப் பின்பற்றி, இவைகளையும் முன்பின் யோசிக்காது வெளியிடலாகாது என்பதும் இந்நீதி மொழியில் அடங்கிய பொருள். எவ்வெக்கெட்ட விஷயங்கள் அல்லது குறைவுகளைத் தாமே வெளியிடவேண்டும் என்பதை 'இயல்வது கரவேல்' என்னும் நீதிமொழி விளக்கத்தில் கூறியாகிவிட்டது. அவை ஒழிந்த மற்றவைகளை நாமாக வெளிப்

படுத்தலாகாது என்பது இந்நீதி வாக்கியத்தின் கருத்து.

இந்நீதி வாக்கியம் 'இயல்வது கரவேல்' என்பதற்கு நேர் எதிர் வாக்கியம் என்று தோன்றும். உண்மையில் அவ்வாறு அல்ல. இவை இரண்டும் சேர்ந்தே ஒரு நீதியாக நிற்கின்றன. ஒரு நீதியின் இரண்டு பாகங்களாக இவைகள் காணப்படுகின்றனவே ஒழிய ஒன்றற்கு ஒன்று தம்முள் விரோதம் அல்ல. உலக விஷயாடவடிக்கைகளில் எப்பொழுதும் துவந்தவங்கள் கலந்தேயிருக்கும். ஆதலால் எந்த நீதியைக் கூறப்புகினும் அதற்கு எல்லையுண்டு. அந்த எல்லைக்குள் அந்த நீதிமொழியும் அதற்கு அப்பாற்பட்ட அதேமாதிரி விஷயங்களுள் நேர் எதிரிடையான நீதி மொழியுமே பொருந்தும். ஆகவே ஒரேவிதமான விஷயங்களுக்குக் காலதேச வர்த்தமான பேதத்தால் இரண்டு முரண்ன நீதி மொழிகள் தகுந்தவைகளாக இருக்கும் விநோதத்தை உடையது இவ்வுலகம். இந்த விஷயத்திற்கு இந்நீதி மொழிகளே உதாரணம். உலக 'விஷயங்களை சில ஸமயங்களில் மறைக்கவே கூடாது. சில ஸமயங்களில் மறைத்தே தீரவேண்டும் என்பதேநெறி. இது இவைகளால் விளையும் நன்மை தீமைகளைப் பொருத்தனவே ஒழிய ஸுகதுக்கங்களைப் பொருத்தனவேயல்ல. இந்த ஒரே உலக நீதிவாக்கியம் இரண்டாகப் பிரிக்கப்படுங்கால் 'இயல்வது கரவேல்' என்றும், 'உடையது விளம்பேல்' என்றும் இரண்டு முரணான நீதிகளாகி விடும். இவைகள் இரண்டிற்கு எல்லைகட்டிப் பொருள் கூறில் இரண்டும் ஒரே விஷயத்தைப் பற்றிய நீதிகளே ஒழிய தோற்றமாத்திரத்தில் காணப்படுவது போல முரணானவைகளே யல்ல என்பது நன்கு வெளியாகும்.

இனி 'உடையது விளம்பேல்' என்பதைப் பண விஷயமாகப் பொருள் படுத்தலாம். அப்பொழுது 'உனது சொத்து முதலியவைகளை நீயே வெளியிட்டுக் கொள்ளாதே அது கொடியவர்களுக்கு மனஸ்தாபத்தை உண்டாக்க உனது ஸொத்தை நீ இழக்கும்படி நேரிடும்' என்றாகும். ஆகவே தான விஷயங்களில் கர்வத்தை முன்னிட்டு உடையது விளம்பாமலும், லோபத்தை முன்னிட்டு இயல்வதைக் கரக்காமலும் செய்வதைத் திருந்தச் செய்துவிடவேண்டும்' என்பதே இவ்விரு நீதிவாக்கியங்களின் பொருத்தத்தை நன்றாகக் காட்டும்.

உடையது விளம்பியதால் கேடு விளைந்து வருந்தியவர் அநேகர். யயாதி மஹாராஜன் தன் புண்ணியவிசேஷத்தால் ஸ்வர்க்கம்அடைந்துஇந்திரனோடு அரை ஆஸனத்தில் வெகுகாலம் வீற்றிருந்து சிறப்புற்றோங்கினான். இப்படி இருக்கையில் இந்திரன் இவரை மிகப் புகழ்ந்து பேசி முடிவில் 'நீர் செய்த புண்ணியத்தின் சிறப்பைப் பிறர்க்கு உபகாரமாக எடுத்து வெளியிடும்' என்றான். யயாதி தன் புண்ணியத்தின் சிறப்பைக்கூறி அதோடு நிறுத்திவிடாமல் 'யான் செய்த புண்யத்திற்கு நிகர் வேறு ஒருவரதும் ஆகாது. ரிஷிகள் தவம் செய்தும் யாது பயன்! வேறுயார் எந்த ஸத்க்கிருத்தியம் செய்தும் என்ன பயன்! எல்லாம் யான் செய்தவைகளுக்கு ஈடோ? என்று கூறி உடையது விளம்புவதாகிய பாபத்தைச் செய்து விட்டான். உடனே இந்திரன் 'தற்புகழ்ச்சியால் உன் புண்ணியங்கள் நீங்கி விட்டன. போகலாம் பூமிக்கு!' என்று கூறி யயாதியைத் தள்ளிவிட்டான். விழும்பொழுது யயாதி இந்திரனை நோக்கி, 'யான் தற்புகழ்ச்சியால் இந்நிலைக்கு வந்தபோதிலும், நல்ல ஸாதுக்களிடையில் விழும்படி அனுக்கிரஹிக்க வேண்டும்' என்று மன்றாட, இந்திரன் அதற்கு இசைந்தான். இதன்படி யயாதி தன் பேரர்கள் செய்த யாகசாலைக்கெதிரே வர அவர்கள் தந்த தமது புண்ணிய பலன்களால் மறுபடியும் அவன் ஸ்வர்க்கம் போனான்.

இம்மாதிரியேதான் தன் புண்ணியத்தைக் குறைத்துக்கொண்டான் யயாதிபோலான அஷ்டகன். இவன் செய்தயாகத்திற்கு ஒருதரம் நாரதர் வந்து சேர்ந்தார். அவரை இவன் தனது தேரில்

ஏற்றிக்கொண்டு ஊருக்கு வெளியில் உல்லாஸமாகப் பவனி புறப்பட்டான். தன் ஊர்ச் சிறப்பை முனிவருக்குக் காட்டிக்கொண்டு வருகையில் ஓரிடத்தில் ஏராளமாகப் பசுக்கள் மேய்ந்துகொண்டிருந்தன. அதைக் கண்டதும் நாரதர் 'இவையாரைச் சேர்ந்தவை' என்று கேட்க 'இவைகள் இவ்வூர் பிராஹ்மணர்களது' என்று கூறி நிறுத்திவிடாது 'நான் தானம் செய்ய, அவர்கள் பெற்றவை' என்று கூறிவிட்டான். இதை வைத்துக்கொண்டே பின் ஒரு தருணத்தில், நாரதர் 'அஷ்டகனுக்குச் செய்த புண்யத்திற்கு ஏற்றபலன் கிடையாது. பலன் வெகு குறைவுதான்' என்று கூறினர்.

ஆகவே உடையது விளம்புவது நன்றன்று என்பது விளங்கும். இது ஒருவன் வலிமை எல்லாவற்றையும் வீண் பேச்சில் செலவிட்டுத் தொழில் புரிதற்கு வேண்டிய ஊக்கமில்லாமல் செய்து விடும். இவ்வாறு வீண்பெருமை பேசி ஊக்கமிழந்தவர்களில் கர்ணன் முக்கியன். பாண்டவர்களைச் சிறை பிடித்தல் தோல்வியடையும்படி செய்தல் முதலியவைகளை செய்துவிடுவதாக அடிக்கடி இவன் பெருமை பேசுவான். காரியத்தில் வந்து விட்டால் இவன்தான் யுத்தக் களம் விட்டு முதல் ஓட்டம் பிடிப்பான். ஆகவே பெரியோர்கள் தம்மால் இயன்றதைச் செய்து காட்டுவார்களே ஒழிய, முன்னர் வீண் பெருமை பேசித் தமது சொற்படி நடக்கமுடியாத நிலையை எப்பொழுதும் அடையார்கள். அவர் பேச்சு மாத்திரத்திலிரார்கள். கருமமே கண்ணாக இருப்பார்கள்.

6 ஊக்கமது கைவிடேல்

விடாமுயற்சியைச் செய்யவேண்டும் என்பதாயிற்று. ஒரு விஷயத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்து நாம் அதை அடைந்தே தீரவேண்டும் என்று தோன்றினால், அவ்விஷயத்தில் நமக்கு முயற்சி உண்டாகும். இது இடையில் ஏற்படும் தடைகளால் தளர்ச்சி பெறும். அவ்வாறு தளர்ச்சி உண்டாகாது தடுத்து, முயற்சியை விடாது, அடைய வேண்டியதை அடைந்தே தீரவேண்டும் என முனையவேண்டும் என்று இந்நீதி மொழி வற்புறுத்துகிறது.

இயற்கையில் ஏற்படும் தடைகளன்றி மனத் தடைகள் பொதுவாக எல்லோருக்கும் ஏற்படும். விதி என்ற எண்ணம் முயற்சிக்கு இடையில் வந்து தடைவருங்கால், நமது முயற்சியைத் தடுத்துவிடக் காரணமாக இருக்கும். ஆகவே நமது நூல்களில் கூறியபடி மனனம் செய்து விதி என்னும் எண்ணத்தையும் முயற்சிக்குக் குறுக்கே வந்து தடுக்கவொட்டாது தடுக்கவேண்டும். அந்த மனனம் பின் வருமாறு இருக்கவேண்டும். "ஒரு காரியம் முடிவதற்கு விதியும் முயற்சியும் வேண்டும். விதி இத்தன்மையது என்பது முன்னரே தெரியாது. முயற்சியின் முடிவில்தான் தெரியும். ஆகவே அதை முன்னரே எண்ணி முயற்சியைக் குறைப்பது அல்லது விட்டுவிடுவது யுக்திக்குப் பொருந்திய விஷயமல்ல. மேலும் விதி என்பது நம்மைவிட்டு வேறானதல்லவே. முன் காலத்திலோ அல்லது முன் ஜென்மத்திலோ நாம் செய்த கர்மம் இப்பொழுது வந்து தகைவதே விதி என்னப்படும். ஆதலால் நாம் ஒருவிதமாக நடந்ததனால்தான் நமக்கு விதி தடையாக ஏற்பட்டு விட்டது என்னலாம். இப்பொழுதும் நல்லவழியில் ஏற்படும் முயற்சியை விட்டுவிட்டால், இது அந்த விதியை பலப்படுத்துமே ஒழிய அதைத் தடுக்காது. ஆதலால் விதி விரோதமாக இருந்தாலும் நன் முயற்சியை விடவே கூடாது. ஆகவே விதியைப்பற்றிய எண்ணம் முயற்சியைத் தடுக்கக் காரணமே இல்லை. அது முயற்சியைத் தூண்ட வேண்டுமே ஒழிய வேறில்லை' என்றிவ்வாறு மனனம் செய்து ஊக்கத்தைக் கைவிடாதிருக்கவேண்டும்.

ஊக்கமது கைவிடாக்கால் வரும் பயன் யாது? பொதுவாக நாடும் பொருள் கைகூடுவது திண்ணம் என்பர் எல்லோரும். ஒருவேளை நாம் கோரும் பொருள் கைகூடலாம்; ஆனால் இதுதான் ஊக்கமது கைவிடாததற்குப் பலன்

என்று கூறிவிடக்கூடாது. ஒருவேளை நாம் வெகு ஊக்கமாக இருந்தபோதிலும், நாடும் பொருள் கைகூடாதிருக்கலாம். அப்பொழுது ஊக்கமது கைவிடேல் என்னும் வாக்கியத்தில் நம்பிக்கை நமக்குக் குறைந்துவிடும். உலகில் நாம் என்ன செய்தும் இரண்டு விதமான முடிவு உண்டாகலாம். அவையாவன அநுகூலம், பிரதிகூலம் என்பவைகளே. இவைகளில் அனுகூலத்தைமாத்திரம் நோக்கி ஒரு நீதிவாக்கியத்திற்குப் பொருள் கூறுவது அவ்வாக்கியத்திற்குப் பலக்குறைவு. ஆகவே ஊக்கமது கைவிடாக்கால் எப்பொழுதும் நாடும்பொருள் கைகூடும் என்று எதிர்பார்க்க நியாயமே இல்லை. கைகூடிவிட்டால் விதியும் அனுகூலம் என்பதாகுமே ஒழிய உன் முயற்சியின் சிறப்பை எண்ணிக் கர்விக்க நியாயமே இல்லை. அதுபோலவே கைகூடாவிடில் விதிப்பிரதிகூலம் என்பதாகுமே ஒழிய உன் முயற்சி குறைந்துவிட்டதென்று அகம் கரைபவும் நியாயமில்லை. ஆகவே முடிவுஎவ்வாறாயினும் நாம் செய்யவேண்டிய முயற்சியைச் செய்துவிட்டால்நமக்கு ஒருவிதத் திருப்திவரும். அது கருவத்துள் அழுந்தாதிருப்பதற்கு விதியைப்பற்றிய எண்ணம் ஸஹாயமாயிருக்கின்றது. அந்தத் திருப்தி உருவழிந்து துக்கத்துள் புதையுங்காலத்தில் இந்த விதியே வந்து நம்மைக் கைதூக்கியும் விடும். 'நாம் செய்யவேண்டியதைச் செய்தோம். விதி விரோதமாக இருக்கிறது. காரியம் கைகூடவில்லை. ஆனால் நமது கடனைச் செய்து விட்டதால் விதியின் வலுக்குறைந்திருக்கும்' என்ற திருப்தி வெளி எழும். ஆகவே ஊக்கமது கைவிடாக்கால் மனதில் ஒருவித சாந்தி எப்பொழுதும் இருக்கும். ஆகவே மனத்தளர்ச்சி ஏற்படவேமாட்டாது. இதையே 'முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்' என்ற பழமொழியும் வற்புறுத்துகிறது. அதாவது இகழ்ச்சி யுண்டாக்கக்கூடிய நாடிய பொருள் கைகூடாநிலை ஏற்பட்டபோதிலும் முயற்சி உடையோருக்கு மனம் அழிதல் என்னும் இகழ்ச்சி ஏற்படவேமாட்டாது என்பதாயிற்று.

முதலில் 'ஊக்கமது கைவிடேல்'என்னும் நீதிமொழியை விளக்கப் புகுந்தவிடத்து ஆராய்ந்து பார்த்து ஒருவிஷயம் அடையக்கூடியது என்று தோன்றினால் அவ்விஷயத்தில் உண்டாகும் ஊக்கத்தை இடையே ஏற்படும்இடையூறுகள் குறைக்காவண்ணம் பாதுகாக்கவேண்டும் என்று கூறினோம். இது இம்மொழியின் எல்லையை நன்கு விளக்கும். முன்னர் ஆராயாது முயற்சிக்கத் தொடங்கியும்,பின்னர் ஆராய்ந்து பார்த்து அந்த விஷயம் அடையத்தகாதது என்று கண்டுவிட்ட பின்பு அதன்மேல் இருக்கும் வீணாசையால், அதை அடையவேண்டும் என்று வீணாக முயற்சித்தல் ஊக்கமது கைவிடேல் என்பதன்படி நடந்ததாகாது. இந்த ஸமயங்களில் உபயோகிக்க வேண்டிய நீதிவாக்கியம் 'கிட்டாதாயின் வெட்டெனமற' என்பதே. ஆகவே உலகவிஷயங்களைமுயற்சித்து அடையும் மார்க்கத்தில் உள்ளபடி நடந்து வர நாம் ஊக்கமது கைவிடேல் என்பதைக் கிட்டாதாயின் வெட்டெனமற என்பதோடு ஒப்பிட்டு நோக்கி ஆராய்ந்து எதைக் கடைப்பிடித்தல் நீதியோ அதைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

உலகவிஷயத்தில் ஊக்கமதுகைவிடேல் என்பதற்கு எல்லை இருக்கின்றதாயினும் மனம் ஸம்பந்தப்பட்டவரையில் அதை அடக்குவது,மேலே பகவந்நிஷ்டை முதலியவைகளுக்குப் போய் ஸாதித்தல் ஆகிய இவைகளுக்கு முற்கூறிய எல்லையேகிடையாது. இவைகள் கூடியவைகளாயினும், எளிதில் முடிகின்றவையல்ல. ஆதலால் என்ன கஷ்டநிலை வந்தபோதிலும் நமது ஊக்கத்தைவிடவே கூடாது. இவ்விஷயத்தில் கிட்டாதாயின்வெட்டெனமற வென்பது வந்துபாதிக்காது. ஆனால் ஊக்கத்தின் அதிகத்தால் தற்காலத்

திற்கு தகாத காரியங்களைச் செய்துமனம் அடங்கப்பெறுத காலத்து மனம் அழியாது எப்பொழுதும் மனோநிரோத விஷயத்தில் நாம் விடா ஊக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆதி சங்கராசாரியர் பரமகுருவாகிய ஸ்ரீமத் கௌடபாதாசாரியர் தாம் எழுதிய மாண்டூக்கிய உபநிஷத்காரிகையில் மனோநிரோதம் மிகக்கஷ்டமாயினும் அதை விடா துஸாவதானமாகச் செய்ய வேண்டும், என்ற விஷயத்தை விளக்கப் பஞ்சதந்திரத்திலிருக்கும் சிட்டுக்குருவிகள் கதையை எடுத்துக்காட்டுகிறார். ஒரு கடல் ஓரத்தில் ஆணும் பெண்ணுமாக இரண்டு சிட்டுக் குருவிகள் கூடு கட்டி வாழ்ந்துவந்தன. ஒருநாள் பெண்பறவை முட்டையிட, ஆண் அந்த முட்டைகளைக் கடலோரமாகவே வைத்துவிட்டு வரும்படி பெண்ணுக்கு உத்தரவளித்தது. 'கடல் ஒருவேளை முட்டைகளை அடித்துக்கொண்டு போய்விட்டாலும் விடலாம். ஆதலால் இவ்வாறு வைத்துவிட்டுப் போவது அபாயகரமானது' என்று பெண் எவ்வளவு மன்றுடியும், ஆண் இதைக் கவனியாது மிகுந்த இறுமாப்புடன் பெண்ணோடு இரை தேடப் போய்விட்டது. இவைகளைக் கேட்டிருந்த ஸமுத்திராஜன் அம்முட்டைகளை எடுத்துச் சென்றுவிட்டான். போகையில் "இக்குருவிகள் யாரோ ? வெகு தைரியமாகப் பேசினவே ! இவர்கள் பக்கபலங்கள் எத்தன்மையவோ ! எதற்கும் இம்முட்டைகளை அழிக்காது வைத்திருப்போம்' என்று எண்ணங்கொண்டு இவைகளை ஒளித்து வைத்தான்.

குருவிகள் வந்து பார்க்க முட்டைகளைக் காணவில்லை. ஆண் குருவிக்கு அதிக கோபமும், பெண் குருவிக்கு அதிக துக்கமும் வந்துவிட்டது. பெண் குருவி ஆண்குருவியை மிகப் பழித்துக் சடித்துகொள்ள அதற்கு வந்த கோபம் மூண்டெழுந்தது. உடனே 'பார் இதோ ! என் மூக்கு இறகுகளாலேயே இந்தக் கடலை வற்ற அடிக்கிறேன் ! நீங்கள் ஸமயத்திற்கு உதவாக் கசடர்கள் !' என்று வெறுத்துக் கொண்டு, தன் வேலையை மன உறுதியுடன் தொடங்கி விட்டது. இதைக் கண்ட பெண்குருவி கணவனிடம்மன்னிப்புக்கேட்டுக்கொண்டு தானும் அதற்க்கு ஸஹாயமாகத் தொடங்கி விட்டது. இவைகள் ஸமுத்திரத்தில் மூழ்குவதும் வெளியே வந்து சிறகுகளை உதறுவதுமாக முனைந்து ஸமுத்திரத்தை வற்ற அடிக்கத் தொடங்கி விட்டன. மற்றைய‌க் குருவிகளும் பறவைகளும் இக்குருவிகளை அதைரியப்படுத்தின. அதற்கு இவைகள் 'நீங்கள் வீணாக எங்களை பயப்படுத்தாதேயுங்கள். நாங்கள் ஊக்கமது கைவிடோம். நீங்கள் வேண்டுமானால் எங்களுக்கு ஸஹாயம் செய்யுங்கள்' என, மற்றைய‌ப் பறவைகளும் அவ்வாறேசெய்தன. இவ்வாறு இவைகள்செய்து கொண்டிருக்கையில் நாரதர் இவைகளைக் கண்டார். அவர் எவ்வளவு முயன்றும் இவைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. உடனே ஸந்தோஷித்து இவைகளுக்கு நாரதர் கருடமந்திர உபதேசம்செய்தார். இவைகள் கருடனை ஆராதிக்கக் கருடன் பிரத்யக்ஷமாயிற்று. அப்பொழுதுஸமுத்ரம் நடுங்கிக்கொண்டு முட்டைகளைக் கொண்டு வந்து கொடுத்து விட்டது.

ஊக்கமது கைவிடேல் என்னும் நீதிமொழிக்கு புராணங்களில் அநேக கதைகளிருக்கின்றன. 'விசுவாமித்திரர் பிராஹ்மண்யம்ஸம்பாதித்தகதைமிக முக்கியமானது. இதை ராமாயணவினாவிடை பாலகாண்டத்தில்காண்க. இதன்எல்லை வாக்கியமாகிய 'கிட்டாதாயின் வெட்டெனமற' என்பதற்கு மதங்கர் என்ற ருஷி பிராஹ்மண்யம்ஸம்பாதிக்க முயன்று முடியாமற்போக அதை மறந்துவிட்ட கதையை மஹாபாரத வினாவிடை 3-ம் பாகம் அநுசாஸன பர்வத்தில் காண்க.

# இராஜாங்கமுறை பிரதமக்கொள்கைகள்

## CIVICS: ELEMENTARY PRINCIPLES

(7) கிரதக்யதை (நன்றியறிதல்).—

நாம் நம்முடைய பெற்றோர்களிடத்தில் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் நமக்குச் செய்திருக்கும் நன்மைகளைச் சீர்தூக்கிப் பார்த்தால் இவ்விஷயத்தைப் பற்றி வற்புறுத்திச் சொல்லல் அவசியமா? நம்முடைய பள்ளிக்கூடத் தோழர்களில் ஒருவன் நமக்கு ஒரு எழுதுகோலாவது காகிதத்துண்டாவது இரவல் கொடுத்தால் நாம் அவனை வந்தனிக்கிறோம். இது நன்றியறிதலுக்கு ஓர் திருஷ்டாந்தமாம். நமக்கு ஒருவன் ஓர் பாடத்தைக் கற்றுக்கொள்ள உதவி செய்தால் அல்லது நல்ல புத்திமதிகளைப் போதித்தால் அப்போதும் அவனிடத்தில் நாம் வந்தனமுள்ளவர்களா யிருக்கிறோம். நாம் குழந்தையாயிருக்கும்போது நம்மை அதிஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வந்த தாயினிடத்திலும் விசேஷ துன்பங்கள் நம்மை அணுகாவண்ணம் பிரயாசை யெடுத்துக்கொண்ட தகப்பனிடத்திலும், நமக்குச் சந்தோஷமும் கௌரவமும் பொருந்திய வாழ்வைத்தரும் நோக்கத்துடன் தங்களால் இயன்றமட்டும் அதி விருப்பத்துடன் சதா பாடுபடும் அவ்விருவர்களிடத்திலும் நன்றி பாராட்டாமலிருப்பது வெறுக்கத்தக்க காரியமாம். நமக்குக் கொஞ்சம் உதவி பண்ணினவரிடத்தில் நன்றி யறிவில்லாமலிருப்பது வெறுக்கத்தக்கதே. அப்படி யிருப்பவனை விசுவாசபாதகனைக் காட்டிலும் அதிபாபியாகமதிக்கலாம். தன் பெற்றோர்களிடத்தில் நன்றி பாராட்டாதவன் கொடும் பாதகனாவான். இப்பேர்ப்பட்ட மகாபாபி பிற்காலத்தில் வாழ்நாள் முழுவதும் மனப்புண்பட்டு மாய்வான் என்பது திண்ணம்.

ஒருவன் பெரியவனாகும்போது தாய் தந்தையர்கள் தன்னைப் பெற்று வளர்த்த இல்லத்தை நினைத்துப் பார்க்கிறான். மிக்க ஆனந்தமடைகிறான். பெற்றோர்களுக்குத் தான் உண்டுபண்ணின களைப்பையும் உபத்திரவங்களையும் தன்னை வளர்த்துப் படிப்பித்துக் கௌரவ நிலைமைக்குக் கொண்டுவரும்பொருட்டு அவர்கள் ஏற்றுக்கொண்ட கஷ்ட நஷ்டங்களையும் நன்கு உணருகின்றான். பெற்றோர்களிடம் உண்மையான பக்தியுள்ள புத்திரன் இம்மகோபகாரங்களைத் தன்னால் திருப்திகரமாக மட்டிடக்கூடவில்லையே யென்றும், மேற்கூறியவாறு தன் நிமித்தமாக அரும்பாடுபட்ட பெரியோர்களிடத்தில் பூரண அன்பையும் அருமையையும் தான் காட்டவில்லையேயென்றும் பரிதபிப்பான். ஆனால் இவர்கள் துக்கத்துக்கும் நன்றியறிவில்லாப் பையனுடைய மனதை அறுக்கும்படி செய்யும் துக்கத்துக்கும் மலைக்கும் மருவுக்குமுள்ள வித்தியாசமுண்டு.

நன்றியறிதலாகிய நீதியைக் கற்பிக்கும்படியான அற்பப் பிராணியாகிய ஓர் சுண்டெலியைப் பற்றிய கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஒரு காலத்தில் ஓர் சிங்கம் காட்டில் அங்குமிங்கும் ஓடியாடித் திரிந்து களைப்புற்று, கிளைகளடர்ந்த ஓர் மரத்தின் நிழலில் படுத்து இளைப்பாறிக்கொண்டிருந்தது. அப்படியே தூங்கிப்போயிற்று அப்போது அவ்விடத்தில் அலைந்துகொண்டிருந்த சில சுண்டெலிகள் அச்சிங்கத்தின் முதுகின்மேல் ஏறி ஓடி அதற்கு நித்திராபங்கம் செய்தன. சட்டென விழித்துக்கொண்ட அம்மிருகேந்திரன் ஓர் சுண்டெலியின்மேல் தன் உள்ளங்கையை வைத்து அதைக் கொல்லப் போகும் தருவாயில், அச்சிறு பிராணி மிகவும் பயந்து தன்னை மன்னித்துக்காக்கவேண்டுமென்றும் மிகவும் பரிதாபகரமான கேவலம் அற்பப் பிராணியாகிய தன்னைக் கொன்று தன் இரத்தத்தைக் குடிக்கும் இழிவான காரியத்தைச் செய்யாதிருக்கவேண்டுமென்றும் மன்றாடி வேண்டிக்கொண்டது.

அப்பெரிய பிராணி அதன் வேண்டுகோளுக் கிணங்கி, அதன் இஷ்டப்பிரகாரம் செய்வது உசிதமெனத் தேர்ந்து சுயேச்சையாகப் போகும் படி அதை விட்டுவிட்டது. கொஞ்ச காலத்திற் குப் பிறகு அச்சிங்கம் இரை தேடிக்கொண்டு காட்டில் அலைந்துகொண் டிருக்கும்போது ஓர் வேடனுடைய வலையில் சிக்கிக்கொண்டது. தன்னாலானமட்டும் முயன்று பார்த்தும் தப் பித்துக்கொண்டு வெளிவர முடியாததினால் காடெல்லாம் பிரதிதொனி கேட்கும்படி உரத்துக் கர்ச்சித்தது.

இதைக் கேட்ட அச்சுண்டெலி இச் சத்தம் தன் நண்பனது குரலோசை யென்று தெரிந்து கொண்டு உடனே அவ்விடத்திற்கு ஓடி தன் உயிர்த்தோழனுக்கு அபயப்பிரதானம் செய்தது. காலதாமதமன்னியில் சமயத்திற்குத் தகுந்த காரியத்தை நாடி வலையிலுள்ள முடிச்சுகளை யும் கட்டுக்களையும் தன் கூரிய பற்களால் கடித் துக் கிழித்து அதை விடுவித்தது.

"சிறு துரும்பும் பல்குத்த வுதவும்" என்றும் பழமொழிகற்பிக்குமாறு பிரதி உபகாரம் செய்ய முடியாத பிராணியே உலகில் இல்லையென்றும் மிகத்தாழ்ந்த அறிவில்லாப் பிராணிகளே ஒன் றுக்கொன்று உபகரித்துக்கொண்டு சுகிக்க,பகுத் தறிவுள்ள மானிடராய் ஒற்றுமைப்பட்டு வாழப் பிறந்த நாம் ஒருவரோடு ஒருவர் பக்ஷமாயும் ஐக்கியமாயும் நடந்துகொண்டு இயன்றமட்டும் பிறர் நன்மையையே கருதி வாழக் கடமைப்பட் டிருக்கிறோம் என்றும் இக்கதையினின்றும் தெரிந்துகொள்ளுகிறோம். மேலும் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்தநன்றி கொன்ற மகற்கு" என்றும் ஆன்றோர் வாக்கியத்தைச்சிரமேற்கொண்டுநன்றி யறிதல் என்னும் நோன்பே நோன்பு என்றும் உண்மையை எக்காலமும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்றும் நாம் அறிந்துகொள்கிறோம்.

அருமைக் குழந்தைகள், உங்கள் பெற்றோர்க ளைப் பரிபூரணமாக நேசியுங்கள். உங்களது முழு நேசமும் அவர்கள் உங்களிடம் வைத்திருக்கும் நேசத்திற்குச் சமமாக மாட்டாது. அவர்கள் உங் கள் நிமித்தமாக எடுத்துக்கொண்ட கவலைகளை நினைத்து நினைத்து அவர்களிடம் அனுதினமும் நன்றி யறிதலுள்ளவர்களா யிருக்கவேண்டும். நன்றியறிவில்லாத மக்கட்கள் மனப்புண்பட்டு அனுபவிக்கும் அவஸ்தைகள் உங்களை அணுகா திருக்கட்டும்.

இப்போதும், பிற்காலத்தில் நீங்கள் பெரியவர் களானபோதும், பெற்றோர்களிடத்தில் நன்றியறி வுள்ளவர்களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறீர் கள் என்பது மேலே சொல்லியவைகளினின் றும் நன்கு விளங்கும். உங்களைத் தாங்கி வளர் த்த பெற்றோர்கள் பலவீனர்களாயும் நடமாட அசக்தர்களாயும் ஆய்விடுவார்கள். அப்போது உங்களால் இயன்ற உதவி செய்யவேண்டும். உங்களுக்கு அவர்கள் உபகரித்ததுபோலவே நீங்களும் அவர்களுக்குச் சந்தோஷமும் சுக மும் நிறைந்த வாழ்வை உண்டாக்கவேண் டும். விருத்தாப்பியமும் சைவப்பருவம்போல் சீர் பெறுதல் முறைமையாகும் விருத்தாப் பியர்கள் சிறு குழந்தைகளுக்குச் சமானம். அவ்வாறு வயதுசென்ற பெற்றோர்களை நடத்து வதே சட்ட சம்மதமுமாகும். இம்மகத்தான கட மையைப் பிறர் ஏவுதலின்றிப் பின்பற்றி நடக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட அநேக திருஷ் டாந்த நீதிகளையும், உங்களுக்கு உபாத்தியாயர் நினைப்பு மூட்டுபவைகளையும் உங்கள் வாசகபுத்த கங்களில் சொல்லப்பட்டிருக்கும் கற்பனைகளை யும் தவறாது கையாளுவீர்களாக.

பிற்காலத்தில் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்து அவர்களைப்பற்றித் தகுந்த கவலை எடுத் துக்கொள்ளல் மிகவும் முக்கியமானது. அத்தியா வசியமானது. அதுவே உங்கள் கடமையுமாகும். ஆயினும் இவ்வித உதவியும் கவலையும் பெற் றோர்களிடம் காண்பிக்க வேண்டிய மரியாதை வணக்கம் அன்பு கவனம் ஆகிய இவற்றிற்குத் தினையளவும் ஈடாகமாட்டா. இந்நற்குணங்களைக்

கைக்கொண்டு நீங்கள் நடந்துகொள்வது பெற்றோர்களின் விருத்தாப்பிய நிலைமைக்கு உரித்தானதே. அதை அவர்கள் நன்கு கண்டுகொள்ளுகிறார்கள். அச்சீராட்டைப் பூரணமாய் அனுபவித்து ஆனந்தமடைகிறார்கள். இவ்விஷயத்தை ஒருநாளும் நீங்கள் மறந்துவிடக்கூடாது. மேலே கூறப்பட்டுள்ள உதாரண நீதிகளைப் படித்துத் திடசித்தர்களாகவேண்டும்.

நன்றியறிதலுள்ள ஓர்படைச்சேவகனைப் பற்றிய கதை அடியில் வருமாறு:—

சுமார் 1572-ம் ஆண்டில் பயங்கரமான ஜனசங்காரம் சம்பவித்தது. இதற்குக் கொஞ்சகாலத்திற்கு முன் பிராஞ்சு தேசத்தின் தென்பாகத்திலிருந்து(Protestant)பிராடெஸ்டெண்ட் மதப்பிரிவைச் சேர்ந்த சில துரைசாணிகள் பாரிஸ் (Paris) மாநகரத்தைப் பார்க்க வந்தார்கள். அந்நகரின் கோட்டை வாசலண்டை வந்தபோது அவ்விடத்தில் நியமிக்கப்பட்டிருந்த காவற்சேவகனைப் பார்த்தார்கள். அவனுக்கு அப்போது அதிக தாகமாயிருந்ததாலும் தாகசாந்தி பண்ணிக்கொள்ள அவ்விடத்தை விட்டகல அவன் துணியாததினாலும், தனக்குக்கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கும்படி அம்மாதர்களை வேண்டிக்கொண்டான். தங்களைப் பார்த்து இவ்வாறு கேட்டதற்காக அவர்களில் சிலருக்குக் கோபம் வந்துவிட்டது. பதில் சொல்லாமலே அதிக கர்வத்தோடு நடந்துபோய்விட்டார்கள். ஆனால் ஒரு சிறிய பெண்மாத்திரம் அவன்மீது இரக்கங்கொண்டு அடுத்தாற்போலிருந்த ஓர் வீட்டிற்கு ஓடி அந்தக் காவற்சேவகனுக்குக் குடிக்கத்தண்ணீர் கொணர்ந்து கொடுத்து அவன் தாபத்தை நீக்கினாள்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு தலைப்பில் கூறிய பிராடெஸ்டெண்ட்(Protestant)பிராஞ்சியர்கள் (France தேசத்தார்கள்) கணக்கில்லாமல் கொலையுண்டபோது கிருதக்யதையோடு கூடிய அப்போர்வீரன் தனக்கு அப்பெண் முன்பு செய்த நன்றியை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சங்காரம் செய்வதற்காகத் தன்னை அனுப்பியபோது பிராஞ்சிய குடும்பங்களுள் இப்பெண்ணைக் கண்டுபிடித்து ஒருவருக்கும் தெரியாமல் மறைத்துவைத்து அந்நாட்டில் அவளுடைய சிநேகிதர்கள் இருக்கும் இடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

ஒரு யுத்தவீரன் தனக்குச் செய்த அற்ப உபகாரத்தின் பொருட்டு இவ்வளவு நன்றியறிவு காட்டா நிற்க, நீங்கள் உங்கள் பெற்றோர்களிடத்தில் எவ்வளவோ அதிகமாக நன்மை பாராட்டி நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா ?

குழந்தைகாள், நீங்கள் நல்லவழியில் நடந்து உங்கள் பெற்றோர்களுக்குச் சந்தோஷத்தை இப்போது கொடுப்பதும் தவிர விருத்தாப்பிய காலத்தில் அதிக அன்புகாட்டி அவர்களுக்குப் பூரணானந்தத்தை விளைவிக்குமாறு ஆயத்தம் பண்ணிப் பழகுவீர்களாக.

C. S. சுந்தரமய்யர் பி. ஏ., எல்-டி.

முதலைக்குத் தண்ணீரின்மேல் மிதந்துகொண்டு சுகமாய் நீந்துவதற்கு ஆசையாயினும், வேட்டைக்காரர்கள் அதைத் தண்ணீரின்மேல் பார்த்தவுடன் சுடுவதற்குக் குறிவைத்துப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆகவே அது எப்பொழுதும் தண்ணீருக்குள்ளேயேயிருந்து அதனின்று வெளியே கிளம்பாமல் இருக்க வேண்டியிருக்கிறது. அப்படியிருந்தபோதிலும், எப்பொழுதாவது ஒரு தக்க சமயம் கிடைக்கும்பொழுது, அது ஹூஸ் என்ற ஒருவித சத்தத்துடன் மேலே எழும்பி அகன்ற நீர்ப்பரப்பின்மீது சுகமாய் நீந்திக்கொண்டிருக்கிறது. உலகமாகிய வலையிலே அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் மனிதனே, நீயும் பிரஹ்மானந்த சாகரத்தின்மேல் நீந்தப் பார்க்கிறாய். ஆனால் சம்சார தாபங்களின் போராட்டத்தினால் உன் உத்தேசம் பங்கமுற்றுப் போகின்றது. ஆனபோதிலும் உன் மனத்தைமாத்திரம் உற்சாகமாய் வைத்துக்கொண்டு கொஞ்சம் ஒழிவு கிடைக்கும்பொழுதெல்லாம் உள்ளன்புடன் ஈசனைப் பிரார்த்தித்து அவன் முன் உன் குறைகளையும் துக்கங்களையும் விண்ணப்பம் செய்வாயாகில், அவர் தக்க சமயத்தில் உனக்கு முக்தியளித்து, நீ பேரின்பக் கடலிலே சுகமாய் நீந்தி விளையாடக் கருணை கூருவார்.

உபதேசரத்தினமாலை.

## முத்து

### PEARL

### 6. முத்தின் குண விசேஷங்கள்

முத்தின் பரிமாணம் அது பக்குவமாகச் செல்லும் காலத்திற்கேற்ப வேறுபடும். சாதாரணமாகச் சிப்பிகள் பருவமடைய நான்கு வருஷங்களும் பூரணபக்குவமுற ஏழு வருஷங்களுமாகும். உஷ்ணப் பிரதேசங்களில் காணப்படும் முத்துக்களே நேர்த்தியாயும் பருமனும் மனோகரமான குளிர்ந்த ஒளியுடனும் விலை மிகுந்தனவாயும் இருக்கின்றன. குளிர்ச்சியான தேசங்களிற் காணப்படுவன சிறு முத்துக்களே.

நக்ஷத்திரங்கள்போல ஒளியும் உருட்சியும், காற்றேறு, மண் ஏறு, கல் ஏறு, நீர்நிலை முதலிய குற்றமில்லாமையும், கையினல் எடுத்தால் கெட்டியாயும் கண்ணுக்கு நன்ருய் இருத்தலும் ஸ்படிகம்போல் இருத்தலும் உயர் நன்முத்தின் குணங்களாம். இவ்வாறு குணங்களும் ஒருங்கு அமைந்த முத்துக்களை அணிந்தால் மூதேவியும் தரித்திரமும் அணிபவரைவிட்டு நீங்குமென்றும், லட்சுமியும் செல்வமும் ஆயுளும் பிரபலிக்குமென்றும் பெரியோர் கூறுவர்.

> " உடுத்திரள் அனைய காட்சி,
> உருட்சி,மா சின்மை, கையால்
> எடுத்திடில் திண்மை, பார்வைக்
> கின்புறல், படிகம் என்ன
> அடுத்திடும் குணம் ஆறு. இன்ன
> அணியின் மூதணங்கோ டின்மை
> விடுத்திடும் திருவந் தெய்தும்
> விளைத்திடும் செல்வம் வாழ்க்கை."
>
> —திருவிளையாடற் புராணம்

எவ்வளவுக்கெவ்வளவு வெண்மை, பளபளப்பு, திரட்சிகளங்கமின்மை, நல்லநீர் முதலியவற்றுடன்கூடி ஒரு முத்து இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது விலை உயர்ந்ததாகும். ஏறக்குறைய ஓர் அங்குல கனமும் இரண்டு அங்குலத்திற்கு அதிகமான நீளமும் உள்ள முத்து ஒன்று அராபியாவில் பதினெருலட்ச ரூபாய்க்குச் சமீபத்தில் வாங்கப்பட்டது. சர்வ லக்ஷணங்களும் பூரா அமைந்தமுத்து இந்திய முத்தே எனத் தெரிகிறது. இம்முத்தில் ஒன்று தற்காலம் மாஸ்கோ (Moscow) பொருட்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் எடை 28-காரெட்டுகள்.

### 7. முத்தின் குற்றங்கள்

> " தங்கிய முள்ளறு, முகம் கறுத்தல், செந்நீர்
> சார்வன, மண்ணறு இடப்புத், திருநல்கோணை
> மங்குறுசிப்பிப் பற்று,க் காகவன்னி,
> மருண்டிருத்தல் "

என்னும் பத்துக்குற்றங்கள் முத்துக்கு உண்டெனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமுடையார் கூறுகின்ருர்.

### 8. முத்தின் அழிவும் அதனை உயிர்ப்பிக்கும் விதமும்:—

முத்து உயிருள்ள பிராணியிடத்துத் தோன்றிய உயிரற்ற பொருளாக இருந்தும் அதற்கு அழிவும் இறப்பும் உண்டு. முத்து க்ஷீணிக்கும் என்ற விஷயம் நமது முன்னேர்கள் நன்கறிந்திருந்தனர். மேற்றிசையோர்க்கு இவ்விஷயம் வெகுகாலமாகத் தெரியாது. சமீபத்தில்தான் அவர்கள் இவ்வுண்மை அறியலாயினர். முத்தின் அழிவிற்குக் காரணம் பல. அவற்றுள் சில கூறுவாம்:—முத்துக்கு ஊட்டம் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டுமாம். உயிர்ப்பிராணிகள் உணவில்லாமற் போனல் வாடி வருந்திச் சாதல்போல் முத்தும் உணவில்லாவிடில் வரவர வளமை வனப்பாதிய குன்றி வாடிச் சாகுமாம். மெல்லியலாரின் மிருதுவான தோலின் கண் உள்ள ஓர் வகை உயிருள்ள சத்தையே முத்து உணவாகக் கொண்டு பிழைக்கின்றதாம். முத்தை ஸ்திரீகள் சதைப்பற்றுள்ள இடங்களிலேயே அணிந்துகொள்ள வேண்டுமென்று ரத்நப் பரீக்ஷகர் கூறுவதை நாம் நாளும் கேட்கிருேமன்ருே? ஆயினும் முத்துத் தரித்துக்கொள்ள யோக்கியதையே யில்லாத சில ஸ்திரீகள் உளர்.

ஏனெனில் முத்துக்களுக்கு ஸ்பரிச உணர்ச்சி மிகுதியும் உண்டு. ஆதலின் அவற்றைத் தரித்துக்கொள்ளும் சில ஸ்திரீகளின் மார்பாதிய இடங்களில் அவற்றின் ஆகாரத்திற்கு வேண்டியனவாகாதனவும் அவைகட்கே தீமை செய்வனவுமான வஸ்துக்கள் இருக்குமாம். இஃதுண்மையென்பதை வேறு சில விஷயங்களைக்கொண்டு விளக்கிக் காட்டலாம். வைடூரியத்தைச் சில ஸ்திரீகள் அணிந்தால் என்ன ஜொலி ஜொலிக்கிறது? அதே கல்லை வேறு சில ஸ்திரீகள் அணிந்தால் அது உயிரற்ற களிமண்மாதிரி ஆகிவிடுவதைக் காண்கிறோமன்றோ?

ஆகவே, முத்து முதலிய இரத்தினங்கள் மங்கிச் சாவதற்கும் "டால்" வீசி ஜ்வலிப்பதற்கும் ஸ்திரீகளின் அங்க இயலே காரணமென நன்கு தெரிந்துகொண்ட மேற்றிசை ரத்தின வியாபாரிகள், சில தக்க ஸ்திரீகளை ரத்தினம் அணிந்துகொள்வதற்கென்றே கூலிகொடுத்து வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். ஆ! இவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள்! முத்தை அணிவதற்கு அருகரல்லாத ஸ்திரீகளிடமிருந்து, அவர்கள் அணிந்ததால் மங்கி நிறங்கெட்ட முத்துமாலையை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி அம்மாலைகளையும், தம்மால் ஏற்கனவே புதிதாய் வாங்கப்பட்டும் ஊட்டமில்லாக் குறையால் வாடி நிறங்குன்றி இருக்கும் மாலைகளையும் இந்தக் கூலிக்கார ஸ்திரீகளுக்கு அணிந்து, முத்தைக் கூடியமட்டும் முன்னிலையுறச் செய்து விற்றுப் பெருலாபம் பெறுவர். இம்மர்மத்தை அறிந்த பிரபுபத்தினிகள் பலர் தாம் முத்துக்களணியத் தகுதியற்றவர்களெனக் கண்டுகொண்டபோதெல்லாம் அவற்றைச் சிலகாலம் தமது தோழிமார் மார்பிற் பூட்டிவைத்திருந்து அவர்கள் அணிதலால் அவற்றிற்குக் காந்தியும் பளபளப்பும் வந்தவுடன் தாம் அணிந்து வருகின்றனர். நிற்க.

தக்க ஸ்திரீகள் அணிந்தும் கூட, துலக்கமுறாது க்ஷீணிக்குந் தன்மையுள்ள முத்துக்களுமுண்டு. இத்தகைய முத்துக்களை உயிர்ப்பிக்க இரத்தினப் பரீக்ஷையிற் றேர்ந்தோர் ஓர் உபாயம் செய்து பார்ப்பர். இவ்வுபாயத்தால் பெரும்பான்மையும் காரிய சித்தி உண்டாம். அவ்வுபாயமாவது:—கடல் நீர் தாராளமாய் உட்புகுந்து ஓடிக்கொண்டிருக்கும்படியாய் இடுக்குகள் பல வாய்ந்திருக்குமாறு இருப்புக் கம்பிகளால் இணைத்துச் செய்த ஓர் கூண்டில் முத்துக்களைச் சாவதானமாய் வைத்து அக்கூண்டைக் கடல் நீரில் சில மாதங்கள் அமிழ்த்திவைப்பதே. இவ்வாறு செய்தால் ஒளிகுறைந்த முத்துக்கள் முன்போற் பிரகாசமுறும் என்பதற்குப் பின்வரும் விஷயங்களே போதிய சான்றாகும்:—

நமது மாஜி மகாராணியாராகிய அலெக்ஸாண்ட்ராவுக்கு முத்துப் பைத்தியம் மிகுதியும் உண்டாம். அவர் சேர்த்து வைத்திருக்கிற மாதிரி பலவகைப்பட்ட முத்துக்கள் எவருமே இதுவரைச் சேர்த்து வைத்ததில்லையாம். அவர்க்கு முத்துக் கிரீடமும், முத்து உடையும், முத்து அரைக்கச்சும் உண்டு. அவர் பாதாதிகேசபரியந்தம் முத்துடை தரிக்குங்கால் அவரிடம் காணப்படும் முத்தை மதிப்பிட்டால் அவை நான்கு லட்சம் பவுன் ஆகும் என்று கூறுகின்றனர். இவற்றைத் தவிர இனி "உருப்படாது" என்று ஒதுக்கப்பட்டவை இரண்டு லட்ச ரூபாய் பெறும்படியான முத்துக்களாம். இவை தரித்துக்கொள்ளாமல் உள்ளே வைக்கப்பட்டதால் கேடுற்றவைகளாம். சமீபத்தில் அவருடைய முத்தாரம் ஒன்று நிறம் மங்கிப் பிணியுற்றதாம். ஓர் பிரபல ரத்தினப்பரீக்ஷகனிடம் அது கொண்டுபோகப் பட்டபோது அதை அவன் பரீக்ஷித்தறிவதாய்ச் சொல்லிப் பெற்று எவரும் அறியாமல் முன்பு நாம் சொல்லியபடி ஓர் கூண்டுக்குள் போட்டுச் சமுத்திர ஜலத்தில் 3 மாதம் போட்டு வைத்திருந்து பிறகு எடுத்துப் பார்த்த போது, அது குறை எதுமின்றி முத்துக்கு உரிய லட்சணங்கள் யாவும் பூரா அமைந்து முன் போல் ஜ்வலித்துக்கொண்டிருக்

கக் கண்டு அதி சந்தோஷத்துடன் அதனை அரசியிடம் தந்தானும்.

இது சம்பந்தமாய் மற்றுமோர் உதாரணங் கூறி முத்து நோயைப் பற்றியவிஷயத்தை நிறுத்துவோம்: சமீபத்திற்காலஞ்சென்றஆஸ்திரியா தேசத்து ராணியாகிய எலிஸபெத் அஸ்திஜ்வர (Typhoid Fever) த்தினுல் வருந்திக் கொண்டிருந்தபோது, பலகோடிப் பவுன் விலையுள்ள அவள் முத்துமாலை நிறங்குன்றிக் கறுக்க ஆரம்பித்தது. உடனே அது ரத்தினப் பரிசோதகர்களால் வட்டிரியாட்டிக் கடலில் ஓர் குறிப்பிட்ட இடத்தில் கொண்டுபோய்ப் போடப்பட்டது. அன்றுமுதல் நாளைவரை அம்முத்துமாலையைக் கவர்ன்மெண்டாரின் கடற்படை இரவும் பகலும் காத்துவருகிறது. இவை சரித்திர பூர்வமாக நம் காலத்தவர்களே நன்கறிந்த விஷயம். இரத்தின சோதனை நிபுணர்கள் அம்முத்தாரம் முன் இருந்த நிலைமையுற மூன்று வருஷங்களாவது ஆக வேண்டுமென அபிப்பிராயப் படுகின்றனர். நிற்க.

முத்துக்கு உறும் பிணியையும் அதற்கான நிவர்த்தியையும் பற்றி நாம் எழுதிக்கொண்டு வரும்போது ஓர் பரிதாபகரமான விஷயம் நம் ஞாபகத்திற்கு வருகிறது. அதனை நமது நேயர்களுக்கு அறிவிக்காமல் இருக்க மனம் வரவில்லை. அவ்விஷயம் வருமாறு.—

பிரான்ஸ் தேசத்து ராஜதந்திர நிபுணராகிய தியர்ஸ்(Thiers)என்பவரின்மனைவிக்கு7,50,000 ரூபாய் பெறும்படியான முத்துமாலை ஒன்றுண்டு. அம்மாலை அந்நாட்டார்க்கு அவ்வம்மையின் ஞாபகார்த்தமாகக் கொடுபட்டு விட்டது. இப்பொழுது அது லவர் (Lowvre) பொருட்காட்சி சாலையில் இருக்கிறது. அதற்கு எவராலும் உணர்ந்தறிந்து கொள்ள முடியாத ஓர் நோய் பற்றி நாளுக்குநாள் க்ஷீணித்து வருகிறது. ஆதியில் 7,50,000 ரூபாய் பெற்ற அம்மாலை இப்பொழுது5,000ரூபாய் கூடப்பெறுதென ரத்தினப் பரீக்ஷகர்கள் கருதுகின்றனர். இவ்வாரத்தை உத்தம ஸ்திரீகள் அணிந்தால் ஒருவேளை அழிந்திறந்த முத்துக்கள் போக அழியாது எஞ்சிய சிலவேனும் முன்போல் ஒளிபெற்றுப் பிழைக்கும் என்று மேனுட்டு நிபுணர்களெவ்வளவோ சிபார்சு செய்தும் அவ்வாறு செய்யக் கூடாமலிருக்கிறது. ஏனெனில், "விநோதரஸ மஞ்சரி"யில், பரமார்த்த குருவின் வாக்கைப் பரிபாலனம் செய்த அவரது சிஷ்யர்களைப் போன்று, பிரஞ்சு கவர்ன்மெண்டாரும் **தியர்ஸ் அம்மையின்** வாக்கைப் பரிபாலனம் செய்து வருகிறார்கள். "அம்முத்துமாலை அது வைத்திருக்கப்பட்ட பெட்டியை விட்டு **எக்காலத்தும் எக்காரணத்தை யிட்டும் எடுபடக் கூடாது**" என்ற நிபந்தனையின் பேரில் அவ்வம்மையால் கொடுபட்டிருப்பதால், அவர்கள் அதனை அதன் இருப்பிடத்திலேயே வைத்து அநியாயமாய் அழித்து சாகவிட்டு வருகின்றனர். அந்தோ! தியர்ஸ் அம்மை என்ன நோக்கத்துடன் அவ்வித நிபந்தனை ஏற்படுத்தி யிருக்கக்கூடும் என்பதை இவர்கள் யோசிக்க வில்லையே. நாளுக்கு நாள் அம்முத்துக்கள் கறுத்துச் செத்த ஆட்டுப் பல்லின் நிறமடைந்து வருகின்றனவாம்.

## 9. உபயோகங்கள்

(1) முத்து பல தேசத்தாராலும் ஆடவர் பெண்டிர் இளையோர் முதியோர் என்ற வற்றத்தாழ்வின்றி அலங்காரத்திற்காக அணியப்படுகிறது. பெண்கள் புலாக்கு, கொப்பு, மூக்குத்தி முதலிய ஆபரணங்களில் அவைகளைப் பதித்தும், மாலையாகக் கோத்தும் அணிவர். சிலர் கடுக்கன் மோதிரம் முதலியவைகளில் அவற்றைக் கட்டி அணிவர். ஸ்வாமிக்கும் ராஜாக்களுக்கும் செய்யப்படும் கிரீடங்களில் முத்தை விசேஷமாகக் காணலாம்.

(2) இஃதொரு அரியவியாபாரச் சரக்காயிருப்பதால் வணிகர்க்கு இதனுல் பெருத்த லாபம் உண்டு.

(3) முத்து ஓர் மருந்துச் சரக்காதலின் பொடி முத்துக்களைச் சீனரும் இந்தியரும் புடம்

போட்டு பிற மருந்துடன் கூட்டி விற்றுப் பணம் பெறுவர்.

(4) மேற்றிசையோரிற் பலர் பவளத்தைக் கொள்வது போலவே, சிலர் மலடு நீங்கவும் திருஷ்டிகழியச் செய்யவுங் கூடிய ரக்ஷையாகக் கருதி உபயோகிக்கின்றனர்.

(5) நகைகளுக்கு உபயோகிக்க முடியாத கடுகுபோன்ற 'விரை' முத்துக்களைச் சில தனவான்கள் வாங்கிச் சுட்டுச் சாம்பலாக்கித் தாம்பூலத்துடன் அருந்துவர்.

(6) தென் ஐரோப்பாவில் உள்ளோர் முத்துடன் சில பொருள்கள் சேர்த்து ஓர் வகைத் தைலம் எடுத்து அதனை முகத்தில் பூசிக்கொள்வார்களாம். அவ்வாறு செய்வதால் அவர்கள் நரைத்தலையராங் காலத்தும் முகத்திரை காணுதாம்.

(7) முத்துச் சிப்பிகள் நானுவித பொத்தான்கள் செய்யவும் அநேகவிதமான அலங்கார வேலைகள் செய்யவும் உபயோகமாகும். நிற்க.

### 10. நித்திலம் உணர்த்தும் நீதிகள்

இனி முத்து சம்பந்தமாய்த் தாமாக விளங்கக்கூடியவையும், அன்றி, உய்த்துணரத்தக்கவையுமான அறிய நீதிகள் சில இங்குரைத்தல் மிகையாகாதென்று எண்ணுகிறோம்.

(1) * "அளவிடவும் முடியாத ஆழ்கருங் கடலினுக்
கடியினுட் குகையினுள்ளே
அதிசுத்த மானபிர காசஒளி உமிழ்கின்ற
அரியமணிபல உறுதல்போல்
ஒளியபுக ழோடுதித் தும்தமது பெருமையும்
உறைவிடமும் ஒருவராலும்
உணரமுடி யாதபடி மறைநிலையில்உத்தமர்கள்
உறைவர் பலர்" என அறியலாம்.

(2) "பொங்கு திரைக்கடல்மேல் புன்துரும்பேதோன்
றுதல்போல்
இங்கெவர்க்கும் தோன்றும் இழிகுணமே-அங்
குயர்ந்த
முத்தெடுக்க வேண்டுபவர் மூழ்குவது போல்மூய
உத்தமகுணம்வெளியா கும்." வின்

இதன் கருத்து என்னவெனில், சமுத்திரத்தில் பார்ப்போர் கண்ணுக்கு எளிதில் தென்படுவன அதில் மிதக்கும் இழி துரும்புகளே. அதுபோல, ஒருவனுடைய தவறுகளே மேலெழுந்த பார்வையுடன் நோக்குவார் கண்ணுக்குப் புலப்படும். ஆனல் அதில் முத்தை நாடுவோன் அப்புன் துரும்புகளைப் புறம்பே தள்ளி, அடியில் ஆழ்ந்து நோக்கல் போல் நோக்கினுல்தான் அவனுடைய நற்குணங்கள் நன்கு விளங்கும் என்பதே.

(3) விலையேறப்பெற்ற நன்முத்து உவர் நீரும் புலால் நாற்றமுங்கொண்ட கடலில் சிப்பி வயிற்றிற் றோன்றுவது போலவே நற்குண நற்செய்கையுடைய பெரியோர் இழிகுலத்திலும் தோன்றல் இயல்பு. இதுபற்றி யன்றோ

"கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும் மான் வயிற்றின்
ஒள்அரிதாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவாரியார்
நல்லாள பிறக்கும் குடி?
என்னப்பட்டது?

(4) நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும் என்ற பழமொழியும் இவ்வுண்மையை வலியுறுத்துகின்ற தென்னலாம்.

(5) "ஆக்கும் அறிவான் அலது, பிறப்பினுல் மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க." என்ற நீதியையும் முத்து கற்பிக்கின்றது. எவ்வாறெனில், முன்பு உரைத்தபடி "சேயார் முகத்துச் சென்றுதைக்கு கழிமுடைப் புன்புலால் நாற்றம்" புறம் பொதிந்தும் அகம் வதிந்தும் உள்ள சிப்பியில் தோன்றிய காரணத்தால், முத்தை இழிவு படுத்துவார் எவருமிலர். அதன் உயர்ந்த தன்மையையே எவரும் பாராட்டுவர். அதுபோல அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரி

° Full many a gem of purest ray serene
The dark unfathomed caves of ocean bear—Gray

° Errors like straws on the surface flow
He who would search for pearls must dive below—
Dryden.

யோர்கள் இழிகுலத்தில் தோன்றினும் அவர்களது குணஞ் செயல்களைப்பற்றிப் பாராட்ட வேண்டுமேயன்றி அவர் தோன்றிய குலத்தின் இழிவு கருதி இகழலாகாது. நீதிவெண்பாவிலும்,

"தாமரை பொன் முத்து சாமரைகோரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகு சவ்வா-தாம் அழல்மற்
றெங்கே பிறந்நாலு மெள்ளரோநல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்?"

என்று கூறி இருத்தல் காண்க.

(6) மழைத்துளி ஒன்று பழுக்கக் காய்ச்சிய இரும்பிற் படுமாயின் தன் உருவமே தெரியாமல் மறைந்து சுவருகின்றது. அதே மழைத்துளி தாமரை இலைமேல் தங்குமாயின், நீர் உரு நீங்கி முத்தின் உருக்கொண்டு விடுகிறது. அம்மழைத் துளியே ஆடிமீ சுவாதி நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்பொழுது சிப்பியின் அகட்டில் விழுமாயின் மிக்க வனப்பும் விலையும் வாய்ந்த முத்தே ஆகிறது. இதனால் அறிவும் பெருமையும் கொடையும் நட்பும் அதமர்சேர்க்கையால் அயர்ச்சியும் அழிவும், மத்திமர் சேர்க்கையால் மகிமைத் தோற்றமும் உத்தமர் சேர்க்கையால் உயர்ச்சியும் பெருமையும் உறலாகும் என்பது புலப்படும். இவ்வாறே சிநேக பாத்திரத்தைப் பற்றிச் சொல்லும் காலையில் பர்த்ரு ஹரியார்,

"காய்ந்தகரும் பொன்வாவிக்
கமலஇலை கடற்சிப்பி
தோய்ந்தநீர் பெயர்கெடல், மேல்
தோன்றல் முத்துந் தோன்றிடல்போல்
வாய்ந்தஅதமன் மத்திமன்உத்
தமர் தம்பால் மருவினர்கள்
ஆய்ந்தமேற் சொன்னபடி
அனுபவிக்கப் பெறுவாரே"

எனக் கூறி யிருக்கின்றனர்.

இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும் சிந்திப்பதற்காம் சில குறிப்புடையது. சற்குண முடையோர் சற்றும் பயனிலா அற்பப் பொருளினும் அறநெறி காண்பர்.

ம. கோபாலகிருஷ்ணையர்.

## யானைகள்

### ELEPHANTS

மிஸ் கோர்டன்கம்மிங் (Miss Gorden Comming) இரண்டு வருஷகாலம்தான் இலங்கைத் தீவில் இருந்து தான் இலங்கை முழுவதும் நன்றாய்ச்சுற்றிப் பார்த்ததில் தனக்கு அங்கிருக்கும் யானைகளைப் பற்றியும், அவைகள் என்ன தன்மையுடையதாயிருக்கிற தென்பதையும் அவைகள் என்னவிதமாய் உபயோகப்படுகிற தென்பதையும், மற்ற தேசங்களிலுள்ளவைகளுக்கும் அவைகளுக்கும் என்ன வித்தியாச மிருக்கிற தென்பதைப்பற்றியும் கூறி யிருப்பதில் சிலவற்றைச் சுருக்கமாய் உரைப்போம்:—

இலங்கையில் யானைவேட்டை யாடுவதற்கும் ஆப்பிரிக்காவில் யானைவேட்டை யாடுவதற்கும் வெகு வித்தியாசமுண்டு. ஆசியாக் கண்டத்திலுள்ள யானைகள் சிறிதாகவும், தந்தங்களுள்ளவை சொற்பமாயிருக்கிறது. ஆனால் ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள யானைகள் மிகப் பெரிதாயும், பருத்து நீண்ட தந்தங்களையுடையதாயு மிருக்கின்றன. மேஜர் ரோஜர் (Major Roger) என்பவர் தான் இந்தியாவில் கொன்ற அநேக யானைகளில் ஒரு சுமார் 60 யானைகளுக்கு மாத்திரம் தான் ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு சாதாரண யானைக்கு எவ்வளவு நீள தந்தமிருக்குமோ, அவ்வளவு நீளதந்தம் இருந்ததாம். இந்தியாவிலும் இலங்கைத்தீவில் போலவே, பெண் யானைகளுக்குத் தந்தம் கிடையாது. ஆண் யானைகள் அநேகமாய் தந்தமுள்ளதாயிருக்கும். ஆனால் ஆப்பிரிக்காவிலோ தந்தமில்லாத யானையைக் காண்பது மிகவுமரிது. ஆண் யானைகளுக்கும் பெண் யானைகளுக்கும் தந்தங்கள் உண்டு. தென் ஆப்பிரிக்காவில் ஒரு யானைக்கு 10 அடி 8 அங்குல நீளமுள்ள தந்தமிருந்ததாயும் அது 173 பவுண்டு நிறை யிருந்ததாயும் தெரிகிறது. ஆனால் இந்தியாவிலோ ஒரு தந்தமானது 5 அடி நீளமிருந்து 36பவுண்டு நிறையுள்ளதாயிருந்தால்

183 2508. XX. A. 18 4



அது மிகவும் உயர்ந்ததாகக் கொள்ளப்படுகிறது.

இதுவும் தவிர ஆப்பிரிக்காவிலுள்ள யானைகளுக்கும்இந்தியாவிலுள்ள யானைகளுக்கும்வேறு வித்தியாசங்களுமுண்டு. ஆப்பிரிக்கா யானைகளுடையநெற்றி முன்தள்ளிநீண்டும்,கபாலம் உயரமாயுமிருக்கும். அவைகளுடைய அகண்டு நீண்ட காதுகள் தோள்வரையிலும் படக்கூடியதாயிருக்கின்றன. ஆனால் இந்தியாவிலுள்ள யானைகளில் நெற்றியானது கொஞ்சம் பள்ளமாயும், தலைஉச்சியில் கபாலம் அமுங்கியும் இருபுறமும் புடைப்புள்ளதாயுமிருக்கின்றன. இதுவும் தவிர யானைகளும் சிறியனவாயும், அவைகளின் கால்கள் உடம்பின் பருமனுக்குத் தகுந்த நீளமில்லாததாயும் இருக்கின்றன.

இலங்கைத்தீவின் யானைகளுக்கும் இந்தியாவிலுள்ள யானைகளுக்குமே ஓர்விதமான முக்கிய வித்தியாசம் காணப்படும். இலங்கைத் தீவிலுள்ள யானைகள் சுமட்ரா (Sumatra) தீவிலுள்ள யானைகள்போலவே, இந்தியாவிலுள்ளவைகளை விட சிறியதாயிருந்தபோதிலும் ஒரு விலாவெலும்பு (rib) அதிகமாயும் அந்த விலாவெலும்பு பொருந்தும் முள்ளெலும்பு (Dorsal vertebra) ஒன்று அதிகமாயுமிருக்கிறது. அதாவது இந்தியாவிலுள்ள யானைகளுக்கு 19 பளுவெலும்புகள் இருக்கின்றன. ஆனால் இலங்கையிலிருப்பனவற்றிற்கு 20 பளுவெலும்புகள் இருக்கின்றன.

இது இப்படியிருக்க, உயர வித்தியாசத்தைக் குறித்துப் பார்ப்போமானால் கர்னல் பார்ப்ஸ் லெஸ்லி (Col. Forbes Leslie) என்பவர்தான் 11 வருஷகாலம் இலங்கையில் யானை பிடிக்கும் உத்தியோகத்திலிருக்கும்போது பிடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான யானைகளில் 3 யானைகள்மாத்திரம்தான் 9 அடி உயரமிருந்ததாகச் சொல்லியிருக்கிறார். இந்தியாவிலும் மிஸ்டர் சாண்டர்சன் (Mr. Sanderson) என்பவர் யானைகளைக் குறித்த சமாசாரங்களில் நல்ல தேர்ச்சியுள்ளவர் அவர் கூறியிருக்கிறது தான் அளந்து பார்த்த அநேக யானைகளில் எல்லாவற்றினும் உயரமாயிருந்தது 10 அடி 7½ அங்குல உயரமிருந்ததாம். ஆனால் ஆப்பிரிக்காவில் 20 அடி உயரமுள்ள யானைகளிருந்ததாயும் ரிக்கார்டுகள் இருக்கின்றதாம். ஆனால் அது முழுதும் நம்பத்தக்கதல்ல, அதிகப்படுத்திச் சொல்லப்பட்டதாக இருக்குமென்று தெரிகிறது. அது எப்படியிருந்தாலும் சரி, ருசியா தேசத்தில் செண்ட் பீடர்ஸ்பர்க் (St. Petersburg) நகரத்தில் உள்ள கண்காட்சி சாலையில் ஒரு யானையின் எலும்புக்கூடானது 16 ½ அடி உயரமிருக்கிறது. அது பெர்சியாதேசத்தரசனால், பீட்டர் (Czar Peter) என்னும் ருசியா சக்கிரவர்த்திக்கு அனுப்பப்பட்ட யானையின் எலும்பாகத் தெரிகிறது. இந்தியாவில் ஜப்பல்பூர் என்கிற இடத்தில் யானைகள் புதைந்து போயிருந்ததை வெட்டிப் பார்க்கும்போது தோள் உயரம் அளந்துபார்த்ததில் அவைகளின் எலும்புகள் 15 அடி உயரமிருந்தன. இங்கிலாந்தில் லண்டன் நகரத்தில் ஆக்ஸ்போர்ட் (Oxford) விநோதசாலையில் ஒரு யானையின் துடையெலும்பும் முள்ளெலும்பும் இருக்கிறது. அவைகளின் பருமனையும் நீளத்தையும் கவனித்துப் பார்த்தால் அந்த யானையானது சுமார் 16 அடி உயரத்துக்குக் குறையாமல் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

பி. அர். வெங்கடேசலு நாயுடு.

திருவருள் —ஒரு பக்தன் பகவந் நாமத்தை மௌனமாய் உச்சரித்துக்கொண்டு ஸதா ஜபமாலை மணிகளை எண்ணிக்கொண்டிருப்பது வழக்கம். அவனைப் பார்த்துப் பரமஹம்ஸர், “நீ என் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கிறாய்? வெளியே சென்று சஞ்சரிக்கலாமே” என்று கேட்டதற்கு, அந்தப் பக்தன், “அவன் அருளின்றி அவ்வாறு முடியாது” என்றான். அதற்குப் பகவான் “கடவுளின் திருவருளாகிய தென்றற் காற்று இரவும் பகலும் உன் தலைமேல் வீசிக்கொண்டிருக்கிறது. சம்சாரத்தினின்று சீக்கிரம் கடைத்தேற வேண்டுமானால் உன் மனமாகிய படகின் கப்பற் பாயை யவிழ்த்து விரித்துவிடு” என்றார்.

## நியாயமாலை

### POPULAR MAXIMS EXPLAINED

अन्धकूपपतनन्यायः

### 6. அந்தகூபபதனநியாயம்

'கல்லும் முள்ளும் நிறைந்தகாட்டின் வழியாக ஒரு குருடன் போய்க்கொண்டிருந்தான். அவன் பட்ட கஷ்டத்தைக் கண்ணுற்ற தயை நிறைந்த ஒருவன், அவனைப்பிடித்து அழைத்துக்கொண்டு போய் நல்ல வழியில் விட்டான். அக்குருடனே அவ்வழியை விட்டு விலகி முன்போலக் கஷ்டமான வழியில் பாய்ந்துசென்று முடிவில் பாழும் கிணற்றில் விழுந்தான்' என்ற கதையிலிருந்து வந்தது இந்நியாயம். பிறர்கூறும் நற்புத்திகளைக் கேளாது கெட்டவன் தான் போகும் வழியே சென்று மாறு துயரத்திற்கு ஆளாகும்பொழுது இந்நியாயத்தை உபயோகப்படுத்தலாம். பீஷ்மர், துரோணர், விதுரர், திருதிராஷ்டிரன் முதலிய உறவினர்களும் பெரியோர்களும் என்ன சொல்லியும் கேளாது, பிடிவாதமாகப் பாண்டவர்களுக்கு ஊசி நிற்குமிடம் கூடக் கொடுக்கமாட்டேன் என்று வீம்பு பிடித்துப் பாரதப்போர் விளைத்த துர்யோதனனும் தகப்பனுகியவிச்ரவஸ்ஸின்வாக்கிற்குமீறித் தமையனையும் உலகையும்வருத்திய ராவணனுமேஇந்தநியாயத்திற்குத்திருஷ்டாந்தம்

अन्धगजन्यायः

### 7. அந்தகஜநியாயம்

அநேக குருடர்கள் ஓரிடத்தில் கூடினர். அவர்களுக்கு யானையைக் காணவேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அருகே ஒருயானைப்பாகனிருப்பதைக் கேள்விப்பட்டு அவனிடம் சென்று யானையைத் தமக்குக்காட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அப்படியே அவன் யானையை அவர்கள் அருகில் கொண்டுவந்து நிறுத்த ஒவ்வொருவரும் அதன் அங்கம் ஒவ்வொன்றையும் தடவிப்பார்த்து விட்டு திருப்தி அடைந்தனர். யானைப்பாகன் போனபின்பு தாம் கண்ட காட்சியை ஒவ்வொருவரும் எடுத்துரைக்கத்தொடங்கினர். 'யானை உலக்கைபோலிருந்தது' என்றுன் அதன் துதிக்கையைத் தொட்டுப்பார்த்தவன். 'அப்படியல்ல அப்பா! யானை தூண்போலல்லவா இருந்தது' என்று திருத்தமாகக் கூறினன் அதன் காலைப் பிடித்துப் பார்த்தவன். 'இதென்ன இப்படிச்சொல்லுகிறுய்! நான் பார்க்கவில்லையா! என்ன. அது முறம் போலத்தான் இருந்தது' என்று மறுத்துரைத்தான் அதன் காதைத் தொட்டுப்பார்த்தவன். அதன் வயிற்றைத் தடவிப்பார்த்தவனே 'இதென்ன! உங்கள் கண்தான் குருடென்றால் மற்றை இந்திரியங்களும் ஊனமா என்ன! நான் நன்ருகத்தான் பார்த்தேன். யானை தண்ணீர் நிறைந்த கொப்பரைபோலவே இருந்தது' என்று பரிஹாஸமாகக் கூறினன். பார்த்தான் யானை வாலைத்தொட்டவன். அவனுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. 'முழுமூடர்களா. என்ன வீணுக் குதர்க்கம் செய்கிறீர்கள். தெரிந்தால் பேச வேண்டும் இல்லாவிடில் வாயைக்கையைத் திறக்கக்கூடாது. நீங்கள் சொல்லுவதெல்லாம் முழுத் தவறு. நான் பார்த்ததில் அது துடைப்பம்போலத்தான் இருந்தது' என்று இறுமாந்து கூறினன். குருடர்கள் இவ்வாறு தாம் யானையைக் கண்ட காட்சியைப்பற்றி ஓயாத் தர்க்கம் செய்யத் தொடங்கிவிட்டனர். இக்கதையிலிருந்து எடுக்கப்பட்டது இந்நியாயம்.

ஒரு விஷயத்தை முற்றும் கண்டு உணராது, பார்த்தமட்டில் திருப்திபெற்று அதைத் தாம் கண்டபடி வர்ணித்து, மற்றையப் பாகங்களைக் கண்டு வர்ணிப்போருடன் வீண் சண்டைசெய்து ஓயாதர்க்கம் மனஸ்தாபம் இவைகளை உண்டாக்கிக்கொள்ளும் இடத்தில் இந்நியாயத்தை உபயோகப்படுத்தவேண்டும். இந்நியாயத்திற்கு அறைகுறையாக உணர்ந்து தான் கண்டதே உண்மை மற்றைவைகள் எல்லாம் வெறும் பொய் என்று அவேசத்துடன் வாதம் செய்வதே பொருள்.

இந்த நியாயம் பொதுவாக மதவாதிகள் விஷயத்தில் நன்ருகப் பொருந்தும். அவர்கள்

தமது மதம் உண்மை பிறர் மதம் பொய் என்று மதத்துவேஷம் பாராட்டுவது வழக்கம். உண்மையாக நோக்குங்கால் அவர் மதமும் மற்றைய மதங்களும் அவ்வவைகள் போமளவும் உண்மைதான். ஆனல் ஒவ்வொன்றும் பரம்பொருளது ஒவ்வொரு அவஸ்தா பேதத்தைப் பெரிதெனக் கொண்டும் மற்றவைகளைக் கவனிக்காதும் விடுகின்றது யானை எவ்வாறு குருடர் கூறியது எல்லாமாய், ஆனல் அவைகளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் ஜந்துவோ, அதுபோல உண்மையில் பரம்பொருள் 'சமய கோடிகளெல்லாம் தந்தெய்வம் என் தெய்வம் என்றெங்கும் தொடர்ந் தெதிர் வழக்கிடவும்' நின்றதுவாக இருக்கின்றது. கம்பர் பாலகாண்டம் உலாவியற் படலத்தில் ஸ்ரீ ராமபிரான் ஸீதாகல்யாணத்திற்கு முன்னாள் ஊர்வலம் வந்தகாலத்து அத்திருக்காட்சியைக் கண்டு களித்தவர் நிலைமை வர்ணிக்குங்கால்:—

'தோள்கண்டார் தோளேகண்டார்
தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார்
தடக்கைகண் டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே
வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா
னுருவுகண் டாரையொத்தார்'

என்று கூறியதால், இந்நியாயத்தின் கருத்து இவ்வாறு மதவாதிகள் விஷயத்தில் பொருந்தும் என்பது விளங்கும்.

अन्धगोलांगूलन्यायः

8. அந்தகோலாங்கூலநியாயம்

ஒரு குருடன் ஒரு மார்க்கமாகப் போய்க்கொண்டிருந்தான். அவன் தட்டித்தடுமாறிக்கொண்டு போவதைக் கண்ட துஷ்டன் ஒருவன், அவனை வருத்தி வேடிக்கை பார்த்து ஸந்தோஷப்பட எண்ணி வழியில் போய்க் கொண்டிருந்தஎருமை மாட்டின் வாலைப் பிடித்துக் குருடன் கையில் கொடுத்து 'அப்பா நீயோ குருடன். உனக்குப் போக வழி தெரியாது. இதைப் பிடித்துக்கொள் விடாதே. நீ ஸௌக்கியமாய்ப் போய்ச்சேருவாய்' என்று கூறிவிட்டு, வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு ஒதுங்கினன். உண்மைதான் என்று அவன் சொன்னதை முழுவதும் நம்பிக்குருடன் எருமை வாலைப் பிடித்துக்கொண்டு விட்டான். வாலில் கைபட்டதும் எருமைக்குக் குருகுருப்புண்டாக, அது ஓடத்தலைப்பட்டது. நம்பி மோசம் போன குருடன் அதைப் பலமாகப் பிடித்துக்கொள்ள, எருது வெருண்டோடத் தொடங்கியது. குருடன் பிடிபலமாக விருந்ததால் அவன் கீழ் உருண்டு புரண்டுவிட மேலெல்லாம் காயம்பட்டது. வயிறு வெடிக்கச் சிரித்து நின்றான் துஷ்டன். முடிவில் குருடனை எருது குழியிலும் தள்ளி விட்டது. இக்கதையோடு ஸம்பந்தப்பட்டது இந்நியாயம். ஸன்மார்க்கத்தில் போய்க் கொண்டிருக்கும் ஒருவன் உலக வியவஹாரச் சூதறியாது ஒரு லௌகிகப் புரட்டன் மொழியை நம்பி முடிவில் மீளாக்கஷ்டங்களுக்கு ஆளாகுங்கால் இந்நியாயத்தை உபயோகப்படுத்தவேண்டியது. ஷேக்ஸ்பியர் நாடகங்களுள் ஒன்றாகிய ஒதெல்லோவில் கதாநாயகனான ஒதெல்லோ வென்பவன், தன் உயிர்த்தோழனென்றும், மஹா சுத்தாத்மா என்றும் நம்பி யிருந்த மஹா பாதகனாகிய ஐயாகோ என்பவன் சூதான மொழிகளை நம்பி, ஸீதையைப்போன்ற தன் பெண்சாதியாகியடேஸ்டிமோனவை வீணாக ஸந்தேஹித்து முடிவில் அவளைக் கொன்று, உண்மை வெளியாகத் தானும் இறந்தான். இந்த ஒத்தெல்லோ கதி இந்நியாயத்திற்கு உதாரணம்.

பிளேக் வியாதிக்கோர் மருந்து.—பிளேக் நோய்க்கு மண்ணெண்ணெய் தக்க மருந்தாகு மென்று பார்மியர் கண்டு பிடித்திருக்கிறார்கள். பிளேக் நோய் கண்டவுடனே நோயாளிக்கு 3-அல்லது 4-தேக்கரண்டி மண்ணெண்ணெயை உள்ளுக்குக் கொடுக்கவேண்டுமாம். அதன் பிறகு அதை நக்கிக்கொண்டும் இருத்தல் வேண்டுமாம்.

# சக்திதத்துவ போதினி

**PHYSICS PRIMER**

## ஒளி

**Light**

கண் என்ற இந்திரியத்தைத் தாக்கி வெளி விஷயங்களை அறிவிப்பதற்கு ஸாதனமாக இருப்பது ஒளி என்னப்படும். இது ஸாதாரணமாக வெளிவஸ்துவிலிருந்து நமது கண்ணில் வந்துபடும் ஒருவித சக்தியே ஒழிய கண்ணுள்ளே இருந்து வெளியே செல்லும் சக்தியே அல்ல. இதுவும்சப்தம் உஷ்ணம்போல ஒருவித நடுக்கம். ஆனால் இது உஷ்ணம்போன்றதே ஒழிய சப்தம் போன்றதல்ல. சப்தம் ஊடுருவிச்செல்ல இடை ஆதாரவஸ்து ஒன்று வேண்டும். ஆனால் உஷ்ணத்தைப்போல ஒளியும் இடைஆதாரத்தின் ஸஹாயமின்றி வெளியினூடே பாவிச்செல்லும் குணமுடையது. மேலும் உஷ்ணம் ஒளி உண்டாகும் நடுக்கத்திற்கும் சப்தம் உண்டாகும் நடுக்கத்திற்கும் ஒருவித பேதம் உண்டு. சப்தநடுக்கம் கிளம்பிவிட்டால் போகும்வழியில் நாற்புறம் பரந்து அகன்றுகொண்டு போகும் மார்க்க மட்டத்திலேயே நடுங்கிக்கொண்டு போகும். நேராகப் பரவும் உஷ்ணமும் ஒளியும் அவ்வாறின்றிப் புறப்பட்டு விட்டால் நேராக ஒரேவரியில் போகுமே ஒழிய அக்கம்பக்கம் அகலாது. மேலும் ஒளி நடுக்கம் போகும் மார்க்கத்திற்கு நேர்கோணமான மட்டத்தில் ஏற்படும். ஒளி நேராகப் போகிறது என்பதை எளிய சோதனையால் காட்டலாம். ஒரு நேரான நீண்ட குழாயின் மூலமாக வெளியே நோக்கினால் அதற்கு நேரே எதிரே இருக்கும் வஸ்துக்கள் தென்படுமே ஒழிய மற்றையவைகள் காணப்படா. இதன் மூலமாக ஒரு வஸ்துவை நோக்கவேண்டுமாகிலும்இந்தக்குழாயை அதற்கு நேராகப் பிடித்து நிறுத்தினால் தான் முடியும். ஆகவே வெளிவஸ்துக்களிலிருந்து ஒளி நேராகவே எல்லாப்பக்கங்களிலும் புறப்பட்டுப் பரவுகின்றது என்பதாயிற்று.

இந்தக் காரணத்தால்தான் ஒளிக்கிடையில் ஒரு கல் முதலிய சில வஸ்துக்களைக் கொண்டு வந்தால் நிழல் விழுவதும், சிறுத்துவாரங்கள் மூலமாகத் தலைகீழ் உருவம் தோன்றுவதும். நேராகப்போகும் ஒளி, கல் முதலிய வஸ்துவால் தடைபட கல்லைப்போன்ற ஒளி விடாப் பாகம் பின்னுள்ள திரையில்விழும். திரையின் மற்றையப் பாகங்களில் ஒளிப்பிரகாசிப்பதாலும், கல்லால் மறைக்கப்பட்ட பாகம் ஒளி இழந்திருப்பதாலும் வேற்றுமையால் நிழல்தென்படுகின்றதே ஒழிய அதனுள்ளிருந்து நமது கண்களில் ஒளிவந்து தாக்குவதில்லை. ஒன்றற்கு ஒன்று குறுக்கே பாயும் நேர் கோடுகள் ஒழுங்கின்படி தடுக்கும் வஸ்துவைவிட சிறிய ஒளி ஆதாரம் அகலும் நிழலையும், ஸம ஆதாரம் ஒரே மாதிரியான நிழலையும், பெரியது குறுகும் நிழலையும் உண்டாகும். இதுவும் அன்றி நிழல் பாகத்தைச் சுற்றி ஒரு குறை நிழல் பாகம் ஏற்படுவது இங்




குக்காட்டப்பட்டிருக்கும் சித்திரத்தின் மூலமாக எளிதில் காணலாம். ஒளி ஆதாரம் சிறு புள்ளியாக விருப்பின் இக்குறை நிழல் ஏற்படாது. இவைகளால் கிரஹண விஷயம் விளங்கும். கண்ணாடி அப்ரேகம் முதலிய வஸ்துக்களை ஒரு ஒளிவிடும் வஸ்துவுக்கு எதிரே கொண்டுவந்தால் நிழல் விழாது ஒருவித மங்கல் மாத்திரம் எதிர் திரையில் ஏற்படலாம். கற்பலகை முதலியவைகளைக் கொண்டு வந்தால் நிழல் விழுவதோடுங்கூட நிழற்புறமிருந்து கற்பலகையை நோக்கினால் விளக்கிருப்பதே தெரியாது. எண்ணெய் தடவிய காகிதத்தைக் குறுக்கே பிடித்தால் மங்கல் நிழல் உண்டாகும். ஆனால் நிழற்புறமிருந்து விளக்கை நோக்கினால் காகிதத்திற்கு அப்புறம் ஏதோ ஒரு வெளிச்சம் இருப்பதாகத் தோற்றுமே ஒழிய உருவமொன்றும் விளங்காது. ஆகவே ஒளி விஷயமாக வஸ்துக்களை மூன்று பாகமாய் பிரிக்கக்கூடும். கற்பலகை, இலை முதலியவைகளைப்போல ஒளியை முற்றிலும் தடுக்கும் வஸ்துக்களுக்குத் தடுக்கும் வஸ்துக்கள் என்றும்,

கண்ணாடி போல பெரும்பாலும் ஒளியைத் தடுக்காத வஸ்துக்களுக்கு **ஊடுருவும் வஸ்துக்கள்** என்றும், எண்ணைக் காகிதம் போல முற்றிலும் தடுக்காதவஸ்துக்களுக்கும் **மத்தியமவிளக்க வஸ்துக்கள்** என்றும் பெயர்.

இனி சிறு துவாரங்கள் ஒளி ஸம்பந்தமாகக் காட்டும் அத்புதத்தை விவரிப்போம். நாம் தெரு ஓரமாக இருக்கும் உள்ளில் பகல்காலத்தில் ஜன்னல் கதவுகளைச் சாத்திக்கொண்டிருப்போமாகில் அதிலிருக்கும் சிறு துவாரங்களால் எதிர் சுவரில் சிறிய வெளிச்சங்கள்விழக் காணலாம். இவைகளைக் கவனித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில் ஒருவன் தெருவில் நடந்துபோவனாகில், அவன் போவதால் உண்டாகும் வெளிச்சமாறுபாடு சுவரில் நேர் எதிர்புறமாக நகர்ந்துபோகும். அதாவது அவன் வடக்கே இருந்து தெற்கு நோக்கிப் போனால் உள்ளே தெற்கே இருந்து வடக்கே போவதுபோலத் தோற்றும். இது எல்லோரும் கண்டிருக்கும் விஷயம். மேலும் துவாரத்தருகாமையில் ஒரு அட்டை அல்லது கற்பலகையைப் பிடித்து ஸரிப்படுத்தினால் எதிரே உள்ள தென்னைமரங்கள் எல்லாம் அதில் தலைகீழாகக் காணப்படும். ஒளி நேராகப் புறப்படுமிட மிருந்து வருவதால்தான் இம்மாதிரியான அற்புதத்தோற்றம் உண்டாகிறது. வெளியிலுள்ள தென்னை மரத்தின் அடிநுனிகளிலிருந்து வரும் ஒளி துவாரத்தில் ஸந்தித்துப் பாய்ந்து மேல் கீழாக மாறிக் கற்பலகை வந்து தாக்க தலைகீழ் உருவத்தை உண்டாக்குகிறது. மேலும் தெற்கோரத்தி லிருக்கும் வஸ்துவிலிருந்து வரும் ஒளி துவாரத்தில் புகுந்து உள்ளின் வடக்கோரம் சுவரில்பட வடக்கே இருந்து தெற்கே போகும் வஸ்து தெற்கே இருந்து வடக்கே போவதாக உள்ளே காணப்படுகிறது.



ஒரு இருட்டறைக்குள்ளிருந்துதான் இதைப் பார்க்கவேண்டு மென்பதல்ல. ஒரு அட்டைப் பெட்டி ஒன்றை எடுத்து அதன் மூடியைத் திறந்து அதன் உள்ளளவிற்கு சரியாக ஒரு அட்டையைவெட்டி அதன் மத்திபாகத்தை வெட்டி எடுத்து அதைக் கற்பலகைச் சட்டம்போலாக்குவோம். அதன்மேல் எண்ணெய் காகிதம் அல்லது புத்தகங்களுக்குமேல் அட்டைபிட்டு வரும் மத்தியமவிளக்கக் காகிதத்தை ஒட்டி இடைவெளியை மூடி, ஒருசிறு தட்டிபோலாக்குவோம். அதை அந்தப் பெட்டியின் நடுவில் நிறுத்தி விட்டு, பெட்டியின் பரப்பு குறுகலாகிய இரண்டு எதிர்பாகங்களில் ஒன்றன்மத்தியில் ஊசியால் குத்தி ஒரு சிறு துளையையும், எதிர்புறத்தில் கத்தியால் வட்டமாக நமது கண்கொள்ளும்படியான ஒரு துளையையும் உண்டாக்குவோம். இந்தப் பெட்டியை மேலே மூடி ஊசித் துளையைப் பகலில் எந்த வஸ்துவிற்கெதிரே பிடித்தபோதிலும் எதிர்புறத் துளையில் பார்த்தால் உள்ளிருக்கும் தட்டியில் அதன் தலைகீழ் உருவம் காணப்படும். அது ஒருவேளை மங்கலாகவிருக்கலாம். அதைச் சீர்திருத்த உள்ளிருக்கும் தட்டி சற்று நகர்த்தி வைத்தால் போதும். இந்தப் பெட்டிக்கு **ஊசித்துளைப் படப்பெட்டி** என்று பெயர். இதன் உள் விஷயத்தை இங்கிருக்கும் சித்திரத்தில் காணலாம்.



இவ்வாறு நேராகச் செல்லும் குணமுடைய ஒளிக்கும் ஓரிடம் விட்டு வேறிடம் போகக் கொஞ்சம் நாழிகை யாகின்றதாம். சப்தவிஷயத்தில் நாழிகையைக் கண்டு பிடித்ததுபோல இங்கு எளிதில் காணமுடியாது. கண்ணுக்கெட்டும் தூரத்தில் ஒரு பெரிய விளக்கிட்டால் அது உடனே நமது கண்ணுக்குத்தெரிந்து விடுகிறது. ஆகவே ஒளி ஓடும் வேகத்தை எளிதில் கண்டு பிடிக்கமுடியாது. இதைக் கொஞ்ச நாளைக்கு முன்பிருந்த **ரோமர்** என்ற டானிய வானசாஸ்திரி பின் வருமாறு கண்டுபிடித்தார். ஸூரியனைச்

சுற்றிப்போகும் கிரகங்களுள் பூமியும் ஒன்று வியாழனும் ஒன்று, வியாழனுக்கு 5 சந்திரன்கள் உண்டென்பது தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக எளிதில் வெளியாகும். இவைகளுள் ஒன்று ஒழுங்காக வியாழனை 42 மணி, 28 மிநிட் 36 ஸெகெண்டில்ச் சுற்றி வருகிறது. மேலும் ஒவ்வொரு சுற்றிலும் இது வியாழன் நிழலுள் புக இதற்குக் கிரஹணம் பிடித்து விடுகிறது. ரோமர் என்பவர் பூமியும் வியாழனும், ஒரே ராசியில் அருகாமையிலிருக்கும் தருணம் கண்டு இந்த வியாழனது சந்திரனைத் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக விடாது கொஞ்ச நாள் பார்த்து வந்தார். அதற்கு ஒழுங்காக முற்கூறிய கால அளவில் ஒவ்வொருதரம் கிரஹணம் பிடித்து வந்தது. இப்படி இதை விட்டுவிட்டு 6 மாதம் கழித்து 42-மணி 28 நிமிஷம், 36 ஸெகெண்டு பூர்ணமாகக் கழிவதற்குச் சற்று முன்பு தொடர்ச்சியாகச் சிலநாள் இந்தச் சந்திரனையே உற்று நோக்கினார். என்ன ஆச்சரியம்! இந்த கால அளவு முடிவில் அதற்கு கிரஹணம் பிடிக்கவில்லை. ஸுமார் 16-மினிட் 36-ஸெகெண்டுக்குப் பின்னர் கிரஹணம் பிடித்தது. இதற்கு ஏதாவது காரணம் ஒன்றிருத்தல் வேண்டும் என்று யோசிக்கலானார் ரோமர். 'கிரஹணம் என்னமோ ஸரியான நாழிகையில்தான் பிடித்திருக்கவேண்டும். ஆனால் பிடித்த ஸமயத்தில் அதிலிருந்து புறப்பட்ட ஒளி நம்மைவந்து எட்ட 16 மிநிட் 36ஸெகெண்டு ஆயிருக்கவேண்டும். 6 மாதத்திற்கு முன்னர் இது ஸரிவர நடப்பானேன்? இப்பொழுது அது தவறுவானேன்? இப்பொழுது ஒளி முன்னைவிட அதிகதூரம் ஓடிவரவேண்டியிருக்கிறதா? என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் 'ஆறு மாதத்திற்கு முன்பு பூமியும் வியாழனும் அருகாமையிலிருந்தன. இப்பொழுதோ பூமி தனதுவருஷசக்கிரத்தில் பாதிபோய் அதன்எதிர்புறத்திலிருக்கும். வியாழனோ தன் சக்கிரத்தில் 12-வருஷத்திற்கு ஒருதரம் சுற்றுவதால் கொஞ்ச தூரம் தான்போயிருக்கும். ஆகவே இப்பொழுது ஒளி வர வேண்டிய தூரம் சற்றேறக்குறைய பூமிசக்கரத்தின் குறுக்களவு தூரம் அதிகமாகி விட்டது.' என்று தட்டுப்பட்டது. ஸூரியன்பூமியிலிருந்து 92,000,000 மைல் தூரத்திலிருப்பதால், அந்தக் குறுக்களவு ஸுமார் 184000000 மைலாயிற்று. இதைத்தாண்டி ஒளி 16 மிநிட் 36 ஸெகெண்டில் வந்திருக்கிறது. ஆகவே ஒளி ஸெகெண்டு ஒன்றுக்கு ஸுமார் 186000 மைல் மாயமாகப் பறக்கிறது என்பது வெளியாயிற்று. இது மிகப் பெரிதாயினும் கணக்குள் அடங்கி விட்டது. பூமிக்கு மிக நெருக்கமாக விருக்கும் நக்ஷத்திரத்திலிருந்து ஒளி நம்மை வந்து எட்ட 3 வருஷம் பிடிக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே அந்த நக்ஷத்திரம் இப்பொழுது ஒளி இழந்துவிட்டால் மூன்று வருஷம் கழித்துத்தான் அது நமக்கு மறையும். மற்றைய நக்ஷத்திரங்கள் விஷயம் இதைவிட மிக பிரமாதமானது.

ஒளி ஆதாரம் = Source of Light
குறை நிழல் = Penumbra
தடுக்கும் வஸ்து = Opaque bodies
ஊடுருவும் வஸ்து = Transparent bodies
மத்தியம விளக்க வஸ்து = Traanslucent bodies
ஊசித்துளைபடப்பெட்டி = PinholeCamera

## ஸூர்யகிரஹணம்

### THE SOLAR ECLIPSE

இந்த அக்டோபர்மாஸம் 22-ம் தேதிக்கு ஸரியான ஐப்பசிமாஸம் 6-ம்தேதி ஞாயிற்றுக் கிழமை ஒரு ஸூரியகிரஹணம் ஏற்படும். பட்டணத்தில் காலை 7-22-18 மணிக்குத் தொடங்கி, 9-17 மணிக்கு முடிவுபெறும். மத்திய காலம் 8-17-மணி.

சூரியகிரஹண உண்டாவதன் காரணத்தை முன்னரே விவேகபோதினி 2-ம் ஸஞ்சிகையில் 44-ம் பக்கத்தில் எடுத்து விஸ்தரித்தாகி விட்டது. இங்குச் சித்திரத்தில் காட்டப்பட்டிருக்கும் அடர்ந்த நிழல்பாகத்தில் (1) பூமியின் எந்தப்பாகம் வந்தாலும் அதற்கு குறைக் கிரஹணமும், இதன் மத்தியபாகத்தில் உட்புறம் வந்தால் (2) முழுக்கிரஹணமும், வெளிப்புறம் வந்தால் (3) கங்கணக்கிரஹணமும் மங்கலான பாகத்தில் (4) எங்கிருந்தாலும் குறைநிழற் கிரஹணமும் உண்டாகும் என்பதை முன்னரே கூறி இருக்கிறோம். அடர்ந்த நிழல் அருகில் உள்ள பாகங்களுக்கு கிரஹணம் தொடங்கும்.

இப்பொழுது ஏற்படும் கிரஹணம் கங்கண கிரஹணம். ஆனால் சந்திரன் நிழலின் மத்திய பாகம் மத்திய ஆசியா, சீனதேசம், சீனக்கடல்



வழியாகத் தென்கிழக்காகக் கொஞ்சதூரம் பஸிபிக் மஹாஸமுத்திரம் சென்று பூமியை விட்டு விலகுவதால் இப்பாகங்களுக்கு மாத்திரம்தான் கங்கணக்கிரஹணம் தோன்றும். நம் பரத கண்டத்தில் இது குறைக்கிரஹணமாகத்தான் தெரியும். ஸூரியன் குறுக்களவில் கால்பங்கு பட்டணத்திலும், மூன்றில் ஒருபங்கு பம்பாயிலும், மூன்றில் இரண்டு பங்கு கல்கத்தாவிலும், முக்கால்வாசி டார்ஜீலிங்கிலும், முக்காலே அரைக்கால் பங்கு டிப்ருகரிலும் மறைந்து காணப்படும்.

இம்மாதிரி விதம் விதமாக ஸூரியன் கிரஹண காலங்களில் மறைந்து காணப்படுவதை எளிதில் விளக்கலாம். ஒரு 'மேகம் ஸூரியனை மறைத்து நாமிருக்கும் இடத்தில் நிழலை உண்டாக்குங்கால் 100-கஜத்திற்கப்பால் வெயில் நன்றாகக் காய்ந்துகொண்டிருப்பதை நாம் கண்டிருப்போமே. இதுபோலத்தான் சந்திரனால் மறைக்கப்பட்ட ஸூரியனும் விதம்விதமாகத் தோன்றுவது.

நமது பரத கண்டத்தில் கிரஹணம் பிடித்து விடும் விதத்தைப் முகப்புப் படத்தில் காட்டியிருக்கிறது. இப்படத்தில் காட்டப்பட்டிருக்கும் இடைவிடாக்கோடுகள் கிரஹணம் தொடங்கும் காலத்தைக் குறிக்கும். ஒவ்வொன்றின் அருகாமையில் குறித்திருக்கும் காலத்தில் அதன் வடபுறமிருக்கும் ஊர்கள் சந்திர நிழலுள் மூழ்கி விட விதம் விதமான பரிமாணமாக ஸூரியக்கிரஹணம் பிடித்து விட்டதாக அங்குத் தோன்றும். காஸ்மீர தேசத்திலும் பஞ்சாபிலும் காலையில் ஸூரியோதயத்தில் கிரஹணம் தெரியும். சந்திர நிழல் முதலில் தென்மேற்காக நகர்ந்து வந்து நம் பரதகண்டத்துள் ஆரம்பத்தில் புகுந்து ஸூரியோதயத்தில்இத்தோற்றத்தைஉண்டாக்குகின்றது. ஆதலால் இந்தக் கோட்டின் மேற்குப் பாகத்தில் ஸூரியன் உதயமாகும்போதே கிரஹணம் பிடித்திருக்கும். இதன் பின்னர் சந்திர நிழல் வரவர கீழ்மேலாகத் திரும்பி தெற்கு நோக்கிப் புறப்பட்டு தக்ஷிணதேசத்தை ஒழுங்காக மறைத்து வரும். 7-மணி ஸுமாருக்கு விந்திய கிரிக்கு வடக்கில் கிரஹணம் எல்லாவிடத்தும் தெரியும். ஸுமார் 7-40-க்குள்ளாகக் கன்னியாக் குமாரியில் கிரஹணம் தொடங்கிவிடும். இந்த ஸமயம் முதல் ஸுமார் 1-மணி நேரம் நம் பரதகண்டம் முழுவதும் சந்திரநிழலில் மூழ்கிக்கிடக்கும். ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு பரிமாணமாக இது தோன்றுவதோடுங்கூட ஒரே ஸமயத்தில் வெவ்வேறிடத்தில் வெவ்வேறு விதமாகவும் காணப்படும். சந்திரநிழலின்முடிவு நமது பரதகண்டத்தைவிட்டு பின்னர் நீங்கத் தொடங்கும். இப்பொழுது ஸிந்துதேசம் பஞ்சாப்தேசம் இவைகளில்தான் கிரஹணம் விட்டு விடும்; மற்றையவிடங்களில் கிரஹணம் தெரிந்துகொண்டே இருக்கும். ஆரம்பத்திலிருந்தது போலவே நிழல் தெற்கு வடக்காகக் கிடந்து கிழக்குநோக்கி நகரத் தொடங்கும். இதன் நிலையைப் புள்ளிக்கோட்டால் காட்டப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு அருகில் குறிக்கப்பட்டிருக்கும் காலங்களில் இவைகளின் மேல்பாகத்தில் கிரஹணம் விட்டுக்கொண்டே வரும். பங்காளத்திலும் ஆஸாமிலும்தான் முடிவில் கிரஹணம் விடுவது. சந்திரன் நிழல் மினிட்டிற்கு 35 மைல் வீதம் பூமியின்மேல் ஓடிச் செல்லும். சந்திரன் ஆகாயத்தில் பூமியைச் சுற்றிப் போகும்மார்க்கம் ஒருவிதமாயும், தினம் ஒருமுறை பூமியைச் சுற்றிப்போவதுபோலக் காணப்படும் மார்க்கம் வேறு ஒருவிதமாயும் இருப்பதால்தான் சந்திர நிழல் இங்குக் காட்டப்பட்டபடி அநேகவிதமாகப் பூமியின்மேல் மாறி ஓடிச்செல்லுவது.

'இந்தக் கிரஹணகாலங்களில் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாக ஸூரியனைப் பார்த்தால் ஒருவேளை சந்திரகோளத்தில் இருக்குமலைகள் ஓரங்களில் சற்று நீண்டு காணப்படலாம். மேலும் ஸூரியகோளம் வரவரக் குறைந்துவரும் விதம் பார்வைக்கு மிக விநோதமாகவிருக்கும்.

[இது நமது போதினியை வாசிப்போர்கள் நன்மைக்காக கல்கத்தாவில் இந்திய வானசாஸ்திர ஸபையோர் பிரசுரம் செய்துவரும் பத்திரிகையிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.]

# உபநிஷத் ரத்தினமாலை

## SUMMARY OF THE MINOR UPANISHADS

### 11. ஸ்ரீகணேச உபநிஷத் [89]

எல்லாருஷிகளும் எவரை வழிபட்டு இடையூறின்றி எவரது ஸ்தானத்தை அடைகிறார்களோ, அப்பேர்ப்பட்டவராயும், கணேச உபநிஷத்தால் அறியக்கூடியவராயும் உள்ள எங்கும் வியாபித்திருக்கும் பிரஹ்மமாயிருக்கிறேன்.

கணேசராகிய உம்மை நமஸ்கரிக்கிறேன். நீர்தான் பிரத்தியக்ஷமான தெய்வம். கேவலமான (ஒப்பற்ற) ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்தா, பிரத்தியக்ஷமான ஆத்மா. எப்பொழுதும் உண்மையையே சொல்லுகிறேன், என்னைக் காப்பாற்றும். கேட்பவனையும், பேசுபவனையும், கொடுப்பவனையும், வேதாத்தியயனம்செய்பவனையும், சிஷியனையும் இருக்கும் என்னை எல்லாத் திக்குகளிலும் நீர்தான் காப்பாற்றவேண்டியது. நீர் வாக்மயமாகவும், சின்மயமாகவும், ஆனந்தமயமாகவும், ஸத்தியமாகவும், ஸச்சிதானந்தமயமாகவும், பிரஹ்மமயமாகவும் இருக்கிறீர். உம்மிடமிருந்து ஜகத் முழுவதும் உண்டாகி, உம்மிடம் நிலைபெற்று உம்முள் லயிக்கின்றது. நீர்தான் பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு ஆகாசமாகிய பஞ்சபூதங்களுக்கும் முக்குணங்களுக்கும் (ஸத்வராஜதமஸ்), முக்காலங்களுக்கும் அப்பாற்பட்டவர். நீர் மூலாதாரத்திலிருக்கிறீர். நீர் மூன்று சக்தி (இச்சா, கிரியா, ஞான)ஸ்வரூபம். உம்மை நித்தியயோகிகள் தியானம் செய்கிறார்கள். நீர்தான் பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரர், இந்திரன், அக்னி, வாயு, ஸூரியன், சந்திரன், பிரஹ்மம், பூ, பூவ:, ஸுவ:—

ஓம். (இந்தவிடத்தில் ஒரு மந்திரம் காணப்படுகிறது) இதற்குப் கணேசீயவித்தை என்று பெயர், ருஷி கணகர்; தேவதை—மஹாகணபதி; தியானம்—ஒரு தந்தத்தை உடையவராயும், நான்கு கைகளையும் அவைகளில் பாசம், மாவட்டி, அபயம், வரம் இவைகளைத் தரித்தவராயும், மூஷிக(எலி)க்கொடியை உடையவராயும், ரக்தவர்ணம், தொங்கும் வயிறு, முரம்போன்ற காதுகள், ரக்தவஸ்திரம், சந்தனம், முதலானவைகளை உடையவராயும், பக்தர்களிடம் தயையுள்ளவராயும், சிருஷ்டிக்குமுன்னே தோன்றி சிருஷ்டிகாரணராயும், இருக்கும் கணேச ரூபமான பிரஹ்மத்தை தியானம் செய்கிறேன். என்பதே

இவ்வாறு நாள்தோறும் தியானம் செய்பவன் யோகிகளுள் சிறந்தவனாகி, எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபட்டு, பிரஹ்மரூபியாகிறான். வணக்கமுள்ள சிஷ்யத்தன்மையோடு வாராதவனுக்கு இவ்வித்தைக் கொடுக்கக்கூடாது. அறியாமையால் உபதேசம் செய்துவிடுபவன் பாபியாவான். இதை ஆயிரம் தடவை பாராயணம் செய்வதால் எல்லாக் கோரிக்கைகளும் கைகூடும். இதைக்கூறிக் கணபதிக்கு அபிஷேகம் செய்பவன் வாக்சாட்டி யுடையவனாவன். சதுர்த்தியில் (சாப்பாடின்றி இருப்பதோடும் கூட விடாது கணபதி விஷயத்திலேயே ஈடுபட்டிருப்பதாகிய) உபவாஸத்தோடு கூட இதை ஜபிப்பவன் வித்தியாவானாகிறான். அருகம்புற்களால் ஆராதிப்பவன் குபேரனுக்கு ஸமானமாவான். பொரிகளை உபயோகப்படுத்துபவன்கீர்த்திமானாவான். நல்ல புத்தி யுண்டாகும். ஆயிரம் மோதகங்களை நிவேதனம் செய்கிறவன் கோரிக்கைகள் நிறைவேறும். நெய்யாலும் ஸமித்தாலும் பூஜிப்பவன் எல்லாவற்றையும் பெறுவான். ஸூரிய கிரஹணகாலத்தில் நதிக்கரையிலாவது, கணேச விக்கிரஹத்தின் ஸந்நிதியிலாவது இந்த மந்திரத்தை ஜபித்தால் இது உடனே ஸித்தியாகும். எல்லாப் பாபங்களும் தோஷங்களும் கழன்று போகும். இவ்வாறு உணருபவன் எல்லாவற்றையும் அறிந்தவனாவான். இவ்வாறு உபநிஷத்

### 12. கலிஸந்தாரண உபநிஷத். (103)

நாரதர் துவாபரயுக முடிவில் பிரஹ்மாவை நோக்கி நான் இனி எவ்வாறு கலிபாதையிலிருந்து விடுபட முடியும். கொடிய கலியுகம் வரப்போகிறதே! என்ன செய்வது என்று மிகுந்த சஞ்சலப்பட்டுக் கேட்டார். அதற்கு பிரஹ்மா கூறுகிறார்.—

'நீ கேட்ட கேள்வி பொதுவாகக் கலியுகவாஸிகள் எல்லோருக்கும்உபகாரமானது. ஆதலால் சுருதிரஹஸ்யமாகிய விஷயத்தை வெளியிடுகிறேன் கவனமாய்க் கேள். ஆதிமூலமாகிய ஸ்ரீமந் நாராயணரது நாம உச்சாரணமாத்திரத்திலேயே கலிதோஷம் அணுகாது அகலும். அது ஹரே, ராம; ஹரே, ராம; ராம; ராம, ஹரே, ஹரே; ஹரே, கிருஷ்ண, ஹரே, கிருஷ்ண; கிருஷ்ண, கிருஷ்ண, ஹரே, ஹரே, இந்தப் பதினாறு நாமங்களே. கலியுக வாழ்க்கையில் தேறி வருவதற்கு இதை உச்சரிப்பதைவிட மேலானதாயும், உபயோககரமானதாயும் உள்ள வழியே இல்லை. இந்தப் பதினாறு நாமங்களும் ஜீவனைச் சூழ்ந்து உண்மை ஞானம் வெளிப்படாது தடுக்கும் 16 அவித்தியா விஷயங்களையும் வேரறுக்கும். இவ்வாறு இவை நாசமானதும் மேகங்கள் சிதறி நிர்மலமாகவிருக்கும் ஆகாயத்தில் ஸூரியன் பிரகாசிப்பதுபோல, பரப்பிரஹ்மம் விளங்கும்.'

176-ம் பக்கம் பார்க்க.

# குசன் கதை

## LIFE OF KUCHA

ஸ்ரீ ராமர், தான்எக்காரணம் பற்றி இப்பூதலத்தில் வந்து அவதரித்தனரோ, அவையாவையும் நிறைவேற்றியபிறகு தன் பதமான ஸ்ரீவைகுண்டத்தை நோக்கிச் செல்லுகையில் தன்னிடத்தில் மிகவும் அன்புள்ள பிரஜைகளையும் கருணைகூர்ந்து, தம்முடன் அழைத்துச் செ ன்றார். பிறகு, அவருடைய மைந்தனான குசன், பரம பரையாய் ஸத்குணம் நிறைந்தவர்களாயும், மஹா தை ய பராக்கிரமசாலிகளாயு முள்ள, இக்ஷ்வாகுவமி சத்தி ல் உதித்த மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டதும், இராம ரால் அழியாப் புகழடைந்ததும், மஹாபுண்ணிய நதியான ஸரயூநதியை எல்லையாகக் கொண்டதும், பிரஜை களில்லாமையால் ஒளிகுறைந்ததுமான அயோத்தியா ந கரத்தில் வாஸம்செய்ய மனமில்லாதவனாய், தானே "குசாவதீ" என்னும் ஒரு பட்டணத்தை ஏற்படுத்திக் கொண்டு, அதில் நெறிதவறாது அரசாண்டு வந்தான்.

இப்படி இருக்கையில் ஒரு நள்ளிரவில் பரமானந்த வெள்ளத்தில் முழுகியிருக்கும் ஓர் யோகியின் நிர்மல மானசஞ்சலமற்றஹிருதயம்போல் ஊரெங்கும் நிர்சப்த மாகிவிட்ட ஸ்தப்தமாய் தீபங்கள் எரிந்துகொண்டு இருந்தன. குசன் தன் பள்ளியறையில் பாற்கடல்போன்ற துய்ய வெண்மையான ஹம்ஸதூலிகா மஞ்சத்தில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். கதவுகள் தாளிடப் பட்டிருந்தன. மதுபானத்தால் மயக்குண்ட காவற்காரர் ஹ[illegible] வந்த கண்களையுடையவர்களாய் நீண்ட கத்தி [illegible] தோளில் சாத்திய வண்ணம் அங்கு வாயிலில் கொஞ்சமும் சப்தம் செய்யாமல் மெதுவாய் உலாவிக் கொண்டிருந்தனர். சந்திரிகையானது மிக வெண்மையாக ஒளி வீசிக்கொண்டிருந்தது. அப்பொழுது, திடீரென்று கண்விழித்தான் அரசன்! தான் இதுகாறும் பார்த்திராதவளாயும், தூரதேசம் சென்ற நாயகனைப் பிரிந்த வேஷத்தை யுடையவளாயுமுள்ள ஓர் நங்கையைக் கண்டான்! ஸஜ்ஜனங்களுக்குச் சாதாரணமான ராஜ ஸ்ரீயை யுடையவனும், தேவேந்திரனைப் போன்ற தேஜஸையுடையவனும், சத்துருக்களை ஜெயிக்கிறவனும், பந்துக்களால் மிகவும் கொண்டாடப் பட்டவனுமுள்ள குசன் முன்னிலையில் நின்று, அப்பெண்மணியானவள், "ஜய ஜய" என்று வாழ்த்திக்கொண்டே அஞ்சலி செய்தனள். பிறகு, கதவுகள் தாளிடப்பட்டிருந்தாலும், நிலக்கண்ணாடியுள் தெரியும் பிரதி பிம்பத்தைப்போல உட்பிரவேசித்திருக்கும் அவ்வங்கனாமணியைப் பார்த்து மிகவும் வியப்படைந்த தாசாதியின் புத்திரன், படுக்கையிலிருந்து தலையைச் சற்றுயர்த்திப் பின்வருமாறு கூறலாயினன் :—

"ஹே! கல்யாணி! இவ்வரண்மனை உயரமான மதில்களால் சூழப்பட்டிருந்தும், உட்பிரவேசித்திருக்கும் உன்னிடத்தில் யாதொரு யோகச்சிறப்பும் தென்படவில்லையே! மேலும், பனியால் மூடப்பட்ட ஒரு தாமரையைப்போல் விசனத்தினால் வாடினவளாகத் தோற்றுகின்றாய். ஹேசுபே! யார் நீ? உன்னையடைந்த பாக்கியவான் யாவன்? யாது காரணம்பற்றி நீ இந்நடு நிசியில் என்னிடத்தில் வரும்படியாயிற்று? ஜிதேந்திரியர்களான ரகுக்களுடைய மனதானது பரஸ்திரீகளிடத்தில் ஒருபோதும் அணுகாதென்பதை மனதிலிருத்தி பதில் உரைப்பாய்." என்றான் குசன்.

குற்றம் ஒன்றும் இல்லா அப்பெண்மணியானவள் பின்வருமாறு உரைக்கலாயினள். "ஹே, ராஜேந்திரா! என் நிலைமையை நான் உனக்கு என்னென்றுரைப்பேன்! தன்னிருப்பிடம் சென்ற உன் தந்தையால் எப்பட்டணம் சூனியமாக்கப்பட்டதோ, அநாதையில்லாப்பட்டணத்தின் அதிதேவதை யென்று என்னை நீ யறிவாயாக. குணவான்களான பூபாலர்கள் கொண்டாடிய உத்ஸவத்தின் சிறப்பால் அழகாபுரியையும் இகழ்ந்த நான், ஸூரிய வம்சத்தில் தோன்றிய பூர்ணமான சக்தியையுடைய நீ இருக்கும்பொழுது மிகத்தாழ்ந்த இந்நிலைமையை அடையலானேன். என் பிரபு இல்லாமையால் சிதறுண்டிருக்கிற சயனங்களையும் பற்பல திரைகளையும் இடிந்திருக்கிற பிராகாரங்களையும் உடைய என் பட்டணம், மலைவாயில் விழுந்திருக்கும் கதிரவனையும், பெருங் காற்றால் சிதறுண்ட மேகங்களையும், உடைய அஸ்தமன வேளையைபோலிருக்கின்றது. முன்பு எந்த ராஜமார்க்கத்தில் இரவுதோறும் நாயகனை நோக்கிச்செல்லும் எடுபட்ட ஸ்திரீகளது ஒளிரும் இனிமையான சிலம்பின் ஒலி கேட்டுக்கொண்டிருந்ததோ, அங்கு இப்பொழுது வாயில்கொள்ளிக்கட்டைகளை எடுத்துக்கொண்டு மாமிசத்தைத்தேடி உலாவிவரும் நரிகள் பயங்கரமாக ஊளையிடும் சப்தம் கேட்கின்றது. ஹே மஹீ பால! அழகிய சிறுமிகளின் மெல்லிய விரல்களினால் அலைக்கப்பட்டு மிருதங்கத்தின் தீரமானதொனியை ஒத்து ஒலித்த அவ்வுபவன தடாகங்கள் இப்பொழுது காட்டெருமைகளின் நீண்ட கொம்புகளினால் அலைக்கப்பட்டுக் கதறுகின்றன. முன்புபோல் அன்புடன் ஆதரிப்பவர் இல்லாமையால் விளையாட்டு மயில்கள் வீட்டில் வளரும் நிலையை இழந்தும், மிருதங்கத்தின் கம்பீரமான ஒளி காதில் விழாமையால் நிர்த்தனங்களை மறந்தும், விருட்சத்தின் அடியை இருப்பிடமாகக் கொண்டும், காட்டுத்தீயினால் எரிக்கப்பட்ட குறைச் சிறகுகளை யுடையவைகளுமாய் மயில் தன்மையை இழந்து நின்றன. ஹா கஷ்டம்! காலத்தின் கொடுமையை என்னவென்று உரைப்பேன்! செம்பஞ்சுக் குழம்பு அழகிய சிலம்புகள் இவைகளையுடைய விலாஸினிகளின் சிறிய மிருதுவான பாதங்களால் அலங்கரிக்கப்பட்ட எனது மாடிப்படிகள் இப்பொழுது புதிதாய் அடித்த மிருகங்களின் இரத்தத்தினால் பூசப்பட்ட கூரிய நகங்களையுடைய புலிகளின் பாதங்களால் அதிர்ந்து போகின்றன. தாமரை அடர்ந்த குளத்தில் இறங்கி யிருந்த பெண் யானைகள் கெடுத்த தாமரைக் கொடிகளை யுடையவை

களாய் வரையப்பட்டிருக்கும் ஆண் யானைகளின் மஸ்தகங்கள், பரபரப்போடும் கோபத்தோடும் கூடின மிருகேந்திரனுடைய மாவெட்டி போன்ற கூரிய நகங்களால் பிளக்கப்படுகின்றன. காலக்கிரமத்தினால் அழிந்தும் மங்கியும் உள்ள வர்ணத்தையுடைய ஸுந்தரிகளின் பிரதிமைகளுக்குப் பாம்புச் சட்டைகள்மேல் வஸ்திரங்களாக இருக்கின்றன. நாளடைவில் அழுக்கேறி அங்குமிங்கும் புற்கள் முளைத்தும், பாசிபடர்ந்துமிருக்கின்ற மாளிகைகளுக்கு முத்துமணிகள் போன்ற வெண்மையான சந்திரிகையும் சோபையை அளிப்பதில்லையே. ஹா! நினைக்க நினைக்க என் மனம் மோஹத்தையே அடைகின்றது. முன்பு நாள்தோறும் பூம்பொழில்களில் சென்று ஸௌந்தரியவதிகள் உபவன தடாகங்களில் ஸ்நாநஞ்செய்து, தேவதார்ச்சனைக்காக பரிசுத்தைகளாய் தயையுடன் மெல்லக் கொடிகளை வளைத்து தாமரைப் புஷ்பம்போன்ற சிவந்த தங்கள் கரங்களினால் பூக்கொய்து சென்றனர் ஆனால் இப்பொழுது வேடர்களும் வனவானரங்களும் அக்கொடிகளைக் காலினால் தேய்த்து நாசமாக்குகின்றன. சந்தனம், ஊதுவத்தி முதலிய வாஸனைத் திரவியங்களினால் பரிமளித்த கதவுகள் இப்பொழுது இரவில் தீபப்பிரகாசமில்லாமலும் பகலில் காந்தாமணிகளின் முகஸ்ரீயை இழந்தவைகளுமாய், புழுக்களோடு கூடினசிலந்திகூடுகளாலும் வெறுக்கப்படுகின்றனவே." என்று இவ்விதம் பிரலாபித்து ஒருநிமிஷம் மௌனமாயிருந்து கண்களில் நீர் ததும்ப கல்லும் கரைந்துருகுமாறு மீண்டும் அச்சுந்தரி சொல்லத் தொடங்கினள்:—

"தேவ சுந்தரிகள் ஸ்நானம்செய்யாமலும் கரைகள் பரிமளமான வாஸனைப் பொடிகளால் அலங்கரிக்கப் படாமலும், பூஜாயோக்கியமான புஷ்பங்கள் அர்ச்சிக்கப் படாமலுமிருக்கும் சரையூ நதியையும், யுவதிகளில்லாமல் சூன்னிய மாயிருக்கும் லதா மண்டபங்களையும் பார்த்துஎன் மனம் மிகவும் பரிதபிக்கின்றது. ஆதலால் என்னரசே! எப்படி உன் தந்தை காரணமான இம்மனுஷ சரீரத்தை நீத்துப் பரமாத்ம பூர்த்தியை அடைந்தனரோ, அப்படியே நீயும் இவ்விராஜதானியை விட்டுவிட்டு குலராஜதானியான என்னை யடைந்து புகழுடன் பரிபாலனம் செய்வாயாக." என்றனள்.

இவை யனைத்தும் கேட்டிருந்த ரகுப்ரவீரனும், கருணைநிறைந்த மனதுடையவனாய் "அப்படியே ஆகுக" என்று பிரீதியுடன் உரைக்கவே ஆனந்தத்தால் மலர்ந்த முகத்தாமரையை யுடையவளாய் அம்மாதரசியும் அஞ்சலி வந்தனம் செய்து மின்னற்கொடி போல் அவ்வறையினின்றும் மறைந்தனள். பிறகு அரசனும் இவ்விஷயத்தைப் பற்றியே சிந்தித்தவனாய் நித்திரைவராமல்சூரியோதயத்தையே எதிர் பார்த்திருந்தான். ஆதித்தனும் தன்பிரிவால் இரவுமுழுதும் விஸனத்தால் வாடியிருந்தகமலினியைக் கரம் கொண்டுதழுவினன். மஹேந்திரனும் வேதியர்களிடம் இராத்திரி நடந்த சொப்பனம்போன்ற அந்த அற்புத விருத்தாந்தத்தை விவரித் துரைத்தனன். அவர்களும் அதைக் கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தவர்களாய் குல ராஜதானியான அவ்வயோத்தியே நேரில்வந்து இவனை பதியாக வரித்தனள் என்றெண்ணிக்களித்தார்கள். பிறகு ஓர் சுபதினத்தில் கடல் போன்ற தன் ஸேனவெள்ளத்தையும், பிரஜைகளையும் அழைத்துக் கொண்டு தன் மூதாதைகளால் பரிபாலனம் செய்யப்பட்ட இராச்சியத்திற்குவந்து அவ்வயோத்தியையின் இருதய கமலத்தை மலரச்செய்து பூலோகமெங்கும் புகழும்படியான கீர்த்தியுடன், தேவர்களும் இவன் ஸத்ய...த் தையும் வீரதைரியத்தையும் கண்டு புகழுமாறு அ...னக வருஷங்கள் ராஜ்ய பரிபாலனம் செய்துகொண்...ருந்தான்.

கிருஷ்ணகுமா...ரி.

(174-வது பக்கத்தின் தொடர்ச்சி)

இவ்வாறு கூறிய பிரஹ்மாவை நோக்கி இ...தை உச்சரிக்கும் விஷயமாக விதிகளைக் கூறவேண்டும் என்று நாரதர் கேட்டார். இதை உச்சரிப்பதற்கு ய...ாதொரு விதியும் இல்லை என்றும், சுத்தா சுத்தம் முத...லிய எந்த ஸமயங்களிலும் இதை ஜபிக்கலாம் என்று...ம், அவ்வாறு செய்தால் முறையே தேறத்தேற ஸ...ாலோக்யம் (மும்மூர்த்திகள் லோகத்தை அடைதல்) ஸாமீப்யம் (மும்மூர்த்திகள் அருகாமையிலிருத்தல்) ஸாரூப்யம் (அவர் ரூபத்தைபோன்றரூபத்தை அ...டைதல்) ஸாயுஜ்யம் (அவரோடு கலத்தல்) ஆகிய நான்...கு வித மேலான பதவிகளை அடையலாம் என்றும் கூ...றினர்.

இந்தப் பதினறு நாமங்கள் அடங்கிய மந்...திரத்தை எவன் [3,50,00,000] மூன்றரைக் கோடிதர...ம் ஜபிக்கிறனே அவன் ஸகல பாபங்களிலிருந்தும் ...படுவான். ஸகலபந்தங்களிலிருந்தும் விடுபடுவான்.

இதுஉபநிஷத்

நாள் ஒன்றுக்கு 10000 ஜபித்தால் இக்கணக்காவதற்கு ஸாதாரணமாக 10வருஷங்களாகும்.

தூதுவளையானது கபத்தை நீக்குந் தன்மையுள்ளது. இதைக் கஷாயமிட்டு சுவாச காசம், இருமல் முதலிய ரோகங்களுக்குக் கொடுக்கலாம். இலையைத் துவையல் செய்து கொடுப்பது முண்டு, இதனால் தாதுப்பல முண்டாம். கபம், மந்தம், இருமல், இளைப்பு தீரும். இதன் இலையால் சிலேஷ்மம், கர்ண சூலை, அக்கினி மாந்தம், உட்குத்து, சொறிவு, மேலுளைவு தீரும். பூவினால் தேக புஷ்டி, தாதுவிருத்தி, சரீரபலம் அழகும் உண்டாம். காயினால் கபரோகம், அரோசகம், பைத்தியம், மலபந்தம், ரத்தாசய வாயு, பித்தவாதம் தீரும். பழத்தினால் க்ஷயம், ஜல தோஷம், மார்புச்சளி தீரும். தூதுவளம் பழநெய் க்ஷயரோகங்களுக்குத் தக்க ஔஷதம். வேரும் கொடியும் சுவாச முதலிய ரோகங்கள் பல்நோய் இவைகளைப் போக்கும்.

# வஸந்த மாளிகை

## VASANTHA MALIKAI

(தொடர்ச்சி)

வலபத்திரன்.—அந்தப் பங்களா புதிதாய் இருக்குதே? யாருடையது? என்ன? விவரமாய்ச்சொல்லு

கிழவி.—அது ஒரு மடம். திருவூர்மடம். சாமியார் இருக்குதாங்க. மந்தாரிக்கு வேண்டியவங்க. மந்தாரிகூட நித்தம் நித்தம் போகுதாங்களாம். நான் பார்த்ததில்லே சாமி—உனக்குக் கோடிப் புண்ணியமுண்டு ஐயா! பிள்ளைக்குட்டிக்காரி நான்.

வலபத்திரன்.—வந்துட்டாயே பொய்சொல்ல—

கிழவி.—கண்ணுணே! இந்த எரிஞ்சபோகுதானே அவனறியச் சொல்லுதேன்—எனக்கு அவ்வளவுதான் தெரியும்.

வலபத்திரன்.—ஆகா! அப்படியா! இருக்கட்டும். அதை மடம் எங்குதியே அங்கே ஒருகுட்டி நல்ல பெண்பிள்ளை!—

கிழவி.—சொல்லித்தொலைக்கிறேன். எதாவது குறும்பு கிரும்பு பண்ணினையோ—மங்கம்மா ராச்சியம்—ஞாபகம் இருக்கட்டும்—தலைக்கு வந்துவிடும்—

வலபத்திரன்.—அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன் நீ சொல்லு.

கிழவி.—அதேன் சொல்லுதே.பெருக்கு மடம். பேருக்குச் சன்னியாசி. அடாடா! அந்த பயமகளைப்பார்த்தால்—

வலபத்திரன்.—ஆ! அப்படியா? ரொம்ப அழகோ?

கிழவி.—என் சொல்லுதே! ஐஸ்! அவள் முகம் எவ்வளவு அழகு, அந்த ஒரு வைரக்கம்மல் போதாதா?

வலபத்திரன்.—ஆஹா! அவள்—

கிழவி.— தலைமயிர்தான் — —அடாடா— என்னால் சொல்லமுடியாது அழகை-அந்த ஜடைவில்லே—

வலபத்திரன்.—இதெல்லாம் நீஎப்போ பார்த்தாய்?

கிழவி.—பக்கத்திலுள்ள பூந்தோட்டத்தில் நாலு நாளைக்குமுன் சுற்றிக்கொண்டிருந்தாள். ஒருவர் பார்த்துவிடக்கூடாதாம். அவ்வளவு பந்தோபஸ்தாம்—என்னைக்கண்டாளோ இல்லேயோ—நான் அவளைக் கண்டேனே இல்லேயோ—சந்நியாசி ஓட்டமாய் வந்து அவளைத்திட்டி, உள்ளே அழைத்துகொண்டுபோய்விட்டான்

இதற்குள் வலபத்திரனுக்குக் குடிவெறியதிகரிக்கவே கண்கள் சுழல ஆரம்பித்தன. நாகுழற ஆரம்பித்தது. புத்தி தடுமாறிவிட்டது. "ஏ! கிழவி! என்ன சளசளவென்று பேசுதே ஒரேஅடியில் உன்னை நிமித்திடுவேன்! பேசாதே! எனக்குத் தூக்கம் வருகுது" என்று பிதற்றிக்கொண்டே தரையில் சாய்ந்து நித்திரை போனான்.

இவ்வற்புத ஸம்பாஷணையை மௌனமாய்க் கவனித்துக்கொண்டிருந்த நமது குதிரைவீரன், கிழவியண்டை வந்து உட்கார்ந்துகொண்டு, "அம்மா! நீ சொன்ன விஷயம் வேடிக்கையாயிருக்கிறதே! சந்நியாசி மடத்தில் பெண்ணொருத்தி யெப்படி யிருக்கமுடியும்?" என்று வினவினான்.

கிழவி.—சாமி! என் சொல்லுதிங்கோ அந்த அநியாயத்தை. ராணி நல்ல வகதான்—ஆனால் அவுக என்ன பண்ணுவாங்க.—இந்த மந்திரி பண்ணுத கோட்டாளி.

வீரன்.—அம்மா! — அவ்வளவு பொல்லாதவரா இந்த மந்திரி.

## அத்தியாயம் 2

### நமது பிரயாணிகள்

### Our Travellers

நாம் முன் அத்தியாயத்தில் கூறிய கிழவியின் ஸம்பாஷணையைக் கவனித்த நமது கதாவீரன், ஸம்பாஷணை முடிந்ததும், கார்மேகத்தால் மறைக்கப்படும் இந்து பிம்பம்போல, சோகத்தால் இவன் மதி மயங்க ஆரம்பித்தது. தலை கனத்துச் சுழன்றது, கையில் பிடித்திருந்த கால்வராகன் நாணயத்தைக் கிழவியண்டை எறிந்துவிட்டு, இடது கையால் தன் கபாலங்களைப் பிடித்துக்கொண்டு திடீரென்று எழுந்து, அவ்வாலமரத்தின் மற்றோர் புறஞ்சென்று பெருமூச்சறிந்துகொண்டு பலவாறு சிந்திக்கலானான்.

" தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாமமில்லை நாகமுமில்லையே." *

"ஹா! ஜகதீசா! இன்ன செய்வதென்று ஒன்றுந் தோன்றவில்லேயே! நான் இவ்வளவு காலமாய் அநேக இடங்களில் தேடித்திரிந்தும் என் கண்மணியைக் காணவில்லேயே! கண்மணி! பாநுமதி! நீ எங்கே இருக்கின்றாயோ? எந்தப் பாவி வசப்பட்டு எவ்வாறுதவிக்கின்றாயோ! அல்லது உயிருடன் தானிருக்கின்றாயோ? அந்தப்பாவி 'மகாவீரன்' உன்னை யேமாற்றியோ அல்லது பலாத்காரமாகவோ அபகரித்து வந்துவிட்டானே! உன் தந்தையிடம் என்ன சொல்லுவேன்? பாநுமதியைக் காணவில்லேயென்றால் உடனே உயிர்துறந்துவிடுவாரே! நான் உன் தந்தையிடம் போய்ப் பயனென்ன? இவ்வரண்மனை-இந்தத் திருவூர் மடம் மாத்திரம் பார்த்துவிட்டு-இவ்விடத்திலாவது என் பாநுமதியைக்கண்டாலாச்சுது—இல்லாவிடில் என் உயிரை இக்கட்கத்திக்கு (உடைவாளை யுருவி மார்புக்குநேரே பிடித்துக்கொண்டு) இரையாக்கிக் கொள்வேன். (ஆகாயத்தில் பறக்கும் கருடனைக்கண்டு கைகூப்பிக்கொண்டு) அந்தோ கருடதரிசனமாகிறது—மீனும்பிகே! உன்னைத் தஞ்சமென்று வந்தோரைக் காப்பது உன்கடமையல்லவா?—இக்கிழவியின் ஸம்பாஷணையினின்றும், இம்மடத்தில் இருக்கும் மங்கை நமது பாநுமதியாக இருக்கலாமென்று தோன்றுகிறது.

* இராமாயணம்.

இவன் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கையில் குடிவெறியால் மதிமயங்கிக் கிடந்த வலபத்திரன்சற்று வெறி தெளிந்து திடுக்கிட்டெழுந்து "சீ. சனியன் பிடித்த தூக்கம்எப்படி அயர்த்துகிறது" என்று பிதற்றிக்கொண்டு "தன் கைவிரல்களால் கண்களைத் துடைத்துக்கொண்டும், கவந்து கிடந்த தன் குடுமியைச் சரிப்படுத்தி முடிந்துகொண்டும், மறுபடி தலைப்பாவை மாட்டிக்கொண்டு, தயிர்க்காரியண்டை சென்று ஒரு போகணி புளித்த தயிர் குடிக்கவே, குடிவெறியனேகமாய் மாறிவிட்டது. கொஞ்சம் வெற்றிலை பாக்கும் அத்துடன் வெள்ளைப் புகையிலையையும் வாயிலடக்கிக்கொண்டு உற்சாகமாய் மந்தஹாஸம் செய்துகொண்டு நமது கதா வீரனருகே வந்து சேர்ந்தான்.

நமது கதாவீரன் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்து என்ன! வலபத்திர நாயுடுகாரு!—தாங்கள் நாயக்கரவாள்—தா—னே—

வலபத்திரன்.—தன் பொடி மட்டையைச் சுண்டித் தன் இடது கைத்தலத்தில் ஒங்கி யடித்துக்கொண்டு, "ஆ—அப்படிப் போடடா மொக்கிழியப்பா! அடிச்சானே போனாலும் போகுது என்று—வனேயா நான் நாயுடு என்று உமக்கு எப்படித்தெரிந்தது—ஆ ஞாபகமிருக்கட்டும்—இப்போ இந்த மதுரையில் யார் ராஜா தெரியுமா? (மீசையை முறுவளைத்துக்கொண்டு) நாயக்கர் வமிசம்—நம்மட வங்கள்—ஹூம் ரொம்பமரியாதையாய்ப் பேசணும் நம்மைக்கண்டால் — ஹூம் — தெரியுமா?

குதிரைவீரன்.—"இதேதடா! துவக்கும்பொழுதே குஸ்திக்கு நிற்கிறான். நம்மகாரியமென்ன! கஷ்டமென்ன! மனக்கவலையென்ன! இந்தக் குடிவெறியனைக்கட்டியெப்படி மாரடிப்பது ஆனாலும் காரியமாகும்வரை கழுதையின் காலையும் பிடிக்கவேண்டியதுதான். நாம்எடுத்தகாரியமோ பெரிது—இவனாலும் சில முடியவேண்டியிருக்கின்றன—சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்—இதில் மான அவமானம் கவனித்தால் முடியுமா?"

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
ரெவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரார வமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்."

இவ்வாறு பலவாறு ஆலோசித்துவிட்டு வலபத்திரனை நோக்கி "நாயுடுகாரு, தாங்கள் ராஜவமிசத்தைச் சேர்ந்தவரென்று தங்கள் முகத்தில் விளங்கும் ராஜலக்ஷணங்களாலறிந்துகொண்டேன்."

வலபத்திரன்.—"ஆ! ஸபாஷ்! பேஷ்! நல்லபுத்திசாலி" (நமது வீரனை உற்சாகமாய் முதுகில் தட்டிக்கொடுத்து) என்ன விசேஷம்? சரி! நான்தான் ராஜபுருஷன். நீங்கள் யார் மந்திரி புருஷாளோ?" என்று சொல்லிக்கொண்டு, தான் ஏதோ வேடிக்கையாய்ப் பேசிவிட்டதாய் மகிழ்ந்து இடியிடியென்று சிரித்தான்

குதிரை வீரன்.—இவ்வெறியனுடைய உற்சாகத்தைக் கண்டு தன் சோகத்தை மறந்து சிரித்துக்கொண்டு நாயுடுகாரு! என் பெயர் 'தர்மராஜன்.'

வலபத்திரன்.—ஆஹா! ரொம்பசந்தோஷம் (மீசையை முறுக்கிக்கொண்டு) சந்தோஷம்—என்ன காரணமாய் இவ்விடம் வந்தீரோ? நான் ராஜபுருஷன்—ஞாபகமிருக்கட்டும்—பொய் சொல்லாதேயும்.

தர்மராஜன்.—நாயுடுகாரு! ஏது என்னை மறந்துவிட்டீர்களே ராஜ உத்தியோகங் கிடைத்தாலும பழகின சினேகிதர்களை மறக்கலாமா?

வலபத்திரன்.—(தனக்குள்) ஏது ஆஸாமி வலுத்த ஆஸாமிபோல இருக்கிறானே! நல்லது. இருக்கட்டும். 'ஸந்தோஷம், தர்மராஜ்! ஸந்தோஷம். இப்படித்தானிருக்கவேண்டும்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டு அம்மரத்தைச் சுற்றி வருகையில் மறுபடி கள்ளுக்கடையண்டை வந்து சேர்ந்தார்கள். வலபத்திரன் ஒரு பணத்தையெடுத்து அலட்சியமாய்க் கள்ளுக்காரனிடம் எரிய அவன் அதைக் கண்களில் ஒத்திக்கொண்டு ஒரு போகணி அரக்குச் சாராயம் கொடுக்க அதை வலபத்திரன் குடித்துவிட்டு மறுபடி தர்மராஜனை நோக்கி "தர்மராஜ்! (ஏப்பம் விட்டுக்கொண்டு) தர்மராஜ் நான் யார் தெரியுமா? இந்த ராஜ்யத்தின் மந்திரியின் காரியதரிசி மஹாவீரனுடைய அசுவபாலன் உத்தியோகம் பெறப்போகிறேன் நம்முடைய தயவெல்லாம் உங்களுக்குத் தேவையாயிருக்கும்—பத்திரம்—மரியாதையாய்ப் பேசவேண்டும்—ஜாக்கிரதை—

தர்மராஜன்.—இவ்வெறியனையும் நல்வார்த்தை சொல்லி யிவனுடனும் சிறிதுகாலமாவது பழகவேண்டிய விதி நேர்ந்ததே யென்று மனம் நொந்து மறுபடி மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு "நாயுடுகாரு! தங்கள் உத்தியோக மேன்மையே மேன்மை. யாருக்கு இந்த உத்தியோகம் கிடைக்கப் போகிறது.

வலபத்திரன்.—(மீசையை முறுக்கிக்கொண்டு) பேஷ்! தர்மராஜ்! பேஷ்! நீ தைரியசாலி நன்றாய்ப் பேசுகிறாய். 'தைரியம் புருஷ லக்ஷணம்' சரி! நீ போகலாம். நான் ஒருமுக்கிய ராஜகாரியமாய்ச் செல்லுகிறேன் காலதாமதமாகிறது.

தர்மராஜன்.--தாங்கள் எவ்விடம் செல்லுகிறீர்கள்

வலபத்திரன்.—தர்மராஜ்! அதேன் கேட்கிறாய்? ராஜாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பலவித அவசரமிருக்கலாம். கேவலம் நீங்கள் கேட்கலாமோ ராஜ ரகஸ்யத்தை.

தர்மராஜன்.—தாங்கள் சொல்லுவதும் மெய்தான் ஆயினும், ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டர்கள் பந்துக்கள் ராஜபுருஷர்களாக வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்ப ததற்காக? இப்படிப்பட்ட சமயங்களில் உதவியிருக்கு மென்றுதானே?

வலபத்திரன்.—தர்ம! நீ பழய ஆஸாமியல்ல. ஏதோ கண்ணி போட்டிருக்காய்—ஆ! தெரிகிறது—தெரிந்தது—சோழியன் குடுமி சும்மா ஆடுமோ?

தர்மராஜன்.—(தனக்குள்) "குற்றமுள்ள நெஞ்சம் குறு குறு என்கிறது பயலுக்கு. தன்னைப்போல் பிறரும் கெட்டவர்களாயிருப்பார்களென்று நினைக்கிறான்"—"நாயுடுகோரு! அந்தத் திருவூர் மடம் ரொம்ப நேர்த்தியாயிருப்பதாய்க் கேள்வி. நானும் இந்தத் தேசம் முழுமையும் காசிமுதல் கன்னியாகுமாரி வரை சுற்றி வந்தேன். 'டாஜ்மஹால்' முதலான அநேக அற்புத மாளிகைகளையும் பார்த்திருக்கிறேன். இப்புண்ணிய க்ஷேத்திரத்தையும் பார்த்துவிட்டு அங்குள்ள பண்டார சந்நிதிகளையும் தரிசனம் செய்து போகலாமென்று எண்ணுகிறேன். இந்த நாளில் சிபார்சு அல்லவா வேண்டியிருக்கிறது. தெய்வ கிருபையால் தாங்கள் வந்து சேர்ந்தீர்கள் கொஞ்சம் தயவு செய்ய வேண்டும்.

வலபத்திரன்.—(தனக்குள்) "பயல் நமக்கே காது குத்தப் பார்க்கிறான்—இருக்கட்டும்—அவனும் கொஞ்சம் அந்தக் குட்டியைப் பார்த்துச் சந்தோஷமனுபவிக்கட்டுமே. கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போகும்?"—"தர்மராஜ்! நான் போகிற காரியம்—அங்கே ஒரு குட்டி யிருக்கிறாளாம்—அதைக் கொஞ்சம்—ஜோராய் (கடைக்கண்ணைச் சிமிட்டிக்கொண்டு)—அப்படி—பார்த்து விட்டு.

தர்மராஜன்.— குட்டியா! அவள் யார்? நீர் நல்ல ஆஸாமி ஐயா! அவள் எப்படி யிருப்பாள்.

வலபத்திரன்.—(பாடுகிறான்.)

> அம்புலியைப்போல் முகத்தாள்
> அன்ன நடைபோல் நடையாள்
> மின்கொடியைப்போலிடையாள்—

பஸ்! பஸ்! ஜோர்! ஜோர்! ஸ்வாரஸ்யம் கெட்டுப்போம். எல்லாம் போய்ப்பார்த்துக் கொள்ளுவோம்.

அதிகமாய் வளர்ப்பதேன்! நமது பிரயாணிகள் இருவரும் தங்கள் குதிரைகளைத் தயார்செய்து அவைகளைத் தட்டிக்கொடுத்து, அவைகள் மீதேறி திருவூர் மடம் நோக்கிப் புறப்பட்டார்கள். வலபத்திரன் மறுபடி குடிவெறியால் பிதற்றுவதும் உத்ஸாகமாய் பாடுவதுமாய் ஆரம்பித்துவிட்டான்.

வலபத்திரன்.—(பாடுகிறான்.)

> "அடே! கும்பினியான்—
> அடே கும்பினியான் சண்டையிலே
> கோட்டை மெத்தப் பிடித்தோமடா
> கும்பினியான் கொடுத்த கள்ளு
> கொடங்கொடமாய்க் குடித்தோமடா
> நன்னனே நன்னனே."

இப்படி ஒரு பாட்டுப்பாடினேன். மேஜர் தாம்ஸன் வந்து சந்தோஷப்பட்டு சுருட்டுக் குடிச்சுக் கிட்டே 'வல்பத்தர்! (தமிழ் நன்றாய்த் தெரியும் அவனுக்கு) சந்தோஷம். நான் உன்க்கு இனம்—இனம்—இனம் (தொரைக்குமேலே ஒடவில்லை தமிழ் ஹ! ஒற! ஹ!!) என்னவோ 10 மோஹராவாவது கொடுப்பான் என்று நினைத்தேன். ஒரு சிவப்புத்துணியிலே நக்ஷத்திரம் தைத்ததாம். அதைச் சட்டையில் ஒட்டிக்கச் சொன்னான். அதை அப்படியே கசக்கி யெறிந்துவிட்டு 'அடே கும் பினியான் கொடுத்த கள்ளு கண்களெல்லாம் சொக்கு தடா—என்று பாடினேன்—அந்தப் பயல் மகனுக்குக் கோபம்—மீசையைக் கடிக்கிறான். விரலைக்கடிக்கிறான். பூட்ஸ்காலால் தரையை உதைக்கிறான். பார்த்தேன். நமக்குச் சரிப்படாது என்று ஓட்டமாய் வந்துவிட்டேன்.

தர்மராஜன்.—ஆனால் ஏதோ உத்தியோகம்—தங்களுக்கு—என்று—

வலபத்திரன்.—இப்போதானே தெரியும். எனக்கு மஹாவீரனைத் தெரியும். அவன் குதிரைக்காரனாகத்தானிருந்தான். இப்போ காரியதரிசியாய் விட்டான். அவன் வேலை நமக்குத்தானே?

தர்மராஜன்.—ஆமாம்! தாங்கள் இப்போ போகிறீர்களே. முன்பின் அறியாத இடமாச்சே—ஒருவேளை.

வலபத்திரன்.—வீரனும் வெறியனும் இடம் காலம் பார்ப்பானோ. நாம் போகவேண்டியதுதான். யாராவது தடுத்தால் கையில்லையா? கத்தியில்லையா? ஒருகை பார்த்துக் கொள்ளுவோம்.

இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டே நமதுபிரயாணிகள் திருவூர் மடம் முன்வந்து சேர்ந்ததும் அம்மடத்து வேலைக்கார னொருவனிடம் குதிரைகளை ஒப்புவித்து விட்டு கால்நடையாய் மடத்துக்குள் பிரவேசித்தார்கள்

(தொடரும்)

ஆர். எஸ். நாராயணசாமி ஐய்யர். பி. ஏ. பி. எல்.,

ஸுகம் அடைய ஒருவன் நடந்துகொள்ள வேண்டிய விதம்.—இந்த விஷயத்தைப்பற்றி முன்காலத்தில் பிரஹ்லாதருக்கும், அஜகரர் என்ற ரிஷிக்கும் ஸம்வாதம் ஒன்று நடந்திருக்கிறது. அஜகரர் பிரஹ்லாதருக்குப் பின்வருமாறு பதில் கூறி யிருக்கிறார். 'உலகில் காலக்கிரமத்தில் எல்லாம் அழிய வேண்டியதுதான். நிலையுள்ளது ஒன்றும் இல்லை. உலக விஷயங்கள் ஒன்றும் நம்மைக் கேட்டாவது நமக்காகவாவது நடப்பனவாகக் காணப்படவில்லை. ஆதலால் தருமவிருத்தமின்றி வரும் ஸுகங்களை அங்கீகரித்தும், வாராதவைகளைப் பற்றிச் சிந்திக்காமலும், இருக்கிறேன். இதனால் துக்கம் என்னைப் பாதிப்பதே இல்லை. அதுவும் ஸுகம்போல நிலையில்லாததாகவே தோற்றுகிறது. இம்மாதிரி அபிமானம் நீங்கி மலைப்பாம்பின் விருத்தியை அனுஸரித்து யாதொருவிதத்திலும் சித்த சஞ்சலம் ஏற்படாது நான் நடப்பதால் எனக்கு எப்பொழுதும் ஸுகம்தான் இம்மாதிரி மனதின் நிலையை மாற்றிக்கொள்ளுவதே எப்பொழுதும் ஸுகம் பெறுவதற்குத் தகுந்தவழி.

பாரதவினாவிடை: சாந்திபர்வம்,

## நாகா நந்தம்

**NAGANANDA: A CLASSICAL DRAMA**

### 2-வது அங்கம்—முதல் காட்சி

களம்—மலையமலையில் கௌரி ஆசிரமம்

(தாதி ஒருத்தி வரல்)

தாதி.—'அடிதோழி மனோஹரிகே! இன்றைக்கு நெடுநேரமாயும் என்தமையன் மித்திராவஸு இன்னம் வரக்காணோம். உடனே போய் அவர் வந்தாரா என்று அறிந்துவா' என்று எங்கள் அரசகுமாரி மலையவதியால் ஏவப்பட்டிருக்கிறேன். அவள் ஆணையிட்டபடியே செய்வேன்—(முன்வந்து நேபத்யத்தைப் பார்த்து) யார் அது இவ்வழியில் அவ்வளவு பரபரப்போடு தடபுடலாக வருவது? ஓஹோ! சாதுரிகையா?

(இரண்டாவது தாதி வரல்)

முதலவள்.—(நெருங்கி) அடீ தோழீ! சாதுரிகே! என்னடீ இவ்வளவுஆர்ப்பாட்டமாகஎன்னையும்பாராது ஓடுகிறாய்?

இரண்டாவதவள்.—தோழீ மனோஹரிகே! என்னை இராஜகுமாரி மலையவதி "அடி! தோழி சாதுரிகே! இம்மலர்களைச் சேகரிப்பதால் என் உடல் ஆயாஸமடைந்திருக்கிறது. இந்தச் சரத்கால ஸூரியனுடைய வெப்பத்தால் மிகவும் பாதிக்கப்படுகிறேன். நீ உடனே போய் சந்தணப்பொதும்ப*ருள்ளே இருக்கும் சந்திரமணி சலவைக்கல் மேடை முழுதும் இளம் வாழை இலைகளால் நிழலடையும்படி அமைப்பாய்" என்று எனக்கு ஆணையிட்டாள். அந்த ஆணையை முழுதும் நடத்தி இருக்கிறேன். ஆகையால் நான் அரசியிடம் போய் இதை அறிவிப்பேன்.

முதலவள்.—அப்படியானால் உடனே போய் சொல்லும். அங்கு வந்து தன் உடம்பின் தாபத்தை யொழிக்கட்டும்.

இரண்டாவதவள்.—சிரித்து தனக்குள் அவளுடைய தாபம் இவ்வழியில் ஆறுவதன்று! இம்மனோஹரமாகிய சந்தண *லதாக்கிருஹத்தைக் கண்டதும் அவள் துன்பம் அதிகமாகும் என்று பயப்படுகிறேன் (உரக்க)ஆனால் போ. நான் போய் சலவைக்கல் மேடை தயாராய் இருக்கிறதென்று அரசிக்கு அறிவிக்கிறேன்.

[இருவரும் போதல்]

### காட்சி—2

அதேஇடம்.—சந்தணப்பொதும்பர்.

(சிந்தாலீக்கிராந்தையாய் மலையவதி ஒரு தாதியோடு வரல்.)

நாயகி.—(நெடுமூச்சுவிட்டு-தனக்குள்)ஹா! என் இருதயமே! லஜ்ஜையால் அப்பொழுதும் அவனை பார்க்கவிடாது இப்பொழுதும் என்னை விட்டு அவனிடமே ஓடிவிட்டாய்! ஹா! என்ன! உன் நலத்தையே கோறினாய்? (உரக்க) அடீ தோழீ இ சாதுரிகே! தேவி ஆலயத்திற்கு எனக்கு வழிகாட்டுவாய்?

தோழி.—தாங்கள் சந்தணத் தோப்பிற்கன்றோ புறப்பட்டது?

நாயகி.—(வெட்கத்தோடு) ஹா! நீ நல்ல ஸமயத்தில் நினைப்பூட்டினாய். வா. அங்கேயே போவோம்.

தோழி.—அம்மணீ! வாரும்.(சந்தணத்தோப்பின் பக்கம் போகிறாள்.)

நாயகி —(வேறு பக்கம் போதல்.)

தோழி.—(பின் பக்கம் பார்த்து—விஸனத்துடன்தனக்குள்) அஹோ!என்ன மெய்ம்மறந்து இருக்கிறாள்! தேவி கோவில்பக்கம் அல்லவா போய்விட்டாள்—(உரக்க) அரசி! இந்த வழியில் அல்லவா சந்தணத் தோப்பிருக்கிறது. தயவுசெய்து இந்தவழி வாரும்.

நாயகி.—(வெறும் சிரிப்போடு அவ்வாறே செய்கிறாள்)

தோழி.—இதோ பாரும், சந்தணத்தோப்பு இது தான். இதனுள் தாங்கள் தயவுசெய்து சலவைமேடைமேல் சற்று இருந்து விடாய் ஆற்றும்.

நாயகி.—(நெட்டுயிர்த்து—தனக்குள்) ஹே! புஷ்பபாணா! அழகில் உன்னிலும் சிறந்த அவனிடம் ஒன்று செய்யமாட்டாய். ஒருத்தி—எளியேன்—குற்றம் ஒன்றும் செய்யாத என்னை—கேவலம் ஓர் பெண்ணை வாட்டுவாய்? உனக்கு வெட்கமென்பதில்லையா? (தன்னைப் பார்த்து—ஆசைநோய் காட்டிக்கொண்டு உரக்க) ஸூரியனது கிரணங்களை உள்விடாமல் நெருங்கி அடர்ந்த தருக்கள் நிறைந்த இந்த சந்தணத்தோப்பில் வந்தும் என் தாபம் என் குறையவில்லை?

தோழி.—(சிரித்துக்கொண்டு) இந்தத் தாபத்தின் காரணம் எனக்குத் தெரியும். என் அம்மணீ! தாங்கள் தயவுசெய்து உண்மை ஒளிக்காது என்னிடம் என் சொல்லக்கூடாது?

நாயகி.—(தனக்குள்) என் ரகசியத்தை இவள் அறிந்து விட்டாற்போல இருக்கிறது. நான் கேட்பேன்—(உரக்க) தோழி! நான் என்ன உன்னிடம் சொல்லாது ஒளித்தேனடி? அதன் காரணம் யாது சொல்லு பார்ப்போம்.

தோழி.—அதோ பாரும்! உமது மனதிற் பதிந்தவன்!

நாயகி.—(குதூஹலத்தோடு எழுந்து இரண்டு மூன்று அடி முன்வைத்து) எதோ! எதோ! அவர் எங்கே இருக்கிறார்?

தோழி.—(ஸந்தோஷத்தோடெழுந்து) அரசிஇ! யார் அவர்?

நாயகி.—(லஜ்ஜையால் உட்கார்ந்து, குனிந்த தலையோடு விளங்குகிறாள்)

தோழி.—அரசிஇ! இதுதான் நான் தங்களுக்குச் சொல்லவேண்டுமென்று இருப்பது! தங்கள் உள்ளத்தைக் கவர்ந்த வரனைத்தான் அன்று கனவிலும் தேவி உங்களுக்குக் கொடுத்ததும். சற்று நேரத்திற்கெல்லாம் புஷ்பபாணத்தை ஏவிநிற்கும் மன்மதன்

---

* பொதும்பர் = கொடியாலாகியவீடு = லதாக்கிருஹம்

தானே என்னும்படி அவரையே நேரில் தாங்கள் பார்த்தீர்கள். அவர்தான் உமது தாபத்திற்கு மூலகாரணம். அக்காரணத்தால் தான் இந்தச் சந்தணவனமும் சுபாவத்தில் குளிர்ச்சி யுடையதானாலும் உமது தாபத்தை அடக்கவில்லை: குறைக்கவும் இல்லை:

நாயகி.—(சாதுரிகையின்உச்சிமேல் கைவைத்து) தோழீ! வாஸ்தவமாக நீ 'சாதுரிகை' தான்—ஸாமர்த்தியசாலி—கெட்டிக்காரி. இன்னமும் உன்னிடம் என் ஒளிக்கவேண்டும். நான் சொல்லுகிறேன்.

தோழி.—தாங்கள் எல்லாம் சொல்லி ஆய்விட்டது. இன்னம் அதிகம் என்ன சொல்லவேண்டும்? ஆசைப் பெருக்கால் பிராந்திப்படாதியும்—கஷ்டப்படாதியும். நான் வாஸ்தவமாகவே 'சாதுரிகை.' அவரும் அரசியைக் காணாது ஒரு க்ஷணநேரம் கடப்பது யுகமாக எண்ணிக் கவலைப்பட்டிருப்பார். பிறரோடு, அரசியைப் பிரிந்து இருப்பதால், ஸுகமாக இருக்கமுடியாது. இதையும் நான் கண்டிருக்கிறேன்!

நாயகி.—(கண்ணீர்விட்டு) எனடி தோழி! அந்த அதிருஷ்டம் எனக்கெப்போடிவரும்?

தோழி.—அரசி! தாங்கள் இப்படிப் பேசாதியும். மார்பில் விளங்கும் திருவைப் பிரிந்த விஷ்ணு ஸுகமாக இருக்கமுடியுமா?

நாயகி.—அன்பன் இனிமையன்றி வேறென்ன பேசமுடியும்! தோழி! நான் முன்னிலும் தாபிக்கப்படுகிறேன். ஏனென்றால்—அப்பெரியோன் நான் வாயார நல்வரவு கூறாததை மரியாதைக்குறைவென்று எண்ணினாலும் எண்ணலாம்.—(அழுகிறாள்.)

தோழி.—அழாதிரும் அம்மணீ!—எப்படி அழாதிருக்கத்தான் முடியும்; உமது மனத்தின் தாபம் மிகவும் தீவிரமாகப்பாதிக்கிறது! நான் இப்பொழுதென்ன செய்யட்டும்? நான் அவள் மார்பகத்தில் சந்தணக்குழம்பைப்பூசுவேன் (எழுந்து சந்தண முளைகளை கசக்கிச் சந்தணச்சாற்றை மார்பில் பூசுகிறாள்) நான் சொல்றேனே! அழாதிரும். நான் பூசிய சாறு, தமது கண்களிலிருந்து இடைவிடாது விழும் நீர்த்துளிகளின் வெப்பத்தால், தமது தாபத்தைப் போக்காது மயக்கிவிடும். அழாதீயும் (தாமரை இலையால் விசுறுகிறாள்.)

நாயகி.—(கையைத் தடுத்து) தோழீஇ! விசிறாதே! இத்தாமரை இலையின் வாடை உஷ்ணம் வீசுகிறது.

தோழி.—அத்தைப்பழியாதீயும். தமது நெட்டுயிர்ப்பின் வாடையால், தாமரை வாடையும் உஷ்ணம் வீசிற்று. குளிர்ந்த சந்தணச் சாற்றின் சேர்க்கையால் குளிர்ச்சி மிகுந்ததாமரையும் உஷ்ணமே வீசுகிறது.

நாயகி.—(கண்ணீர்சிந்த) தோழீ! இந்தத் தாபத்தைத் தணிக்கவும் வழி உண்டா?

தோழி.—உண்டு, அவரே நேரில் வந்தால்.

(நாயகன் விதூஷகனோடு வரல்)

(தொடரும்)

## மாணவர் பக்கம்

## STUDENTS' PAGES

### வியாஸ விதானம்

### *Essay writing*

### III. விளக்க வியாஸங்கள்

### EXPOSITORY ESSAYS

### (3) புதிய விஷயங்கள்—கம்பியில்லாத் தந்தி

### New discoveries & Inventions—Wireless Telegraphy

**குறிப்பு.**—ஆதிகாலத்திய நிலை—விஷய விளக்கம்—உபயோகங்கள்—எதிர்காலச் சிறப்பு.

தந்தி ஏற்பட்டுக் கொஞ்சகாலம் வரையில் ஊர்விட்டு ஊர் ஸங்கதிகள் தெரிவிப்பதில் சிறந்த வழி ஏற்பட்டுவிட்டது என்றுஜனங்கள் களித்திருந்தனர். ஒருஊரில் இருக்கும் குமிழியை அமுக்குவதாம் அது எவ்வளவு தூரத்திலிருக்கும் ஊரானாலும் ஸரி அங்குச் சற்றேறக் குறைய அதே ஸமயத்தில் தெரிந்துவிடுவதாம்! இதைவிட ஸமாசாரங்கள் அனுப்ப ஸஹாயமான கருவி எது இருக்கும் என்ற வியப்பு எல்லோரையும் கவர்ந்திருந்தது. இவ்வாறு நடந்துவருகையில் மின்சார விஷயமாகப்பாடுபட்டு வந்த சக்தி தத்வ சாஸ்திரிகளில்ஹேர்ட்ஸ் என்ற நிபுணர் மின்சாரம் ஓரிடத்தில்வெளியேறினால் அங்கு அது காந்த மின்சார அலைகளை உண்டாக்கி ஸுமார் கண்ணிமைப்பொழுதில் 186000-மைல் தூரம் வீதம் அவைகளை ஊடுருவிச் செல்லும்படி செய்கின்றது என்ற அத்புத உண்மையைக்கண்டுபிடித்தார். இக் காந்தமின்சார அலைகள் மூலமாகமாத்திரமே அடையாளங்கள் வெகு தூரங்களில் உண்டாகும்படி செய்யலாம் என்று ஸர் வில்லியம் பிரீஸ், ஆலிவர்லாட்ஜ் என்பவர்கள் தெளிவுறக்காட்டினர். பின் வந்தவர்கள் இந்த விஷயங்களைவிடாது எடுத்துக்கொண்டு முயற்சித்தனர். மார்கோணி என்பவர் லண்டன் நகரத்தில் கொஞ்சதூரம்வரை வெறும் மின்சார வெளிப்பாட்டாலேயே கம்பிகள் ஸஹாயமின்றி ஸமாசாரம் தெரிவித்தனர். பின்னர் வரவர அதிகதூரங்களுக்குஇம்மாதிரி அனுப்புவித்துப் பழகி இப்பொழுது ஸுமார் 3000 மைல் தூரம்வரை இம்மாதிரி கம்பிகளின்றி ஸமாசாரங்கள் தெரிவிக்க இடம் உண்டாகிவிட்டது. இப்பொழுது நமது சக்கிரவர்த்தியாகவிருந்து இங்கு மகுடாபிஷேகம் செய்து கொள்ள வரும் ஐந்தாவது ஜார்ஜ் என்பவர் இளவரசாக 1906-ம் வருஷம் இங்கு வந்தகாலத்தில் பட்டணம் துறைமுகத்தில் இவர் கப்பல் வந்ததும் கவர்னர் வீட்டிலிருந்து 'கப்பலைவிட்டு மாலை இறங்கலாம், தயவுசெய்யவேண்டும்' என்ற ஸமாசாரம் இவருக்குக் கம்பியில்லாத்தந்தியால் தெரிவிக்கப்பட்டது.

இனி கம்பியில்லாது ஸமாசாரம் தெரிவிக்கும் விதத்தை ஒருவாறு எடுத்து விளக்குவோம். ஸமாசாரம் அனுப்பும் இடத்திலும், பெற்றுக்கொள்ளுமிடத்திலும் மின்சார யந்திரங்களோடு ஸம்பந்தப்பட்ட ஒவ்வொரு மேல்கீழாக நிற்கும் நீண்ட கம்பி காணப்படும். இவைகளோடு ஸம்பந்தப்பட்ட மின்சார மாறுபாடுகளைக் கண்டு பிடிக்கும் யந்தரம் ஒன்று இருக்கும். ஸமாசாரம் அனுப்பும் இடத்திலிருக்கும் கம்பியில் அதிக சக்தியுடைய மின்சாரத்தை வெளிவிட்டால் அது சுற்றிலும் இருக்கும் வெளியில் காந்த மின்சார அலைகளை உண்டாக்கி விடுகின்றது. இது கணத்திற்கு 186000 மைல் வீதம் பரவி, ஸமாசாரம் சேரவேண்டிய இடத்திலுள்ள கம்பியைத்தாக்கி அதில் அதற்கேற்ற நடுக்கத்தை உண்டாக்க அதன் சக்தியை அடியிலிருக்கும் கண்டு பிடிக்கும் யந்தரம் குறித்து விடும். இம்மாதிரி விதம் விதமான சக்தியை உடைய மின்சாரத்தை விட்டு விட்டு வெளிப்படுத்துவதால் ஒருவித தந்தி நெடுங்கணக்கு உண்டாக்கிக்கொண்டு வேண்டிய விஷயங்களை எளிதில் தெரிவிக்கலாம். இம்மாதிரி செய்வதால் ஒழுங்காகத் தந்தி மரங்கள் நட்டு கம்பி போடவேண்டிய வேலை லாபம்தானே! மேலும் தந்தியை விட இது அதிசீக்கிரத்தில் பாய்ந்தோடும் திறனுடையது.

கம்பியில்லாத் தந்தியால் ஏற்படும் உபயோகங்கள் அநேகம். சண்டை முதலியன செய்ய வேண்டிய காலத்தில் தந்திக்கம்பி நட்டு ஸமாசாரம் தெரிவிக்க முடியுமா? அப்பொழுது முற்கூறிய யந்திர மூலமாக எளிதில் சண்டை நிலைகளைத் தெரிவித்து வரலாம். கடலில் போகும் கப்பல்களுக்கு அபாயம் வந்து விட்டால் கப்பல் தலைவன் தப்புவிக்கக்கூடியவர்களை தப்புவித்துக் கொள்ள ஏற்பாடு செய்து விட்டு ஒரு ஸீஸாவில் தன் கப்பலுக்கு இன்ன ஆபத்து இன்ன விடத்தில் வந்தது என்று எழுதி அடக்கம் செய்து கடலில் போட்டுவிட்டு இறக்க வேண்டும் என்பது ஒழுங்கு. இக்கம்பி இல்லாத் தந்தி வந்த பின்பு அபாயத்துள் அகப்படும் கப்பல்கள் கதி முன்போலத் துக்ககரமானதல்ல. அபாயம் வரும் என்ற காலத்திலேயே இந்த ஸமாசாரத்தை அருகாமையிலுள்ள ஊருக்குத் தெரிவித்து வேண்டிய முன் ஜாக்கிரதையுடனிருக்கலாம். அப்படியின்றி இறக்கவேண்டி வரினும் ஸங்கதியை உடனே ஊருக்கும் தெரிவிக்கலாம். மேலும் வாயுவிலிருக்கும் மின்சார நிலைகள் இந்த யந்திரத்தாலும் வெளியாகும். இடி மழை வருவதற்கு முன்னரே இந்த யந்திரம் ஒருவாறு அதைக் குறிப்பித்து விடும். எல்லாவிதத்திலும் இது அதிக ஸாதகமாயினும், ஒரு குறை மாத்திரம் இதற்கு உண்டு. அனுப்பும் ஸங்கதிகள் ரஹஸ்யமாக இருக்க முடியாது. கம்பி இல்லாது செய்யும் வேலையாதலின் யந்திரம் இருக்கும் எல்லாவிடங்களுக்கும் அனுப்பும் ஸங்கதி வெளியாகி விடும். ஆதலால் ராஜரீக ரஹஸ்யங்கள் விஷயத்தில் இதை உபயோகிக்க இயலாது.

இதன் விஷயங்கள் அதிகமாகத் தெரியவர, சொல்ப பணச் செலவில் வெகுதூரம் வரையில் சமாசாரம் அனுப்பக்கூடிய சக்தி நமக்கு வந்துவிடும். இதனால் உலகிலிருக்கும் வியாபாரம், பொது ஜன நன்மை எல்லாம் வரவர விருத்தியானாலும் ஆகவிடமுண்டு. கொஞ்ச காலத்திற்கு முன்புதான் ஒரு புதிய கண்டு பிடிக்கும் யந்திரம் செய்திருக்கிறார்களாம். இதில் மின்சார அலைகள் வந்து தாக்குங்கால் உண்டாகும் நடுக்கத்தால் ஒருவித சப்தம் உண்டாகின்றதாம். இதை சரியானபடி செய்தால்பேசும் குரல்கூட கேட்கும்படி செய்யலாமாம். ஆகவே ஊர்களுக்குள்ளே தூரமான விடங்களுக்கு ஏற்பட்டுள்ள பேசும் தந்திகளும் இனி கம்பிகள் ஸஹாயமின்றித் தொழிற்படலாகும். மனிதன் மனதை அடக்கி எந்தவழியில் விட்டாலும் அங்கு ஆழ்ந்து சென்று நின்று அத்புதத்தொழில்களைச் செய்யும் ஆற்றலிதற்கிருப்பதால், இவ்விஷயங்களில் என்ன அத்புதங்கள் இனி ஏற்படுமோ இப்பொழுது ஒன்றும் உறுதியாகக் கூறமுடியாது.

## இதைப்போல விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

1. ரேடியம் என்ற அத்புத வஸ்து
2. ஆகாய கமனம்
3. விசித்திர படம் காட்டும் ஒளி
4. நக்ஷத்திர வஸ்துக்கள் அறியும் விதம்
5. கண்
6. ஆகாயத்திலுள்ள மின்சாரம்
7. பூமி சுற்றும் விதம்
8. பொது ஆகருஷண சக்தி
9. கிரஹகதி
10. சப்தாகர்ஷண யந்திரம்

## பொதுக்குறிப்புகள்

1. ஆதிகாலநிலை
2. விஷயவிளக்கம்
3. உபயோகங்கள்
4. எதிர்காலச்சிறப்பு.

# மொழிபெயர்ப்பு விளக்கம்

# TRANSLATION MODELS

**(7) Why does a cloud fall as rain instead of in a lump?**

It is quite lately that we have been able to learn the very remarkable answer to this question. We might suppose that, when the air cooled enough, the water-vapour, or some of the water-vapour, in it would be bound to turn liquid in a mass and then fall *plump*. But water cannot behave in this way, because there are certain conditions which must always be present when it turns liquid.

It is necessary that there shall be some solid separate point or particle of something around

which the water-vapour can condense when it turns liquid. It seems to matter very little what the thing is, but there must be something, and the consequence is that rain falls in drops. It is the discovery of the cause of the formation of rain drops that enables us to answer this question. The particles that perform this service for the drops may be small or great. Oftenest perhaps they are visible specks of dust or dirt and so on.

We have also discovered that molecules that make up the gases of the air are liable to be broken up in a peculiar way by the action of electricity, and rain drops can form upon these broken-up molecules. We shall not learn much more about the wea‧her until we know more of the electrical happenings in the air.

### மேகம் மொத்தமாக விழவேண்டியிருக்க, மழையாகப் பொழிவானேன்?

இக்கேள்விக்கு மிகத்தகுதியான மறுமொழி இன்னது என்பது கொஞ்சநாள் *முன்பாகத்தான் எங்களுக்குத் தெரியவந்தது. ஸாதாரண வாயு தகுந்த அளவு குளிர்ந்து விட்டால் அதிலிருக்கும் நீராவி அல்லது அதன் சிலபாகம் உடனே ஒருமித்துத் திரவமாகி மொத்தமாகவிழுந்து விடவேண்டும் என்று நாம் மதித்திருக்கலாம். அவ்வாறல்ல ; ஆவி திரவமாக மாறுங்கால் சிற்சில ஒழுங்குகள் எப்பொழுதும் காணப்படவேண்டும் ; ஆதலால் தண்ணீர் இவ்வாறு மாறுது.

ஆவி திரவமாக மாறுங்கால், அது குளிர்ந்து படிவதற்குத் தனிதிட அணுக்களாவது, எந்த வஸ்துவின் சிறு பாகமாவது இருக்கவேண்டுவது இன்றியமையாதது. அந்த வஸ்து யாதாயினும் ஒரு பொருட்டல்ல என்று தோற்றுகிறது ; ஆனல் அம்மாதிரி வஸ்து ஒன்று இருப்பதனல்தான் மழை துளிகளாக இறங்குகின்றது. மழைத்துளிகள் உண்டாவதற்குக் காரணம் இன்னது என்பதைக் கண்டு பிடித்தபின்புதான் இக் கேள்விக்குப் பதிலுரைக்கும் திறன் எமக்கு உண்டாயிற்று. துளிகள் உண்டாவதற்கு இம்மாதிரி உதவி புரியும், சிறு பாகங்கள், மிகச் சிறியவையாகவாவது,பெரியவையாகவாவது இருக்கலாம்.ஸாதாரணமாக அவைகள் கண்ணுக்குப் புலப்படும் தூசிகள் அழுக்கு முதலியவைகளாக ஒருவேளை இருக்கலாம்.

ஸாதாரண வாயுவில் உள்ள வாயுக்களின் அணுக்கள் மின்சாரத்தின் தொழிலால் புதுமையாகச் சிதறிப்போகும் என்பதையும் நாம் கண்டுபிடித்து விட்டோம். இம்மாதிரிச் சிதறிய அணுக்கள் மேலும் மழைத்துளிகள் படியலாம். ஸாதாரண வாயுவில் ஏற்படும் மின்சாரத் தொழில்களைப்பற்றி மேன்மேலும் உணர்ந்தால் அல்லது வாயுவின் நிலையைப்பற்றி இதற்குமேல் நமக்குத் தெரிந்துகொள்ள முடியாது.

## சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்குமான பக்கங்கள்

## CHILDREN & LADIES' PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

### அத்தியாயம் 4

### மரணம்

இறப்புறும் என்பது திண்ணம்—நாம்
இதயம் கலங்கியென் இங்கேயே நண்ணம்
சிறப்புறு தேவின் செவ்வண்ணம்—சேர்
திருவடி சிந்தைவைத்திறப்போல் லெண்ணம்

இப்பொழுது வேறு ஒரு இடம் வந்துவிட்டோம் மாலை 7-மணி. தன் காந்தியைக் கண்டே ஆனந்த பரவசமாகிச் சந்திரன் தனது வெள்ளிய கிரணங்களை வாரி இறைத்தான். இந்த ஸூரிய சந்திர நக்ஷத்திரங்களை என்னென்று கூறுவோம். இவைகளெல்லாம் கடவுளது இரக்கமும், பற்றுமில்லா மக்கண்கள் என்னலாம். இவைகள் கடவுளுக்கே ஸமமெனவும் கூறலாம். இவைகள் மனிதனது தாழ்மையை நன்ருக அவனுக்கே விளக்கிக்காட்டி, பயம், கைகூடாக் கோறிக்கைகள், ஆத்மகண்டனம் இவைகள் மூலமாக அவனை ஆராதனை, பிரார்த்தனை ஸ்தோத்திரம் முதலியவைகளைச் செய்யும்படி தூண்டுகின்றன. முன்னது எப்படியாயினும் ஆகட்டும், பின்னவை விஷயமாக எல்லோருக்கும் அனுபவம் உண்டு. கடவுளை நோக்கிச் செய்யும் ஸ்தோத்திரங்கள் வீணுகவில்லை ; மனம்உடைந்து வருந்துபவர் துக்கம் ஒருவாறு அந்த அத்புதவித்தால் நீங்குகின்றது. இது நிற்க; சந்திரன் தன் அழகைக்கண்டுமகிழும் ஓர் ஆடம்பரமான பெண்போன்றிருந்தான். அவள் எவ்வாறு ஆடம்பர நடபடலில் தனது ஓர்ப் படி குழந்தையின் கஷ்டத்தைக் கவனியாதிருப்பாளோ அப் படி இவனுமிருந்தான். கீழே மாடியின்மேல் திறந்தவெளியில் நன்ருக நிலாக் காய்ந்து கொண்டிருந்தவிடத்தில் ஒரு பளபளப்பான கட்டில் போட்டிருந்தது. அதன்மேல் இரண்டு மூன்று மெத்தைகளும் அநேக மிருதுவான தலையணைகளும் போடப்பட்டிருந்தன. இவ்வளவு நன்ருக இவைகள் அமைக்கப்பட்டிருந்தும் அதில் புரண்டுகொண்டு வருந்திய ஓர் யௌவன புருஷனுக்கு இவைகளால் ஒருவித ஸுகமும் ஏற்படவில்லை. அருகே ஓர் அழகிய யௌவனப் பெண் நின்றுகொண்டிருந்தாள். அவள் முகத்தில் அத்புத புத்திசாதுர்யம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அவள் கண்களில் உண்மையான துக்கத்தால் ஏற்பட்ட கண்ணீர் நிறம்பியிருந்தன. படுத்திருந்தவனது சோர்ந்த அவயவங்களை அவன் மெதுவாகப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணன்.—(படுத்திருந்த புருஷன் பெயர்) மஹாத்துமாவான உனது தகப்பனர் எப்பொழுது வந்து எனக்கு இத்தருணத்திற்குத் தக்க உதவி புரிவாரோ அறியேன்?

லக்ஷ்மி—பிராணநாதா இன்னும் நாழிகையாகி விடவில்லை இன்னும் ஒருமணி நேரத்திற்குள் வந்து விடுவார். துக்ககரமான தந்தியைக்கண்டதும் அரைக்கணமேனும் என்தகப்பனர் தாமதிக்கமாட்டார்.

என்று கூறி கணவன் முகத்தைப் பார்த்தாள். அப்பொழுது அவன் முகத்தில் காணப்பட்ட வெளுப்பைக்கண்டு உள்ளம் நடுங்கினள். பாபம்! என்ன செய்வாள்!

கிருஷ்ணன்.—என் பிராணன் தத்தளிக்கிறது! மனம் மிகச் சஞ்சலப்படுகிறது. என் கண்மணீ! என் அங்கங்கள் ஓய்கின்றன. நான் இறக்கும் முன் உன் தகப்பனர் தெளிந்த முகத்தை ஒரு தரமாவது காண்பேனே மாட்டேனே தெரியவில்லையே! என்ன செய்வேன்!

லக்ஷ்மி தன் கணவன் முகத்தை ஒருதரம் கண்ணெடுத்துப் பார்த்தாள்! ஐயோ பாவம்! தன் கண்ணிற் கருமணியாய் விளங்கிய தன் நாதன் முகத்தில் பிரேதக்களை வந்துகொண்டிருக்கக் கண்டாள்! தேவாதிதேவனை விடாது கட்டிக்கொண்டிருந்தபொழுதே யமனைக் கண்டதும் மார்க்கண்டேயன் ஒளிபிழந்து என்ன பாடுபட்டான்! ஒரு பக்தனையே மரணம் இப்பாடுபடுத்தி விட்டதே! அவன் மேலிடப்பட்ட விபூதி இருந்து என்ன, ஸர்வசத்திமானைச் சுற்றிப்போட்ட கையிருந்தென்ன, பூஜையில் குவித்திருந்த புஷ்பங்களிலிருந்தும் என்ன! யமனது காலபாசம் பட்ட மாத்திரத்தில் அவன் கதி இவ்வாருயிற்று என்று அவன் கண்கள் நன்ருக விளக்கவில்லையா? காலையில் ஒளிமழுங்கும் சந்திரன் காந்தியைப்போன்ற நிலை தன் கணவன் முகத்திலிருந்ததைக் கண்டாள் லக்ஷ்மி! நடுநடுங்கிப் போனள்! கண்களில் முத்து முத்தாகக் கிளம்பி எழுந்த கண்ணீரை, அடக்கிக் கூறலுற்ருள்.

லக்ஷ்மி:—'நாம் இருவரும் சேர்ந்து மேன்மை அடையவேண்டுமென்றே கடவுள் நம்மைச் சேர்த்து வைத்தார். நம்மிருவருக்கும் இருந்த காதலுக்கு உவமை வேறு ஏதாவது உண்டோ! இப்படிக் கடவுள் எண்ணம் பூர்த்தியானது கண்டு அவர் நம்மை இப்பொழுது கைவிடமாட்டார் என்று தோற்றுகின்றது. (வந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு)என்ன நடந்தாலும் நடக்கட்டும்! என்னை நானிருக்கும் பரிசுத்த நிலைக்குக் கொண்டுவந்த உங்கள் வரம்பிலாக்காதலை இடைவிடாது எண்ணிப் பாவசமாவதைவிட எனக்குச் சிறந்ததோர் தவமும் இல்லை. பிராணநாதா, உமது இடையருக்காதலே, எனக்கு ஸம்பத்து, ஆனந்தம், உயிர், ஞானம், மதம், வேதங்கள் ஆகிய எல்லா அரிய விஷயங்களாகவும் இருந்தது. இந்தக் குளிர்ச்சியான சந்திரிகையில், பரப்ரஹ்மம், ஆத்ம ஸம்பந்தமான அரிய விஷயங்கள், முதலிய அத்புத ஸங்கதிகளை எடுத்துரைத்து நீங்கள் என்னுடன் ஆனந்தித்த காலங்கள் எவ்வாறு என் நினைவை விட்டகலும்? என் தகப்பனர் சிறு வயதில் என்னைப் பழக்கிய வழியில் இவையல்லவோ என்னை நிலைபெறச் செய்தன. அக்காலங்களில் எந்தப் பரப்பிரஹ்மத்தைப்பற்றி தங்கதடையின்றி மடைதிறந்தாற்போல், ஆனந்தப் பரவசமாகி எனக்கு எடுத்துரைத்து என்னையும் நிஜபக்தி செய்யும்படி தூண்டினீர்களோ, அந்தப் பரம்பொருளை இப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன், ராமன், நடராஜா, விச்னேசுவரர் ஆகிய எந்த மூர்த்தமாகவாவது எண்ணி ஈடுபடுங்கள். இத்தருணத்திற்கு இதைவிடச் சிறந்ததொன்றுமில்லை!

கிருஷ்ணன்.—என் கண்மணீ! நீ சொல்வது நியாயம்தான். ஆயினும் இது செய்வதற்கு முன்பு, உன்னுடன் கணவனைப்போலக் கலந்து ஸல்லாபாதிகள் செய்து ஆனந்திக்க வேண்டுமென்று எனக்கு அடங்கா ஆவல் உண்டாகிறதே! ரோஜாபுஷ்பம்போல் உனது கன்னங்கள் தாமரைபோன்ற உனது கண்கள் முதலியவைகளை முன்போல் அநுபவிக்க எண்ணுகிறேன்.

லக்ஷ்மி.—நாதா! நாதா! இதைவிட வேறு எனக்கு என்ன ஸந்தோஷம் இருக்கிறது! நீங்கள் கட்டளை இட்டபடி செய்துவிடுவேன். ஆயினும், நாதா! நீங்கள் இந்த ஸமயத்தில் மனதை அற்பமான சிற்றின்பங்களில் அலையவிடலாகாது. என்கன்னங்கள் ரோஜாக்களும், என்கண்கள் தாமரைகளுமாக விருந்தால், எனக்குவன் அவைகள் முன்போல ஆனந்தம் கொடுப்பதில்லை, நாதா! நான் தாமரைகளை எவ்வளவோ அனுபவித்தாய் விட்டது; ரோஜாக்கள் எனக்குத் தேன்போன்ற ஆனந்த மீந்தன. ஆயினும், ஒருவித ஸகாயமுமின்றித் தவிக்கும் உம்மைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற இக் கண்களையும், நீங்கள் பட்டினியாக வருந்துங்கால் அன்னம் அரைத்து வரும், இந்தக் கன்னங்களையும், பிடுங்கி எறிந்துவிடவேண்டாமா, நாதா? இப்பொழுது இந்தக் கண்களிலும் கன்னங்களிலும் என்ன இருக்கிறது? கடலினும் கரியதாயும் அகன்றதாயும் உள்ள இந்த ஆகாயத்தைப் பாருங்கள்! நாம் பக்தி செய்யப் பழகிய மஹா தேவரைப்போல எவ்வளவு சாந்தமாக இருக்கிறது! மிக ரஸமாயும் அமிருதமயமாயும் வரம்பில் அன்புமயமாயும் உள்ள வெள்ளிய கிரணங்களை வாரி வீசும் சந்திரனைப் பாருங்களேன்! இவைகளை எல்லாம் ஸ்ருஷ்டித்த ஸர்வேசுவரனை மறவாமலிருங்கள். ஆஹா! நமது அல்ப துக்கங்களையும் கவலைகளையும் கவனியாமல் என்ன சாந்தமாக நிற்கின்றது சந்திரன்!

லக்ஷ்மி வாக்கின் தாட்டி அர்த்த புஷ்டி, அவள் குரலின் தழதழப்பு, மனங்கொள்ளாது மண்டி எழும் பக்தி, மொழிகளுக்கு ஏற்ற அபிநயங்கள், அவைகளுள் விளங்கிய கற்பனைச் சிறப்பு ஆகிய இவைகள் ஒருங்குகூடி கிருஷ்ணன் மனதில் பொங்கி எழுந்த சிற்றின்ப ஆவலை சின்னபின்னமாகச் சிதற அடித்தன. உண்டோ, இல்லையோ என்று தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த அந்திய காலத்தில் தனக்குண்

டான மூடத்தனத்தை எண்ணிச் சற்று நேரம் அவன் துக்கித்தான். பின்னர் தன் காதலியை நோக்கிக் கூறுவான்.

கிருஷ்ணன்.—'என் கண்மணியே! உன் தகப்பனுருக்கு ஏற்ற பெண் நீதான். இன்றைக்கு நான் இறந்துவிட்டபோதிலும் ஓர் ஆசை மாத்திரம் என்னை விட்டகலாது. அடுத்த ஜன்மத்தில் உன் கணவனாகவாவது உன் பெண்சாதியாகவாவது நான் பிறந்துவிடவேண்டும் என்பதே என் கோரிக்கை. நாமிருவருமாகச் சேர்ந்து கிருஷ்ணன்போல் விளங்கும் ஆகாயத்தை நோக்கி, பேதாபேதமின்றி ஒன்று பட்டு மெய்மறந்து அதிலடங்கிய அன்பு, அத்புதம், அனுபவச்சிறப்பு ஆகிய இவைகளை வயிறாரப்பருகுவோம், வா. ஆகாயத்தின் துங்கம் கலந்த ஒய்வு, மெத்தனமான நிச்சப்தம் ஆகிய இவைகளைப்பார், நிச்சப்தமாக இருக்கும் சந்திரனையும் பார்த்து இவைகளுக்கு அப்பாற்பட்ட அவனையும் நினைத்துப்பார். உன் தகப்பனுர் உனக்குச் சொல்லிக்கொடுத்திருக்கும் 'வாரும் வாரும்' என்று தொடங்கும் ஸ்தோத்திரத்தைச் சொல் பார்ப்போம்.

லக்ஷ்மி.—(துதிக்கத் தொடங்கினுள்:—)

வாரும் வாரும் என்றன் நாதா—என்
மருவுயிர்க் கென்று மாதார மாம்பாதா
ஒரும்நான் இருந்தா லும்சரியே—இறப்
புற்றாலும் விரிகதி மற்றுர் நீவிரியே.
உன்னலேன் இஹ வாழ்வைச் சற்றும்—எனக்கு
உணவும் பணமும்வேண்டாம் பக்தியே பற்றும்
என்னுள்ளே கண்டிட வேண்டும்—உள்
இசையொளியுஞ் சிறப்பும் என்பதால் யாண்டும்
விண்மீன் பெரிதாகி யிலங்கும்—அதை
விட உள்ளொளி பெரிதாய் கிரஹத்திற் றுலங்கும்
உண்மீதான் அவன் நாங்கள் ஒன்றே—எமை
உறுவாட்கும் மாயைக்கும் பிரிக்க மெய்ம்பின்றே.

இவ்வாறு லக்ஷ்மி ஸ்தோத்திரம் செய்து முடிந்ததும், அன்னம்மாள் அழுகுரல் அரவம் வாயிலில் கேட்க, வீடு குலுங்கியது. 'நாதா! நம் அப்பா வந்துவிட்டார்.' என்றுள் லக்ஷ்மி. அந்த ஸமயத்தில் கிருஷ்ணன் தாய் அத்தியாவஸ்தையிலிருக்கும் மகனுக்குப் பால்கொண்டு வந்தாள். அவள் ஒரு பெரிய மூடம்; அடிக்கடிச் சண்டையிடுவாள். அவள் புருஷனிறந்து வெகுகாலமாய் விட்டது. அவளுக்குக் கிருஷ்ணன் ஒரே பிள்ளை; அவன் மூலமாக அவளுக்கு இன்னும் ஒரு பேரப்பிள்ளையும் உண்டாகவில்லை. இவளைக்கண்டால் கிருஷ்ணனுக்குப்பிடிக்கவே பிடிக்காது; தலையை மிகவெறுப்பாக மறுபுறம் அவன் திருப்பிக்கொண்டான். அவன் அவளைக் கோபத்தில் வைதுவிடுவான்போலத் தோன்ற, இதற்குள் எழுந்துவிட்ட லக்ஷ்மி அவன் காதில் 'நாதா! இனிமேல் உங்களுக்கு என்ன சண்டை வைத்திருக்கிறது. நீங்களே, பரமபதம் போகிறீர்கள். நானும் அங்கே உங்களைத் தொடர்ந்து வந்துவிடுகிறேன்' என்று ஸமாதானப்படுத்தச்சற்று அமைதியுடன் அமர்ந்தான் கிருஷ்ணன். இப்படி இருக்கையில் வாஸுதேவசாஸ்திரியும் அவர் கண்மணியும் மாடி ஏறத் தொடங்க, அன்னம்மாள் அரவம் வர வர ஊரைக் கலக்கத் தொடங்கியது.

சும்மாவிரு பிணமே! நீ எங்கே போகிறுய் உனக்குத் தெரியுமா? மூடமே! இறக்கும்தருணமாக விருக்கும் மாப்பிள்ளையிடம் போகிறுய். அவன் எண்ணம் இவ்வுலகைவிட்டுப் பரமபதம் நோக்கி அலைபாய்ந்துகொண்டிருப்பதால், அவனுக்குச் சாந்தமும், நிச்சப்தமும் வேண்டுமே ஒழிய, உன் பிலாக்கண வைபவத்தால் என்ன பலன்? நீ யாரோடுகூடப் போகிறுய்? மஹா சாந்தநிதியுடன் போகவில்லையா? அவர் பாததூளி பெறுவாயா நீ? இப்படி இருக்க ஏன் வீண் ஆடம்பரம் பண்ணுகிறுய்? பெரிய விஷயங்களை உவமையாகக் கூறில், பரீக்ஷித்திற்கு மரணம் அணுகி வருங்கால் சுகப்ரஹ்மம் எப்படி அவரைத் தேடிச் சென்றுரோ, அப்படியே வாஸுதேவசாஸ்திரியும் யமன் வாயிலகப்பட்டிருக்கும் மாப்பிள்ளையிடம் போகிறுர். அவனும் இவர் எப்பொழுது வரப்போகிறுர் என்று உயிரைப் பிடித்துக்கொண்டிருக்கிறுன்.

வியாதி அறை ஓர் பரிசுத்த பூமி; அவ்விடம் பரிசுத்தர்கள் தவிர மற்றவர்கள் அணுகலாகாது. துக்கம் மிகப் பரிசுத்தமான விஷயம்; அதைப் பரிஹாஸம் செய்யவாவது பழிக்கவாவது கூடாது. மனிதன் படுத்து வருந்தும் படுக்கை ஓர் வேதிக்கு ஸமானம். இதில் பாடுபடுபவன் அகங்காரம் நிச்சப்தமாக ஹோமம் செய்யப்படுகிறது. இவ்விடத்தில் ஏற்படும், ஸ்தோத்திரங்கள், கருணை ஆகிய இவைகளே பரமபதம் சென்றடையும் தூபாதிகள். எவ்வளவு அபலைகளாயினும் பெண்மணிகளே இந்த யாகத்தில் ருத்விக்குகளாவார்கள். அவர்கள் சாந்தமாகத் தம் ஸுகங்களைக் கவனியாதிருத்தல், இரவில் விழித்துக்கொண்டு ஜாக்கிரதையாயிருத்தல், அவர்கள் மிருதுவான ஸமாதான வார்த்தைகள், அனுபவித்துத் தீர்க்கும் வியாதியஸ்தன் விருப்பங்களை ஏவாது உணர்ந்து திருப்தி செய்வது, மடை திறந்தால் வரும் நீர்ப்பெருக்கைப்போல உடைத்துக்கொண்டு வர யத்தனிக்கும் கண்ணீரைத் தடுத்து நிறுத்துதல், வைத்தியர்களால்கூடப் பார்க்க ஸஹிக்காத அவஸரங்களைப் பொறுமையுடனும் தங்கு தடையின்றியும் தாங்கிக்கொண்டிருத்தல், இடைவிடாது அவர்கள் செய்யும் கடவுள் ஸ்தோத்திரங்கள், ஒன்று சேர்ந்து வியாதி அறையை ஒரு கோயிலேயாக்கி விடுகின்றன. அங்கு நமஸ்காரம் செய்து பகவத் ஆராதனை செய்தாலும் செய்யலாம். அவ்வறைக்குள்ளேதான் உண்மையான வேதாந்தம் இன்னதென்பதும், அதில் பழகும் விதம் இப்படி என்பதும் வெளியாகும். வெளி வேதாந்தமெல்லாம் வாசா கைங்கரியமன்றி வேறொன்றுமில்லை. இங்கு தற்காலத்துக்காவது மனிதனுக்கு அமைதி உண்டாகும், தன்னயம் கருதும் தன்மை இருந்தவிடம் தெரியாமல் ஓடிப்போய்விடும். ஸாவதானமாக நமது தெய்வத்தன்மை வெளியிலிழுக்கப்படும். உலக ஆரவாரம் ஓய்ந்து நிச்சப்தமாகவிருக்கும்இக்கவிடத்தில்தான், கர்மம் நீங்கிய மதமும், தர்க்கம் நீங்கிய வேதாந்தமும், வீண் பெருமை

நீங்கிய அன்பும் காணப்படும். வியாதிஸ்தர் அறையைப் போன்ற இடங்களிலிருந்து லோகஹிதர்களான பரம பாகவதர்கள் உண்டாயிருக்கின்றனர்.

‘குருவருளால் எந்த ருஷி ஒருவர் தமது முடிவு காலத்தில் வேறொன்றையும் சிந்திக்காமல் தனிமையாகக் காயத்ரி சென்றடையும் ஜகந்நாதரைத் தியானம் செய்துகொண்டு தம் தேஹத்தை நழுவவிடுகிறாரோ அவரே நன்றாக இறந்தவர். ‘எந்தக் குலபதி ஒருவன் தன் குடும்பம் சுற்றிநிற்க இயேசுகிறிஸ்து நாதர் நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டிறக்கிறானோ அவனே நன்றாக இறந்தவன்’ என்பர் மேனாட்டோர்.

கிருஷ்ணா! தைரியமாக இரு, பயப்படாதே, எங்கும் நிறைந்த பரம்பொருள் இருக்கிறார். அவர் சிதானந்த ரூபி. வியாதி மரணம் இவைகள் எல்லா தேஹத்தை மாத்திரம் ஒட்டியவைகளே என்பதை ஞாபகப்படுத்திக்கொள். இந்தத் தண்டனையால் பாபம் தீரும். நீ மேல்மேலும் விருத்தி அடைவது திண்ணம். நீ இறந்தால் இந்தச் சரீரம் போய் வேறு சரீரம் வரும். நீ பிரஹ்மஞானியாகிய பரிசுத்தனாகில் தேஹமே வாராது. ஸந்தேஹம் பயம் ஆகிய இவைகளை விட்டுவிடு. ஸந்தோஷமே மோக்ஷவாயில் காப்பவன் என்று சாஸ்திரம் கூறும். படுக்கையைச்சுற்றி நிற்பவர்களே! இறப்பவனைக் கவனித்துப்பார்த்து உலரும் உதடிக்குப் பால் வார்த்து வாருங்கள், அன்பு பாராட்டுங்கள், அவன் அங்கங்களைத் தாங்குங்கள், அகண்டத்தில் தாவி ஓடத்தயாராகும் அவனிடம் உங்கள் கருணை தெய்வத்தன்மை ஆகிய இவைகளைத் தங்கு தடையின்றிப்பாய்ந்தோடவிடுங்கள். நாம்அன்புபாராட்டியவர்களது கடைசி மொழி, பார்வைமுதலியன ஒருவித உத்தாரவுக்கு ஸமம். அவைகள் சாந்தமாயும் பரிசுத்தமாயும் இருக்கும். மரணநிலையில் இருப்பவைகள் அகண்ட வஸ்துவின் லக்ஷணத்தைச் சற்று அடைந்தேயிருக்கும். இறப்பவன் இவ்வாழ்க்கைக்கு அப்புறமிருந்து தன் அனுபவத்தைக் கூறுவதுபோலத் தோன்றும். அவன் கூறுவது ஓர் குறி, உத்தாரவு, தீர்மானம் ஆகிய இவைகளைப்போலக் காணப்படும். அவனுக்கும் அந்த ஸமயத்தில் அற்புத ஞானதிருஷ்டி வந்துவிட்டதாகத் தோன்றும். பிராணன் நீங்கி மயானம் அணுகுவதை உள்ளபடி உணரும் நிலை வருபவர்களுக்கு உண்மைப்பொருள் நிறைந்ததாயும், மறுக்கக் கூடாததாயும் உள்ளமொழிகள் தாமே வரும். இந்த ஸமயத்தில் அவன் உண்மை ஸ்வரூபம் நன்கு விளங்கும். உள்ளிருக்கும் பரம்பொருள் இக்காலத்தில் மறைந்து நிற்கவே மாட்டாது. ஆதலால் உங்கள் அன்பை வெளியிட்டுக்கருணையைக்காட்ட திரையுடன் இருங்கள்! இத்தருணம் தப்பினால் எத்தருணம் வாய்க்கும்?

வாஸுதேவசாஸ்திரி மாப்பிள்ளை பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்; அவனைப்பார்த்தார். தம்மை அறியாமல் கண்ணீர் ததும்பத் தொடங்கியது. அதைத் தமது வேதாந்தத்தால் அடக்கி அவனைக் கையால் அணைத்து, அவனுக்கு அமிருதம்போன்றிருந்த அன்பார்ந்த மொழிகளைக் கூறலுற்றார்:—

வாஸுதேவர்.—“பயப்படாதே! தேகமே இறப்பது, நாம் அல்ல, நாம் அழிவற்றவர். நமது கடவுட்டன்மையை ஞாபகப்படுத்திக்கொள்வோம். ‘உன்னுள்ளிருக்கும் பரமாத்மாவைச் சாகுந்தருணத்திலாவது நினை, உடனே நானேயாவாய்நீ,’ என்று கிருஷ்ணன் கூறவில்லையா? உன்னாலானவரையில் உன்மனதைப் பரமாத்மாவிடம்நிறுத்து. அநேகர் தினம் இறக்கவில்லையா? அவர்களுக்காக நாம் துக்கிக்கிறோமா? நம்மை மரணம் அணுகும்போதல்லவா நாம் பயந்து வருந்துகிறோம். இந்தக் கெட்ட குணத்திற்கு நமது துர் அகங்கார மமகாரமே காரணம்.

“ஸம் ஸப்தக யுத்தத்திலிருந்து அர்ச்சுனனும் கிருஷ்ண பரமாத்மாவும் பாரதயுத்தம் பதின்மூன்றாம் நாள் ஸாயங்காலம் திரும்பி வருகையில், அர்ச்சுனன் அபிமன்யூ இறந்ததைக்கேள்விப்பட்டால் தானும் இறப்பான் என்னும் எண்ணம் பகவானுக்கு வந்தது. உடனே வரும் வழியில் பகவான் தமது மாயாசக்தியால், அக்னியை வலம் வந்து தீயில் விழும் தருணமாக இருந்த ஒரு பிராஹ்மணன், அர்ச்சுனன் முன் தோன்றும்படி செய்தார். கணம் தப்பினால் மரணம்தான் ஏற்பட்டிருக்கும்! அதற்குள் கீதையில் தேர்ச்சி அடைந்த அர்ச்சுனன் அவனைக் காக்க ஓடிவந்து, ‘என்ன கஷ்டம்! இவ்வளவு வெறுப்பு உனக்கேன் வந்தது? தற்கொலை செய்துகொள்ளுவானேன்! பிராஹ்மணா! நீர் பெரியவராகவிருந்தும், இதைச் செய்யலாமா? உமக்காக என் ராஜ்யத்தில் பாதி தந்து விடுகிறேன், என் வஸ்துக்களில் எல்லாம் உமக்குப் பங்கு கொடுக்கிறேன்; இக்கொடிய தொழிலை மாத்திரம் நிறுத்திவிடும்’ என்று கொஞ்சிக் கேட்டுக்கொண்டான். பகவான் சிரித்தவண்ணமாகவே இருந்தார். பிராஹ்மணன், ‘நீ யார், என்னைத் தடுப்பதற்கு? உன் ஸொத்து, ராஜ்யம் எல்லாவற்றையும் நீயே வைத்துக்கொள், போகும்பொழுதும் எடுத்துக்கொண்டு வேண்டுமானாலும் போ. என் விஷயமோ வேறு. என் அருமைப்பிள்ளை ஒருவனிருந்தான், அவன் இறந்துவிட்டான். இனி நான் உயிர்வாழ்ந்து என்ன பயன்! நெருப்புத்தயாராகவிருக்கிறது; என்னை வீணாகத் தடுக்காதே’ என்று திடமாகக் கூறினான். அர்ச்சுனன் அவனைத் தன் வில்லால் பிடித்து இழுத்து வந்து, ‘பிராஹ்மணா! நீ என்ன கேட்டாலும் அதற்கு உடன்படுகிறேன். நீ இந்தப் பாபத்தை மாத்திரம் செய்யாதே’ என்று மன்றாடினான். ‘எல்லாம் ஸரி! வாய்க்கு எளிதுதான்! உன்பிள்ளை இறந்திருப்பானாயின், இந்தத் தீயுள் நீ இப்பொழுதே மூழ்கியிருக்கமாட்டாயா?’ என்று தயங்காது மறுமொழி கூற, பகவானும் ‘உண்மைதான், அவன் துக்கம் அவனுக்கன்றோ தெரியும். நாளை உன்பிள்ளை இறந்தால் தெரியும் செய்தி. நீயும் இப்படித்தான் செய்வாய்’ என்று ஒன்றும் அறியாதவர்போல பிராஹ்மணனுக்குப் பரிந்துகொண்டு வந்தார். ‘இல்லவே இல்லை. அப்படி நடக்கவே நடக்காது. என் பிள்ளை இறந்தால் என்ன. நான் இப்படியா செய்வேன்?’ என்று உறுதியாய்க் கூறினான் அர்ச்சுனன். அதற்குப் பகவான் ‘எல்லாம் வார்த்தை, அப்பா! வெறும் வார்த்தை! நடப்பது

வேறு !' என்று பரிஹாஸம் செய்தார். அப்பொழுது பிராஹ்மணன் 'என் துக்கம் எனக்கு. நீங்கள் பேசிக்கொண்டேயிருங்கள். உன் பிள்ளை இறந்தால் இப்படித்தானே செய்வாய்! என்னை இறக்கவிடுங்கள்' என்று துரைப்படுத்தினான். 'இல்லை, இல்லை. நான் இவ்வாறு செய்யவேமாட்டேன். நான் வாக்குக் கொடுக்கிறேன்! வேண்டுமானால் ஸத்தியமும் பண்ணுகிறேன்' என்று மிகுந்த பரபரப்புடன் கூறினான் தீர்க்கதரிசியான அர்ச்சுனன். 'பண்ணு ஸத்தியம் !' என்றான் பிராஹ்மணன். அர்ச்சுனன் தயங்காது காண்டீவத்தைக் கீழே போட்டான்; மூன்றுதரம் அதைத் தாண்டி ஸத்தியம் செய்தான். இது நடந்ததோ இல்லையோ மஹாமாயாவியான பகவான் அந்தத் தோற்றத்தை மறைக்க, அத்துடன் நெருப்பு பிராஹ்மணன் எல்லோரும் மறைந்தனர், ஸத்தியம்மாத்ரம் நின்றது. அர்ச்சுனன் கிருஷ்ணனை விழித்துப் பார்த்தான் ; பகவானும் அவனை ஏற இறங்கப்பார்த்து, அவனது அத்புதமான மமகாரமின்மைக்காக அவனை மெச்சிக்கொண்டார். ஏமாந்த அர்ச்சுனன், பாவம் ! தனது காண்டீவத்தை எடுத்துக்கொண்டு யுத்தகளம் வந்தான். அன்று மாலை சூரியாஸ்தமனம் வழக்கம்போல மிகச் சிறப்பாகத்தானிருந்தது. ஆனால் அபிமன்யுவின் ஆத்மாவும் உலகிலிருந்து அன்று அஸ்தமித்துப் பரமபதம் அடையப் புறப்பட்டது. இந்த ஸங்கதி அர்ச்சுனன் காதில் விழுந்ததும், காண்டீவத்தை எறிந்து தானும் விழுந்திறக்க ஓர் பெரிய எரி மூட்டச் சொன்னான். அப்பொழுது பகவான் முன்வந்து 'பேஷ்! ரொம்ப நன்றாகவிருக்கிறது. ஸத்தியத்தை மறந்து விட்டனையோ? பிராஹ்மணனுக்கு ஒருவிதம், க்ஷத்திரியனுக்கு ஒருவிதமோ? தனக்கென்றால் ஒன்று, பிறருக்கு வேறொன்றோ? இது நல்ல நியாயம்' என்று பரிஹாஸமாக ஸத்தியத்தை நினைப்பு மூட்ட, அர்ச்சுனன் அடங்கினான். துக்கத்தை வெளிக்காட்டாது அவன் அடக்கிவிடவேண்டி வந்தது. வாயைக்கையைத் திறக்கவில்லை, நீவளர் என்று கேட்கவுமில்லை, அர்ச்சுனன் பிராஹ்மணனைத் தேற்றி வேதாந்தம் பேசினான் ; தன்முறை வந்ததும், தன் துக்கத்தை அவனால் தாங்கமுடியவில்லை. காரணம் என்ன? அர்ச்சுனன் மமகாரங்கள் மாயவில்லை. அது தலைதூக்கி நின்றது. முடிவென்ன ?—பிராஹ்மணனுக்கென்றால் ஒருவழி தனக்கு வேறொருவழி என்பதுதானே. கீதசாஸ்த்திரம் கேட்டும் அவன் மனம் அடங்கவில்லை. பகவான் மாயையும் வேண்டியிருந்தது. இந்த அல்பமான மமகாரமே நமது துக்கங்கள் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணம்."

கிருஷ்ணன் இதைக் கேட்டுக்கொண்டு வரும்பொழுதே மாமனார் முகத்திலிருந்த சாந்தத்தைக் கண்ணுற்றான். தம் பெண்ணுக்கு வந்துவிடும் வைதவ்யத்தை எண்ணிக்கூட அவர் மனம் கலங்காதிருந்ததைக் கண்டு வியந்தான். சாஸ்திரிமாத்திரம் சும்மாவிருந்தாரா! அவர் பரவசமாகவிருந்து சாமாரியாகப் பொழியத் தொடங்கிவிட்டார். "என் தலையில் இப்பொழுதே இடி விழுந்துவிட்டதென்று வைத்துக்கொள்வோம். எனக்கு ஒருவித நஷ்டமுமில்லை! எனது என்பது இங்கு ஏதாவதிருந்தாலல்லவோ எனக்குத் துக்கம் வரும். அவ்வாறில்லாததால் நான் இதை ஒருபொருட்டாக மதியேன். நான் பரம்பொருளுடனேயே இருப்பதால் எனக்கு என்ன குறைதான்வரும்! அவர் ஸர்வாந்தர்யாமி 'பொய்வளரு நெஞ்சினர் காணாதகாட்சியே' ஒழிய மற்றெல்லோருக்கும் அவர் விளங்கி நிற்பார். ஆஹா! அவர் ஸந்நிதான விசேஷத்தை என்னென்று கூறுவேன்! என்ன சாந்தம்! என்ன ஜிலிஜிலிப்பு என்ன ஆனந்த அமைதி! என்ன ஸுகம்! அவரை உணர்ந்தவன் எவனால் அவரிடம் ஈடுபடாமலிருக்க முடியும்? மறைபடாப் பெருமை, மழுங்கா ஒளி, மாறா அன்பு, தெவிட்டா அமிருதமாகிய பரம்பொருளின் முன், பிரகாசிக்குஞ் சந்திரனது குளிர்ச்சி, மெதுவான ஆகாயத்தின் மௌனநிலை, ஆகிய இவைகள் எம்மாத்திரம். ஆஹா குழந்தாய் அதை ஒரு நிமிஷமேனும் அனுபவிக்கக்கிடைத்தால்—" என்று கூறி முடிக்கும் முன்னமேயே பேச்சு நின்றுவிட்டது, அவர் முகத்தில் ஒரு திவ்ய காந்தி தவழ்ந்து நடம் புரிந்தது. நிலவினும் இனியதாயும், மின்னலொளியின் மிகச் சிறப்பு வாய்ந்ததாயும் உள்ள ஜ்யோதியுடன்கூடிய அற்பு சாந்தம் ஒன்று அவர் மனத்தில் குடிகொண்டுவிட்டது.

ஒரு நிமிஷத்திற்குள் வாஸுதேவ சாஸ்த்திரி மாயமாய் பறந்து போய்விட்டார். நண்பர்களே ! அனர்த்தம் பண்ணிவிடாதேயுங்கள் ! அவர் தேஹம் அங்கேயேதான் இருந்தது ; எங்கும் போய்விடவில்லை. அவர் ஸமாதியிலாழ்ந்துவிட்டார். 'ஸர்வம் வாஸுதேவமயம் ஜகத்' என்றபடி அண்டபிண்ட சராசரங்களனைத்துமாகி நிற்கும் பரவாஸுதேவராகி நின்றுவிட்டார். சாஸ்த்திரி எங்கே என்று கேட்டீர்களே ! அவர் ஆகாயம், நக்ஷத்திரம், சந்திரன், ஜலம், வியாதியஸ்தன் அறை இவை முதலிய எவ்விடத்திலிருக்கிறார் என்று எண்ணமிடுகிறீர்களா? அவர் ஆணா, பெண்ணா, அலியா கல்லா தருவா? என்ற சங்கை பிறக்கும். அவர் எங்கும் நிறைந்திருந்தார் அரூபமே அவர் உருவமாகவிருந்தது. ஸர்வக்ஞத்வமே அவர் அறிவாகவிருந்தது. ஜகத்ஜ்யோதியே அவர் தேஜஸாகவிருந்தது. அவர் ஆத்துமா பரமாத்துமாவாக நின்றது. கற்பூரம் நெருப்புள் மறைவதை உற்றுநோக்கி இருக்கிறீர்களா? வெளிவரும் புகையைமாத்திரம் கவனியாதுவிடுங்கள், அதில் மிகுதியிருப்பதைக் கவனியுங்கள். கற்பூரம் நெருப்புள் கரைந்து கலப்பதுபோலச் சாஸ்திரி பரபிரஹ்மமாக மாறிவிட்டார். இவ்வளவுதான்! இதைத்தான் தாயுமானவரும்:—

'தானான தன்மயமே அல்லால் ஒன்றதைத் தலையெடுக்கவொட்டாது. தலைப்பட்டாங்கே போனாலும், கற்பூரம் தீபம்போலப் போய் ஒளிப்பதல்லாது புலம் வேறின்றாம்' என்று எடுத்துப் பாராட்டியிருக்கிறார்.

நிமிஷம்வரவர, ஐந்து, பத்து, பதினைந்தாகவளர்ந்து அரைமணியுமாயிற்று சாஸ்த்திரி அசைந்தாரில்லை. அப்பொழுது ஒருவரும் மூச்சுக்கூட விடவில்லை. அன்னம்

மான்கூட வாயை அடக்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அங்குக் குடிகொண்டிருந்த அமைதி ஒய்ந்துவரும் கிருஷ்ணனுக்கு வரம்பிலா ஆனந்தம் விளைவித்து, அவனை நிஷ்டைக்குள் முழுத்தியது.

கிருஷ்ணா! தைரியமாகவிரு. உன்னையறியாது உன் கண்ணில் நீர் வருகின்றனவே! யமன் வந்துவிட்டான்; நன்றாகத் தெரிகிறது. உனக்குச் சுவாஸம் தடைப்பட்டு வரத் தொடங்கிவிட்டது. ஊர்த்வசுவாஸம் எடுத்துவிட்டது. சாஸ்திரி மெதுவாகக் கண்விழிக்கிறார். உன்னைப் பார்க்கிறார். லீலாவினோதனான பரமாத்மா கிருஷ்ணனைப்பற்றி இடையறாது உன்னுடன் வசனிக்கிறாரே! அவர் வேணு, அவரிடமிருந்த கோபிகைகளது பக்தி இவைகளை நினைப்பு மூட்டுகிறார். உனக்கு என்ன குறை? சுவாஸம் குறைகின்றது. பின்னும் விடாது கோபிகைகளுக்குப் பகவான் பிரத்தியக்ஷமானதை எடுத்து விஸ்தரிக்கிறார்! அர்த்தங்கள் நிறைந்த அத்புத பிரணவமாம் ஓம் என்பதை உச்சரிக்கிறார். அது இவ்வாறு உன்னுள்ளிருக்கும் பரம்பொருளைக் குறிக்கிறது என்பதை வெளிப்படுத்தி உன்னைச் சொல்லச் சொல்லுகிறார். ‘ஓம்’ என்கிறாய். ‘நன்றாகச் சொல்’ என, ‘ஓம்’ என்கிறாய், மறுபடியும்’ என ‘ஓம்’ என்கிறாய். பினனர் அவர் இருந்த மௌனமே அவர் வாக்கைவிட நன்றாக அற்புதவிஷயங்களை உனக்குஉணர்த்தத்தொடங்கிவிட்டன. ‘கருதரிய சித்ஸபையில் ஆனந்த நிருத்தமிடும் கருணாகரக்கடவுளிடம்’ அவர் ஈடுபட்டு இரண்டறக் கலந்துநிற்கும் ஸமாதி உன்ஸம்சயத்தைப் பறக்கடித்து உன்னைத்தேற்றத்தொடங்கிவிட்டது. ஆயினும் நடுவே கடைசியாக லக்ஷ்மியைப்பார்க்கிறாய்! உடனே அழுது கொண்டு ‘அவளுக்குத் தாங்களேகதி, உலகில் அவளே என் அன்பைக் கொள்ளை கொண்டவள், கைவிடாதேயுங்கள்!’ என்று கூறுவதுபோல அவள் அருமைத் தந்தையை நோக்குகிறாய். உன் மனோபாவத்தை லக்ஷ்மி தெரிந்து கொண்டுவிட்டாள்! பாபம் அழுகிறாள். ஆயினும் பின்னர் உனக்கு வரும் ஸுகத்திற்கு அது எங்கே தடையாக ஏற்படுமோ என்ற அச்சத்துடன் முகத்தை மறைத்துக்கொள்ளுகிறாள், பாபம்! என்ன செய்வாள்! உன்துக்கத்தை உன்முழுபலத்தால் அடக்கிவிட்டு, மறுபடியும் சாந்தமாகத் தானாகவே ‘ஓம்’ என்கிறாய். அவ்வளவுதான், உடனே ஒருதரம் கிளம்பி கடைமூச்சாக ஒரு பெருமூச்சுவிட்டு லக்ஷ்மிபிதாவைக் கட்டிக்கொண்டு விட்டாய்! அவர்தான் உன் கடைசி ஸ்நேஹிதன்; அன்பார்ந்த அந்தணர் என்றால் அவர்க்கே தகும்; அவரைப்போன்ற திடமான ஆதாரமும் உண்டோ!

## விசேஷக் குறிப்புகள்

### NEWS & NOTES

**கத்தரிக்கப்பட்ட தலைமயிருடையவர்கள்.**—கத்தரிக்கப்பட்ட தலையையுடையவர்கள் கோயிலுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்று, கொச்சி ராஜா ஒரு கட்டளைப் பிறப்பித்திருக்கிறார்.

* * *

**விருதுப்பட்டி தென்காசி ரெயில்வே.**—தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியார் விருதுப்பட்டியிலிருந்து தென்காசிக்கு ரெயில் போடுவதற்கு ஸர்வே செய்யலாமென்று ஸிம்லாவிலிருந்து உத்திரவு பிறந்திருக்கிறது. இந்த லயனுக்கு விருதுப்பட்டி தென்காசி ரெயில்வே லயன் என்று பெயராகுமாம்.

* * *

**தேள் கொட்டுக்கு மருந்து.**—தேள் கொட்டின விடத்தில் படிகாரத்தை எலுமிச்சம்பழ ரஸத்தில் அரைத்துப் பற்றுப்போட்டு அதற்குச் சமீபத்தில் நெருப்புத்தணலைப் பிடித்தால் வலி நின்றுவிடுமென்று ஒருவர் எழுதுகிறார். சென்னை மெயில் பத்திரிகை கூறுவது என்னவென்றால் உள்ளிப்பூண்டின் தோலை எடுத்துவிட்டுப் பருப்பை அரைத்துக்கொட்டினவிடத்தில் பற்றுப் போட்டால் 10, 20, நிமிஷத்தில் வலி நின்றுபோய் விடுமாம். இரண்டாம்தரம் பற்றுப் போட்டால் அங்குப் புண்ணாய்விடுமாம். நட்டுவாக்காலி கொட்டினாலும் இந்தப் பற்றினால் குணப்படுமாம்.

* * *

**உருவத்தில் பெரிய மனிதன்.**—அமெரிக்கா கண்டத்தின் வடக்கிலுள்ள கனடா தேசத்தில் பிராஞ்சு ஜாதியானாகிய எட்வர்ட் பாவா என்பவன் 11-அடி உயரமுள்ளவனாயிருக்கிறானாம். அவனுக்கு வயது 30. அவன் நிறை 587-ராத்தல், அவன் கை 18-இஞ்சும், பாதம் 24-இஞ்சு நீளமும் 12-அங்குல அகலமும் இருக்கின்றனவாம். இவன் சிறு வயதுமுதல் சரீர விஷயத்தில் அதிக கவனத்தைச் செலுத்தி வந்ததால் எப்போதும் உற்சாகியாயிருக்கின்றானாம்.

* * *

**ஒரு வேடிக்கை.**—இங்கிலாந்து தேசத்தைச்சேர்ந்த கிலாஸ்ரஸ் என்னும் மாகாணத்திலுள்ள ஆடிங்டன் என்னும் பட்டணத்தில் வசிக்கும் ஓர் மாதுவிடம் நல்ல திடகாத்திரமுள்ள இரண்டு பசுக்களிருக்கின்றனவாம். சில தினங்களாகப் பால் குறைவாக இருந்தமையால் காரணம் அறியாத அம்மாதின் பால்காரன் மாடு மேயும் மைதானத்திற்குச் சென்று பார்த்ததில் ஒரு மாடு புல்லில் சுகமாகப் படுத்துக் கிடந்ததாம், படுத்துக்கிடந்த மாட்டுக்குச் சமீபத்தில் இரண்டு பெரிய பாம்புகள் அம்மாட்டின் மடியில் பால் குடித்துக் கொண்டு கிடந்தனவாம்.